


தேடாத
காதல்!
காஞ்சனா ஜெயதிலகர்
தேடாத
காதல்!

# தேடாத காதல்!



## 1

ரயில் விரைந்து கொண்டிருந்தது.

ஆனால் அந்த வேகம் தெரியாத அளவிற்கு உள்ளே சுக அலுங்கல்தான் - ஏ.ஸி.யின் இதமான அணைப்பு வேறு.

முதன் முதலாய் ரயில் ஏறியபோது நிமலாவிற்கு ஒன்பது வயது.

நெல்லையில் நடந்த ஒரு பாட்டு போட்டிக்காய், பள்ளியின் சக மாணவிகளோடு நேர்ந்த பயணம்.

அது முன் பதிவு செய்யப்படாத பகுதி. ஆக ஏக நெரிசல்.

மாணவிகள் முதலிலேயே ஜன்னலோர இருக்கை களைப் பிடித்து விட்டதால், ஐந்து நிமிடங்களுக்கு ஒரு

முறை தங்களில் ஒருவருக்கு அந்த இடங்களை விட்டுக் கொடுத்துக் கொண்டார்கள்.

மரம், குளம், வீடுகள், வயல்வெளி, சாலைகளை அசுரத் தனமாய் பின்னுக்குத் தள்ளியபடி சீறிப் போன அந்த ரயில் பயணம், முகத்தில் மோதிய குளிர் காற்று உள்பட நிமலாவை வெகு நாள் வரை பரவசப் படுத்தியிருந்தது.

இப்போது அதைவிட வெகு சௌகர்யமான பயணம். இரண்டாம் வகுப்பு ஏ.ஸி. பெட்டி. குளிருக்கு அடக்கமாய் கம்பளி போர்வையோடு கச்சிதமான தலையணை தந்திருந்தார்கள். இடிபிடி இல்லாமல் நீட்டி படுத்துக் கொள்ளலாம் - அல்லது தலைமாட்டிலிருந்த விளக்கை திறந்து வைததபடி வாசிக்கலாம். சக பயணிகள் யாரும் பேசவில்லை. மொபைல் போனில் பேசியவர்களும் அமர்த்தலான குரலையே பயன்படுத்தினார்கள்...

ஆக அனுபவித்து உறங்கலாம்.

ஆனால் நிமலாவிற்கு உறங்கும் எண்ணம் கூட இல்லை! இப்படி ஒரு பொருளைப் போல தன்னை ஏற்றி அனுப்பி விட்டார்களே என்ற ஆற்றாமை அழுத்தியது.

காலையில் நடந்ததை நினைத்துப் பார்க்கவும் அச்சமாயிருந்தது. தான் அநாதைதான் - ஏழையும் கூட. அதற்காகத் தன் சம்மதத்தை எதிர்பார்க்காமல்,

'உனக்கு மாசச் சம்பளமாய் பத்தாயிரம் தர்ரேன்'னு சொல்றார், நிமலா. அதிர்ஷ்டம் உனக்கு மட்டுமில்லை நம்ப விடுதிக்கும் அடிச்சிருக்கு பாரேன். ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாய் தர்ராராம் - 'ஆதரவற்ற பெண்களுக்கான மையமா? நல்ல சேவை'ன்னு நம்மைப் பாராட்டறவங்க பத்து காசை எடுத்துத் தர்ரதில்லையே?



ஆர்டருக்கு வந்த கைவேலை துணிகளை எல்லாம் உன் மூலம் நேரே சென்னைக்குக் கொடுத்து அனுப்பியது எவ்வளவு நல்லதாய் போனது - பாரேன். உனக்கு கை நிரம்ப சம்பளம், நம்ப விடுதிக்கு பெரிய நன்கொடை.'

தன் வாய் நிரம்ப இருந்த பெரிய பற்கள் அத்தனையும் காட்டினாள் வார்டன் தங்கம்மா!

''நா... நான் இங்கயே இருந்திடறேன் அக்கா. சென்னையில் நான் எங்கே தங்கறது? அங்கே எனக்கு யாரையும் தெரியாது...''

''அதெல்லாம் சிதம்பரம் சார் பொறுப்பாய் பார்த்துக்குவார். நீ போய் அவர் சொல்ற வேலையைப் பார்த்துட்டு சுகமாய் இருக்க வேண்டியதுதான்.''

தங்கமணியின் கண் சிமிட்டலில் இளையவளின் உடம்பு எரிந்தது.

'பெண்ணை ஒரு பொருள் போல, நடத்துவதால்தான் அத்தனை இன்னல்களும் வருகின்றன.' என்று பேரறிஞர் பெர்னாட்ஷா சொன்னதை தங்கமணி அறிய மாட்டாள். அப்படியே தெரிந்தாலும் இப்போது காசு அவள் கண்களைக் கட்டி விட்டது.

''நம் சென்டருக்கு மேலும் நாலு தையல் மெஷின் வாங்கிப் போடுவேன். பிள்ளைங்க படுக்கற அறைகளுக்கெல்லாம் ஃபேன் மாட்டிடலாம். குளியலுக்கு பெரிய சிமெண்ட் தொட்டி, கூடுதலாய் ரெண்டு டாய்லெட்... இங்கேருக்கற 40 பொண்டுகளும் உன் தயவில கொஞ்சம் சௌகர்யமாய் இருப்பாங்க. அந்தப் புண்ணியத்தை மறுக்கவாப் போற நீ?''

இன்னும் தன் பற்களை மூடாமல் தங்கமணி கொட்டிய வார்த்தை ஜாலத்தில் இவள் தடுமாறி நின்றாள்.

நிர்வாகிகளின் பேச்சிற்கு எதிர் பேச்சு கூடாது என்ற கண்டிப்புடன் இந்த ஆதரவற்ற பெண்களுக்கான விடுதியில் வளர்ந்திருந்த நிமலாவிற்கு மறுக்க நா புரளவில்லை.

தன்னை ஒரு பொருள் போல எண்ணி விலை பேசுபவன் ஒரு கயவன் என்றாலும் இந்தப் பெண் ஏன் அதற்கு உடந்தையாய் நிற்க வேண்டும்?

பொறுப்பாளர் தங்கமணியிடம் எதிர்த்துப் பேச முடியாதவள், உடன் வேலை பார்த்த தோழியிடம் குமுறினாள் -

''போன வாரம் நான் நம்ப பூ வேலை செய்த துணிகளை எல்லாம் கொண்டு போய் தந்த அந்த சென்னை ஆளின் பார்வை சரியில்லைன்னு சொன்னேனில்ல பானு? தப்பிச்சு வந்துட்டேன்னு நினைத்தால், அவன் விடாமல் துரத்தி என்னைப் பிடிச்சிடுவான் போல. எனக்கு பத்தாயிரம் சம்பளத்தில் வேலையாம் - நம்ப விடுதிக்கு லட்ச ரூபாய் நன்கொடையாம்... என்ன பண்றதுன்னு தெரியலை.''

''நமக்கு வேற போக்கிடம் கிடையாதே நிமி? ஆக பந்து போல இவங்க உருட்டி விடற இடத்துக்குப் போக வேண்டியதுதான்.''

''படுகுழியில் தள்ளிடறாங்களே? இதில் விழுந்தால் நா மீள முடியாது பானு.''

''அந்த ஆள் கல்யாணமானவன்னு சொன்னியே?''

''அது பணக்காரப் பொண்ணாம் -

'பார்க்க சகிக்கமாட்டாள். ஆனால் கண்ணுக்கு அழகான புருஷன் வேணும்னு என்னை வாங்கிட்டா'ன்னு எங்கிட்ட புலம்பினான்.



அவள் நடத்தும் பிரத்தியேக 'பொட்டிக்'கில் விற்பனை செய்யத்தான் நம்மிடம் ஆடைகள், விரிப்புகள்னு ஆர்டர் தந்திருக்காங்க.''

''அதையெல்லாம் தங்கமணியே எடுத்துட்டுப் போயிருக்கலாம். அந்த ஜொள்ளு பார்ட்டி, திரும்பியே பார்க்காமல் நம்ப வார்டனை பத்திரமாய் அனுப்பி வச்சிருப்பான்.'' அங்கலாய்த்தாள் சிநேகிதி.

''பார்க்க அம்சமாய் ஒருத்தி கொண்டு போனால்தான் பேரம் பேசாமல் வாங்கிக் கொள்வாங்கனு தங்கமணி சொல்லி என்னை அனுப்பினாங்க. தவிர வேறு சில கடைகளுக்கும் பேசி ஆர்டர் வாங்கினேன்.''

''இப்போ உன்னையே பார்சல் பண்ணச் சொல்லி ஆர்டர் பண்ணிட்டானே பயல்! என்ன பண்ணப் போறே?''

நிமலாவின் மனதுள் ஒரு திட்டம் பொறி தட்டியிருந்தது -

ஆனால் அதை யாரிடமும் அவள் பகிருவதாயில்லை.

இப்போது விலை பேசப்படுவது அவளது மானம்.

அதைத் தெளிவாகவே தங்கமணி சொல்லி விட்டாள்.

''அங்கே போய் நீ இப்படி முதுகு ஒடிய கிடந்து தைக்க வேணாம் நிமலா. மேம்போக்கான வேலைதான். குஷியான வாழ்வு - தயங்காம ஒத்துக்கோ - பிறகு நீயே எனக்கு நன்றி சொல்லுவே பாரு.''

''எனக்கு அப்படி... அங்க போகணும்னு தோணலைக்கா.''

''அப்ப எங்க போகறதுன்னு முடிவு பண்ணிக்கோ. எங்க முடிவை ஏற்க முடியாதுன்னால் நீ தொடர்ந்து இங்கே தங்கவும் முடியாது.''

பதில் கறாராய் வந்தது!

இவள் முகத்து அதிர்ச்சியை நோட்டமிட்டவள்,

''ஃப்ளைட் டிக்கெட் எடுத்து அனுப்பவானு பறக்கறாரு சிதம்பரம் சார். அவ்வளவு அவசரம்'' என்று குழைய, நிமலா அருவெறுப்பில் குறுகினாள்.

''இங்கே என் வேலைகள் எல்லாம் பிரிச்சு தந்துடணுமே. பிறகு ரயில் டிக்கெட்டிற்கு பதிவு பண்ணிடறேன்.''

''சமத்துப் பொண்ணு. புரிஞ்சுகிட்டே.... இனி பிழைச்சுக்குவே.'' என்று மறுபடி மொத்த பற்களையும் காட்டிய தங்கமணியிடமிருந்து அப்போதைக்கு தப்பின திருப்தியுடன்' தான் முழுதாக தப்பிக்கும் திட்டத்திற்குள் இறங்கினாள் இவள்.



## 2

பத்து நாட்களுக்கு முன்பு இவள் சென்னைக்குப் போக நேர்ந்தது பஸ்சில்தான். பிரமாண்டமான டிரங்க் பெட்டிகள் இரண்டு நிரம்ப, பூ வேலை செய்யப்பட்ட, ஆடை, துணி வகைகள் நீவி மடித்து நிரப்பிய பின் அவற்றை அவளால் அசைக்கக் கூட முடியவில்லை!

கைக்கு ஒன்றாய் இவற்றைத் தூக்கியபடி எப்படி பட்டணம் போய் சேர என்று திகைத்தவளிடம் வார்டன் தங்கம்மா,



''இங்க உன்னை ஏற்றி விட்டுடுவோம். பட்டணத்துல போர்டருங்க தாராளமாய் உண்டு! ஒரு ஆட்டோவில போட்டு நான் தர்ர விடுதி விலாசத்தைத் தேடிப் போய் சேரு. பதினோரு மணிக்கு சிதம்பரம் சார் கடைக்கு வேறு ஒரு ஆட்டோவில போய் சேரு - அவ்வளவுதான?'' என்றிருந்தாள்.

ஆனால் அதற்கு ஆன செலவில நிமலா மிரண்டே போனாள்! இந்தப் பெரிய பெட்டிகளை எந்த ஆட்டோவும் சுமக்க முன் வரவில்லை. டாக்ஸி கட்டணம் அசாத்தியமாய் பட்டாலும், நேரத்திற்குப் போய் சேர வேண்டியிருந்ததால் வேறு வழியுமில்லை.

ஆனால் 'பொட்டீக்' எனப்படும் அச்சிறு நவீன கடையின் முன் போய் இவள் இறங்கிய 15 நொடிகளில் கடையிலிருந்தவர், டாக்ஸிக்கான பணத்தைத் தந்து அனுப்பிவிட்டதோடு, பெட்டிகளையும் கடைக்குள் எடுத்துப் போக ஏற்பாடு செய்ததில் நிமலாவிற்கு பெரும் நிம்மதி!

'ஒரு நிமிஷம் உட்காருங்க' என்றவர் இவளுக்கு குளிர்ந்த பழச்சாறையும் அனுப்ப, வயிறு குளிர்ந்தது!

வேறு சில பிரத்தியேக கடைகளுக்கும் போய் ஆர்டர்களைப் பெற்றுக் கொண்டு நாளை மறுநாள் இவள் ஊர் திரும்ப வேண்டியதுதான்.

பெட்டியிலுள்ள துணி மொத்தத்தையும் இவர்களே முன்பு சொன்னபடி வாங்கிக் கொண்டால் பிரச்சினையில்லை, அல்லது மறுபடி அவற்றோடு ஊர்கோலம் போக நேரும்.

அந்தச் சிரமம் அவளுக்கு நேரவில்லை.

அத்தனையையும் மறுபேச்சின்றி எடுத்துக் கொண்டார்கள். பாதிப் பணத்திற்கான 'செக்' இவளுக்குத்

தரப்பட்டது. மற்றவை விற்க விற்க, அவற்றிற்கான பணம் தரப்படும் என்பதை விவரமாய் பேசி, அதை எழுத்திலும் குறித்து முடித்தபோது மணி இரண்டு.

கதர் வேட்டி சட்டையில் மிகப் பாந்தமாய் அனைத்திலும் அருகேயிருந்து உதவிய முதலாளி சிதம்பரம்,

'காலி டிரங்க் பெட்டிகள் இருக்கட்டும்மா. இங்கும், எனக்குத் தெரிஞ்ச சில கடைகளிலும் விற்காமல் ரெண்டு வருஷங்களுக்கு மேல் தேங்கி விட்ட துணிகளை அவற்றுள் இட்டு 'டிராவல்ஸ்' மூலம் பத்து நாட்களுக்குள் உங்க ஊருக்கு அனுப்பிடறேன்' என, தன்னையும் மீறி அவரைக் கைக்கூப்பி வணங்கினாள்!

விடுதியிலுள்ள பெண்களுக்கு வருஷத்துக்கு இருமுறை புதிது கிடைக்கும்.

இருந்தும் கல்லூரியில் படிப்பவர்களுக்கும் வேலைக்குப் போய் வருபவருக்கும் அது போதாது.

தினுசு தினுசாய் உடுத்தும் மற்றவர்களிடையே துவைத்து துவைத்து நைந்து வெளிறிய ஆடையில் நிற்பது. இவர்களை ஒதுக்கியே நிறுத்தும்.

இம்மாதிரியான பிரத்தியேக ஆடையகத்தில் உள்ளவை எல்லாமே உயர்ரகம். இங்கிருந்து கழிக்கப் படுபவை கூட தரமாகவே இருக்கும்... இந்த மனக்கணக்கு பெருக்கிய நன்றியில்,

''நான் சாப்பிடப் போறேன் - நீயும் எங்கூட வந்தால் சந்தோஷம்'' என்று சிதம்பரம் சார் தந்த அழைப்பை இவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை.

சிதம்பரத்தின் வயது நாற்பதுகளில் - நல்ல உயரமும் வெளுப்புமான உடல். அதற்குக் கண்ணியம் கூட்டிய



கதர் உடை. ஆக தயக்கமின்றி அவருடன் காரில் ஏறிப் போனாள்.

''ஊர் திரும்ப, டிக்கெட் வாங்கியாச்சாம்மா?''

''இல்லைங்க. சாப்பிட்டதும் பஸ் டிக்கெட் பதிவு பண்ணிடணும். பெட்டிகள் இல்லைங்கறதால் பிரச்சனையே இல்லை.''

''நாளை எந்தம்பி கன்னியாகுமரி போறதாய் இருந்தது. ஆனா முடியாம வேறு வேலையாயிடுச்சு. அந்த ரயில் டிக்கெட் இருக்குது - பேரை மாத்திட சொல்றேன். வசதியாய் போயேன்மா.''

இவளது உற்சாகம் கூடியது.

ஆறு, ரயில், யானை இவையெல்லாம் பார்க்க பார்க்க சலிக்காதவை அல்லவா?

ஆக ரயில் பயணத்திற்கும் தலையாட்டி வைத்தாள்.

அவர் அழைத்துச் சென்ற மேல் தட்டின் உணவகம், அம்மதிய வேளையிலும் மங்கலான குளுமையில் இருந்தது. அதன் ஆடம்பரத்தில் மிரண்டவள், தன்னிடம் உள்ளதிலேயே நல்ல புடவையில் இன்று இருந்ததிற்காய் திருப்தி பட்டுக் கொண்டாள்.

மெனு அட்டையிலிருந்த பெரும்பாலான பதார்த்தங்கள் இவள் கேள்விப்படாதவை.

அதில் குறிப்பிட்டிருந்த தண்டூர் - பிரியாணியின் விலை இவள் கட்டியிருந்த புடவையின் விலையை விட அதிகம்!

''எனக்கு நீங்களே ஏதேனும் சிம்பிளாய் ஆர்டர் பண்ணிடுங்க சார்'' என்று விட்டாள் மெல்லிய குரலில்.

விடுதியின் மலிவு உடைகளில் வளர்ந்தவள், தையல் கலையில் தேறி சம்பாதிக்க ஆரம்பிக்கவும்தான் ஓரளவு நேர்த்தியாய் உடுத்தியது. இருந்த மூன்று செட் நல்ல உடைகளுடன்தான் பயணப்பட்டிருந்தாள்.

இங்கு முன்புள்ள நைந்த உடையில் வர நேர்ந்திருந்தால்... இவளுக்கு அனுமதி மறுக்கப் பட்டிருக்கக் கூடும்!

ஆடை மனிதருக்குத் தரும் தெம்பும் தெளிவும் தனிதானே? இதோ சிதம்பரம் சார் அனுப்பப் போகும் உடைகள் தன் விடுதியின் 40 பெண்களுக்கு எவ்வளவோ பயனுள்ளதாய்...

ஓடிய நிமலாவின் நன்றி நினைவுகள் 'சட்'டென அறுபட்டது!

தன் பாதத்தை வருடி... நிமிண்டுவது எது... யார்? பதறி குனிந்தவளுக்கு எதுவும் புலப்படவில்லை! இத்தனை நாகரீக சூழலில் எலியும் பாச்சையும் ஓடித் திரியுமா என்ன? காலை பின்னுக்கு இழுத்தபடி குழப்பமாய் நிமிர்ந்தவளுக்கு, அதுவரை பாந்தமான புன்னகையுடனிருந்த சிதம்பரத்தின் முகம் அசட்டுத்தனமும் கபடமுமாய் தெரிந்தது!

அவர் கண்கள் இவளுடையதைக் கவனமாய் தவிர்த்தன! பரிமாறப்பட்ட உணவின் சுவை அசாத்தியமாய் இருந்தும் இவளுக்கு அது இறங்கவில்லை.

சிதம்பரம் பேசியதற்கும் காது கொடுக்கவில்லை.


அக்குளுமையிலும் உடம்பு வெந்து வியர்த்தது.

இவளது பதட்டம் புரிய, அவள் சொன்ன இடத்தில் இறக்கி விட்டவர், ''நாளை உன் ரயில் டிக்கெட்டுகளை இந்த விடுதியின் ரிசப்ஷனில் தந்துடுவாங்க'' என,



''இல்ல சார் - நான் பார்த்துக்கறேன்'' என்று மறுத்தாள்.

''மறுக்கக் கூடாதும்மா. பிறகு உன் ரெண்டு டிரங்க் பெட்டிகளையும் நீ கொண்டு வந்தது போலவே எடுத்துட்டுப் போக நேரும் - எப்படி வசதி?'' செல்லக் கண்டிப்புடன் சிதம்பரம் கிளம்ப, இவள் வாயடைத்து நின்றாள்!



## 3

இனி அந்த சிதம்பரத்தைத் தான் பார்க்க நேராது என்ற ஒரே நிம்மதிதான் அவளுக்கு.

ரயிலில் ஏ.ஸி. பகுதிக்குள் ஏறும் போதும் கூட நெருடியது. ஒருவேளை, கதர் வேட்டியும் கபட்டு சிரிப்புமாய் சிதம்பரம் தன்னோடு பயணிக்கத் திட்டமிடுகிறாரோ என்ற பதட்டம்...!

ஆனால் பயந்தது போல ஏதுமில்லை.

இவளது பகுதியின் எதிர் இருக்கையில் இருந்தது ஒரு பண்பான முதியவள். இவளுக்கு உடம்பெங்கும் பால் வார்க்கப்பட்ட உணர்வு.

நிம்மதியில் இவள் தந்த புன்னகைக்கு, பதிலாய் பரிவான முறுவல் வந்து நிமலாவை மேலும் ஆறுதல் படுத்தியது.

ஆனால் ஏதும் பேச மனமற்று, ஒரு பத்திரிகையை பிரித்து வைத்துக் கொண்டாள்.

உள்ளே மனம் விம்மியது.

தனக்கு பெரும் உறவுக் கூட்டமெல்லாம் வேண்டாம்; ஒரு தாயை மட்டும் கடவுள் விட்டு வைத்திருந்தால் இப்பொல்லாத உலகத்தை சமாளித்து விடலாம்!

தன் அச்சத்தை எல்லாம் பெற்றவளிடம் கொட்டிவிட, அன்னையின் பாசக் கைகள் அத்தனை பயத்தையும் வருடியே வழித்துப் போட்டிருக்கும்.

தன் தாயுடன் ஒரு வருஷம் வாழ்ந்ததிலேயே அலுத்து விட்டது போல தகப்பன் ஓடிவிட, நோய்வாய்ப்பட்ட தாயால் சமாளிக்க முடியாததால் விடுதி ஒன்றில் சேர்க்கப்பட்டவள் நிமலா.

சில வருடங்களில் தாய் இறந்த சேதி வர, இனி தனக்கு போக்கிடம் வேறு இல்லை என்பது புரிந்து அங்கேயே ஒடுங்கிக் கொண்டாள். பள்ளியில் கற்றுத் தரப்பட்ட ஆரம்ப தையலில் நிமலா காட்டிய திறமையை கவனித்த ஆசிரியை இவளுக்கு மேலும் நுணுக்கங்களைக் கற்றுத் தர, கல்லூரி பருவத்தின் போது மாறிய புது விடுதியில் தையலும், துணிகளில் செய்யப்படும் பூ வேலையும் ஒரு தொழிலாகவே கற்றுத் தந்தார்கள். செய் நேர்த்தியை விட நிமலாவின் கற்பனை அவள் தைப்பதை உடனுக்குடன் விற்றுத் தர, அங்கேயே சிறு சம்பளத்துடன் அவளுக்கு வேலையும் அமைந்தது.

'இருக்கற அழகு போதாதுன்னு இப்ப இவ கையில் காசுமில்ல புழங்குது?' என்று சக மாணவிகளின் பொறாமை இவளை நெட்டினாலும், எல்லாரிடமும் சுமுகமாகவே பழகினாள்.

தன் அழகு தனக்கு ஆனந்தத்தை விட ஆபத்தையே தரும் என்பது புரிந்து, தன்னைச் சுற்றி ஒரு அமைதி சுவரை எழுப்பி அதற்குள் சுருண்டு கொண்டாள்.



ஆனால் அதற்கும் விமர்சனம்தான்!

'பெரிய இடத்துப் பெண்ணாட்டம் 'பளிச்'சுனு இருக்கறதோட, கை வேலையும் தெரியுங்கற திமிரு - அதான் ஒதுங்கிப் போறா.'

இந்த குதர்க்க குற்றச்சாட்டையும் அவள் பொருட்படுத்தவில்லை.

இவர்களின் தயாரிப்பை 'ஸ்டால்' போட்டு விற்கப் போகும் இடங்களில் ஆண்களின் கூட்டம் இவர்களது கடையில்தான் அதிகம். பார்வைகள் முழுக்க இவளை மொய்த்தெடுக்கும்!

பெண்ணைப் போகப் பொருளாய் கருதும் இந்த உலகில், தேவைக்கு மீறிய அழகுடன் தன்னைப் படைத்தற்காய் கடவுளை பலமுறை குற்றஞ்சாட்டியவள்,

'படைத்தவர் எதையும் காரணமின்றி உருவாக்குவதில்லை' என்ற ஒரு பேச்சைக் கேட்டபின் பிறகு புலம்புவதில்லை!

'நண்டிற்கு ஏன் அத்தனை கால்கள் என்று நீங்கள் யோசித்ததுண்டா? நீர் வாழ் உயிரினத்தில் இதற்குத்தான் எதிரிகள் அதிகம். எதிரி, அதன் ஒரு காலைக் கவ்வ, நண்டு அதை உரித்து விட்டுத் தப்பிவிடும். மற்ற ஏழு கால்களின் உதவியால். அதனால் வேகமாகவே நகரவும் முடியும். அதிசயமான விஷயம் என்னவென்றால் சில நாட்களுக்குள்ளாகவே நண்டின் இழந்த கால் மறுபடி வளர்ந்து விடுவதுதான்!'

இப்போது எதிரியாய் மிரட்டிய சிதம்பரத்திடமிருந்து தான் எதையும் இழக்காமல் தப்பியது கடவுளின் அருள்...

அச்சத்தில் உதறிய உடலைக் குறுக்கியவள் படுக்க எண்ணி ரயிலில் தரப்பட்ட போர்வையை விரித்தாள். அதே சமயம் எழுந்த எதிர் இருக்கையின் முதியவர், தழைந்த அவரது புடவையில் தடுமாறி விழ இருக்க, அவசரமாய் எழுந்து - தாங்கிக் கொண்டாள். முதுமையில் இறுகிய மூட்டுகள் அவரை நேரே நிற்க விடவில்லை.

''நாலு அடி வச்சால் சரியாயிடும்'' என்றவர் சொன்னாலும் ரயிலின் குலுங்கலில் சமாளித்து நடப்பது அத்தனை எளிதாயில்லை. அவரது நெகிழ்ந்த புடவையை இழுத்து செருகி விட்ட நிமலா, அவர் தயக்கத்தைப் பொருட்படுத்தாமல் அவர் தோள்களைப் பற்றியபடி கழிப்பறைக்கு நடத்தினாள் -

''தூங்கின பின் எழுந்தால் மேலும் சிரமம்... அதான் இப்பவே...''

''எப்போ வேணுமானாலும் என்னை எழுப்புங்கம்மா. இப்ப டாய்லெட் கதவைத் தாழிடாதீங்க. நா வெளிய தான் நிற்கறேன்.''

மறுபடி பெரியவளை இருக்கைக்கு கூட்டி வந்து, படுக்க வைத்து, போர்த்தி விட, முதிய கைகள் இவளை வருடி நன்றி தெரிவித்தாள்.

''கரிசனையாய் உதவினேம்மா. 'காலம் கெட்டுக் கிடக்குது. போய் உதவினாலும் ஏதேனும் பழி வருது'-ன்னு மனுஷர் ஒதுங்கிக்கற காலம் இது. பிரியமாய் கைக் கொடுத்தே'' என்றவர் சொல்ல நிமலாவின் மனதினுள் சிதம்பரம் வந்து கபடமாய் கண் சிமிட்டினார்!

இவர்கள் சொல்வதும் முழுக்க பொய்யில்லையே...? உதவும் உத்தமர் போல நாடகமாடிய சிதம்பரம் இவளது



பாதங்களை நிமிண்டி, இவளது பதட்டத்தைப் பார்த்ததும் தன் அணுகுமுறையை மாற்றிக் கொண்டார்!

'என் மனைவி உன் அழகில், குணத்தில் கால்வாசி கூட இல்லை நிமலா. ஆனா நிறைய காசு. அது இல்லாமல் சிரமப்பட்டுட்டிருந்த நான், என் மாமனார் காட்டின ஆசை வலைக்குள் விழுந்திட்டேன். எனக்கு சொந்தமான வியாபாரம். என்னைப் போல் பார்வைக்கு அம்சமான பேரப் பிள்ளைகள் பிறக்கும்ன்றது அவரது கணக்கு... ஆனா அதில் என் வாழ்வு அம்சமாய் அமையலை. எனக்கு நிம்மதி மிச்சமாகலை' - என்று பேசி வீசிய தூண்டிலிலும் இவள் சிக்காமல் கிளம்பிவிட்டாள்.

வெளிப்பார்வைக்கு வனப்பாயிருந்து என்ன... இவரது உள்ளம் அத்திப் பழத்தினது போல உள்ளே புழு வைத்துப் போயிருக்கிறதே!

இதில் தன்னையும் சேர்த்து அழுகச் சொல்வதா - என்ற ஆத்திரம் இவள் முகத்தில் பொரிய சிதம்பரம் பம்மி விட்டார்.

கோழியின் மீது பஞ்சாரத்தைக் கவிழ்ப்பது போல பரிவு காட்டி பெண்களை ஆண்கள் மடக்கும் கதைகளையும் இவள் விடுதியில் கேட்டதுண்டு.

தன் தொழில் திறமைக்கு வெளியே நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பது நிமலாவிற்குத் தெரியும். ஆடம்பர தையலகங்களில் விலைக்கூடிய புடவைகளுக்கான ரவிக்கைகள் அதற்குச் சளைக்காத விலையில் தயாராவதைப் பார்த்திருந்தாள்.

வெளியே வேண்டிய பணம் கிடைக்கும்... ஆனால் பாதுகாப்பு?

அதற்கு அஞ்சிதான் இவள் விடுதியிலேயே ஒண்டியிருந்தது.

''உம் பேர் என்னம்மா?''

''நிமலா.''

''நன்றி நிமலா வயசான எனக்கு உடம்பில வேதனை. ஆனா பாவம் இளம் பெண்ணான உனக்கு மன வேதனை - ம்ம்?''

முதியவர் பரிவுடன் கேட்க, அவளையும் மீறி இளம் கண்கள் நீரால் நிரம்பி விட்டன...



# 4

ரயில் சிநேகம் சுலபமானது.

தங்கள் முன்னே நீண்டு கிடக்கும் பயணம்...

செய்வதற்கு வேறு வேலையேதுமற்ற நிர்விசாரம்...

வெகு அண்மையிலிருக்கும் இருக்கைகள்...

முக்கியமாய் இனி இந்த சக பயணியை நான் சந்திக்கப் போவதில்லை என்ற நிச்சயம்...

இவை அத்தனையும் சேர்ந்து இருவரிடையே பிணைப்பை சில நிமிடங்களில் ஏற்படுத்தி விடுகின்றன.

வழக்கமாய் பிறரிடம் பேசுவதைத் தவிர்க்கும் நிமலா, அந்த வித்தியாசமான இரவில் தன் வாழ்வை ஓரளவு சொல்ல, மூத்தவரும் தன் கதையை இயல்பாய் பகிர்ந்து கொண்டார்.



''நான் அஞ்சுகம். அதிகாலை நாலரைக்கெல்லாம் வரும் திண்டுக்கல் ஸ்டேஷனில் நா இறங்கணும். என்னைக் கூட்டிப் போக எம்பேரன் வருவான். ஊரை விட்டு ஒதுங்கிய பண்ணை வீட்டில் தான் என் மொத்த வாழ்வும்... அதாவது என் கல்யாணத்திற்குப் பிறகு...''

அவரின் சுவாரஸ்ய பேச்சு, நிமலா மனதிற்கு இதமாயிருக்க அதில் அமிழ்ந்தாள்.

''மலையடிவாரத்துல ரொம்ப அருமையான வீடு எங்களது -

வீட்டின் பின்னேயிருந்த மலையின் ஒரு பகுதியை விஸ்தரிப்புக்காய் வெட்டினபோது, கிடைத்த கல் அபூர்வமாய் தந்த பழுப்பில் இருந்ததாம்.''

''ம்ம்... அழகாய் இருந்திருக்கும்.''

''அதைக் கொண்டு என் மாமனார் கட்டிய வீட்டை, பலர் 'கல் வீடு'ன்ன, மாமா அதற்கு வைத்த பேர் 'தந்த பவனம்.' விதவிதமான மரங்களின் நடுவே இருக்கும் அப்பெரிய வீட்டில் இப்போ இருப்பது நானும் எம் பேரனும் மட்டுந்தான்டா. இது டவுனை விட்டு ஒதுங்கிய கிராமத்து பகுதி. ஆக என் பிள்ளைகளே முதலில் படிப்பிற்காகவும் பிறகு வேலைக்காகவும் பட்டினம் நோக்கிக் கிளம்பிட்டாங்க. அதற்கும் அடுத்தத் தலைமுறை பண்ணை வீடுன்னாலே மூக்கைச் சுளிக்குதுங்க. ஆனா அதிலிருந்து வரும் வருமானம் யாருக்கும் கசக்கலை.''

''வருமானம் வருமளவில் அதை யார் பராமரிக்கறது?''

''எம் பெரிய பேரன். பொறுப்பான பிள்ளை. நான் சொல்றதையெல்லாம் பொறுமையாய் கேட்கிறவனும் அவன்தான்.

'குளம் போனால் கிணறு தோண்டலாம்;

நிலம் போனால் என்ன பண்றது'ன்னு நான் சொன்னது அவனை பாதிச்சது. இப்பகூட குடும்பத்தாரே பாதி நிலத்தைக் கூறு போட்டு பிளாட்டாய் விற்கலாம், ஷாப்பிங் மால் எழுப்பலாம்னு சொல்றதை எல்லாம் அவன் காதில் ஏற்றிக்கறதில்லை. விவசாயத்தில் பெரும் லாபம் இல்லைன்னாலும் உலகின் பசி போக்கும் தொழில் இது. முப்பது நாற்பது குடும்பங்கள் நம்மோடு சேர்ந்து உழைத்துப் பிழைக்கின்றன. நம் பரம்பரை நிலத்தில் பாடுபட்டு, அதில் வெற்றியும் பெறுவது தனி திருப்தி என்பவன்.''

''ஆக அவர் உங்களுக்கு நல்ல துணை - இல்லையாம்மா?''

''அவன் அவன் வேலையில் மும்முரமாய் இருப்பான். வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் உண்டென்றாலும் அதை நிர்வகிக்க, பேச்சுத் துணைக்குன்னு எனக்கு ஒரு நல்ல பெண்... உன்னைப் போலன்னு வையேன், வந்துட்டால் குறை இல்லைதான். வேலை இல்லைன்னு பலர் குறைபட்டுக்கறாங்க. ஆனா உண்மையும் திறமையுமாய் உழைக்கத் தயார் என்றால் ஆளுக்கு நூறு வேலைங்க காத்திருக்குதே.''

பெரியவரின் பேச்சைக் கேட்டதிலேயே இளையவளுக்குத் தெம்பு ஊறியது.

''எம்மருமகளுக்குத் தையலில் ஈடுபாடு. எம்மகன் வெளிநாட்டிற்கு வேலைக்குப் போன சமயம் இவளுக்கு விசா கிடைக்கலை. மாசமாயும் இருந்ததால் ரெண்டு வருஷங்கள் என்னோடு இருந்த சமயம் எட்டு தையல் மெஷின்ஸ் வாங்கிப் போட்டு நம்ப பெண்களுக்குத் தைக்கக் கற்றுக் கொடுத்தா.''



''அது இருக்குமே 25 வருஷங்களுக்கு மேல்?''

''சரிதான். அது அவ ரெண்டாவது பையன் பிறந்த சமயம். குழந்தையோடு வெளிநாடு போனவ, அங்கேயே செட்டிலாயாச்சு. மூத்த பேரன் தான் அப்பவே, 'நான் பாட்டியோடுதான்'னு இங்கயே தன் படிப்பைத் தொடர்ந்தான். விடுமுறை சமயம் பறந்து போய் பெத்தவங்களைப் பார்த்துட்டு வர்றது.''

''ஆச்சரியம்தான். அங்குள்ள வாழ்வு முறையை பார்த்த பின்பும் இங்க வந்து விவசாயத்தை கவனிக்கறது... அவர்... உங்க பேரன் கல்லூரிப் படிப்பு... எங்கே படிச்சார்?''

கலகலவென சிரித்த முதியவள் எழுந்து, சற்று சாய்ந்தது போல உட்கார்ந்து கொண்டார்.

''ஒருவேளை அவனுக்குப் படிப்பு ஏறலையோன்னு ஒரு சந்தேகம் உனக்கு - அதுதானே? அவன் புத்திசாலிப் பிள்ளை - படிப்பாளியுந்தான். ஆனா நிலத்தின் மேலும் இந்தப் பாட்டியின் மேலும் பாசமுள்ளப் பிள்ளை.''

பெருமிதத்துடன் சொன்னார் அஞ்சுகம்.

அவரது கேலியில், சிரிப்பில் நிமலாவும் புன்னகைத்தாள்.

''அடடா... சின்னதாய் முறுவலிக்கும் போதே உன் அழகு அள்ளுது நிமலா. கலகலன்னு நீ பேசிச் சிரித்தால் அற்புதமாயிருக்கும்.''

''இந்தக் கொடுமையான உலகத்துல அது சாத்தியமில்லை -

சரியுமில்லம்மா...''

''உலக மக்கள் அத்தனை மோசம்னா சொல்ற? அந்தப் பத்திரிகையை எடுடா. அரை மணி நேரத்துக்கு முன்னே ஒரு அர்த்தமுள்ள கவிதையை அதில் வாசித்தேன்...'' என்றபடி பக்கங்களைப் புரட்டியவர் நிதானமாய் உரக்க வாசித்தார்.

'எல்லோரும்
எல்லோருக்கும் நல்லவரில்லை
கொலைகாரனுக்கும்
கொல்லப்பட்டவனுக்கும்
இருவேறு நியாயங்கள்
எடுக்கப்பட்டதற்கும்
கொடுக்கப்பட்டதற்கும்
ஏதோ ஒரு காரணம்!
எல்லா தீர்ப்புகளிலும்
ஒருவர் சிரிக்கிறார்
ஒருவர் அழுகிறார்.
நீங்கள்
மழையை ரசித்த தருணங்களில்
குடிசை இல்லாதவர்கள்
குளிரில் நடுங்குகிறார்கள்
உடம்பை விற்ற பணத்தில்
உடைகளும் வாங்கப்படுகின்றன.



எல்லோரும்
எல்லோருக்கும் நல்லவரில்லை.''

''நிஜந்தாம்மா... எழுதினவர் யார்?''

''தஞ்சை சூர்யானு ஒரு பேரன். இப்ப இந்த பேத்தியின் மனசு கொஞ்சம் சமாதானமாயிருக்கா? நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் உலகம், நாம, நம்ப வாழ்க்கை. ஒரேடியாய் சலிச்சுக்கக் கூடாதும்மா... அதுவும் உன் வயசில்.''

''நல்லதும்மா'' - நிம்லாவின் புன்னகை விரிந்தது.

''நல்லவங்களுக்கு வாழ்வு நல்லதாகவே போகும். என் துணைக்கு கடவுள் ஒரு பேரனை வைத்தது போல, உனக்கும் ஒரு ஏற்ற வாழ்வு அமைப்பார் ஆண்டவன்.''

''இப்போ என் சஞ்சலத்திற்கு மருந்தாய் உங்களை அனுப்பினது போல? ஒரு வேளை சிதம்பரம் என்னோடு பயணப் படுவாரோனு கூட திகிலாயிட்டேன்.''

''கற்பனை செய்து வேறு கலங்கணுமா? இது என் விலாச அட்டை. போன் நம்பரும் இருக்குது. தேவையின்போது என்னை நினைச்சுக் கூப்பிடு - என்னடா?''


மறுநாள் இவள் எழுந்த போதுதான், அதிகாலை அஞ்சுகம்மா இறங்கும்போது கூட தான் விழிக்கவில்லை, அவரிடம் முறையாய் விடைபெறவில்லை என்பதை உணர்ந்தாள். ஆனாலும் சில நாட்களுக்குள் அவர் குறிப்பிட்டது போல ஒரு தேவை ஏற்படும் என்று நினைக்கவேயில்லை.

விசித்திரமாய் எழுதிச் செல்லும் விதியின் கைகள் தன்னை அவரிடம் கூட்டிப் போகும் என்று கற்பனையும் கூடச் செய்யவில்லை.

ஆனால் விடுதிக்கு போய் சேர்ந்த ஒரே வாரத்தில் வார்டன் தங்கம்மா, தன்னை மறுபடி சென்னைக்கு, அதிலும் சிதம்பரத்திடம் அனுப்ப இருந்ததில், அவளது தவித்த புத்திக்கு பற்றுக்கோடாய் கிடைத்தது அச்சிறு விலாச அட்டைதான்!

நல்லூர் எனும் சிற்றூர். அழகிய பண்ணையின் நடுவே நிற்கும் தந்த பவனம். அங்கு பாசமும் புத்தி சாலித்தனமுமான பெரியம்மா. அவரது பாதுகாப்பில் இருந்தபடி தான் அங்கிருக்கும் பெண்களுக்கு தையல் கற்றுத் தந்து... கடவுள் தனக்கென்றே உருவாக்கிய இடமாய் அல்லவா தோன்றுகின்றது...?

இவர்களுக்கு 'செல்' பேசி வைத்திருக்க அனுமதி இல்லை. ஆக வெளியே தெரிந்த அண்ணாச்சி கடைக்குப் போய் அங்கிருந்து 'தந்த பவனத்'தின் எண்களை அழுத்தினாள் நிலா.



# 5

மறுமுனையின் 'பேசி' ஒலிக்க, இவள் மூச்சும் விடாமல் அது எடுக்கப்படுவதற்காய் காத்திருந்தாள்.

அஞ்சுகம்மாவே எடுத்து விட்டால் நல்லது.

தான் அவரிடம் வேலைக்கு வருவதாய் சொல்லி விட்டு நாளை மறுநாள் நள்ளிரவு தன்னை திண்டுக்கல் சந்திப்பில் வந்து அழைத்துப் போகவும் கேட்டுக் கொள்ளலாம்.



ஆனால் எடுத்து 'ஹலோ' என்றது ஒரு ஆணின் குரல்!

ஏமாற்றத்தை விழுங்கி விட்டு,

''அஞ்சுகம்மா இருக்காங்களா?'' சிறு குரலில் கேட்டாள்.

''வெளிநாடு போகணும்னு சொல்லிட்டு இருந்தாங்க!'' கேலியாய் பதில் வந்தது.

''நான் நிமலா...''

''நிர்மலா?''

''இல்லீங்க நிமலா. பெரியம்மாவோடு பத்து நாட்களுக்குள் முன்னே ரயிலில் வந்தேன். எனக்கு வேலை தர்ற தாய் சொன்னாங்க.''

''ஓ? வாக்-இன், போன் இன்டர்வ்யூ போல ட்ரெயின் இன்டர்வ்யூ நடந்ததாக்கும்?'' கேலியாய் கேட்டான்.

''நான் நாளையன்று அங்கே வர்றேன்னு சொல்லதான் கூப்பிட்டேன்.''

''உங்க வயசென்ன?''

''இருபத்து நாலு'' - வேறு வழியின்றி பதிலளித்தாள்.

''ரைட்.. முப்பது வயசுக்குட்பட்ட யாருன்னாலும் இங்கு வரலாம். மோஸ்ட் வெல்கம்.''

மறுபடி வந்த சிரிப்பு இவளைக் கலக்கியது. பெரியவர் சொன்ன, பொறுப்பும், படிப்பும், பிரியமுள்ள பேரனா இப்படிப் பேசுவது?

''நீங்க பெரியவங்களின் பேரன்தான?''

''யெஸ். நீங்க வர்றது திங்களன்றுதான?''

தான் வரும் ரயிலின் நேரத்தை ஒன்றுக்கு இரு முறை சொன்னவள், "அது நடுராத்திரி நேரங்கறதாலதான் உங்களுக்குச் சிரமம் தர நேர்ந்திடுச்சு... மன்னிக்கணும்."

"நோ ப்ராப்ளம்."

"உங்க பேர்?"

"பெரியவர்களின் பேரன். ரஜ்வின் ஸீ யூ!"

கலவையான உணர்வுடன் தொடர்பைத் துண்டித்தாள். பாசம், அஞ்சுகம்மாவின் கண்களைக் கட்டி விட்டது போலவே? பிரமாதமாய் அவர் சித்தரித்த அவரது பேரன் அத்தனை பெருமைக்கு உரியவனாய் தோன்றவில்லையே?

மறக்காமல் தன்னை வந்து கூட்டிப் போவாரா?

பாட்டியிடம் தகவலைச் சொல்லி இருப்பாரா? ஒரு ரயில் தொடர்பை நம்பி இங்கிருந்து கிளம்பலாமா?

புத்தி யோசனையில் அல்லாடியது...

ஆனால் இங்கிருப்பது தன் மானத்திற்கு ஆபத்து, என முடிவெடுத்து கிளம்பி விட்டாள்.

கிளம்பும்வரை 'இல்லத்'தில் இவளுக்கு ராஜ உபசாரம்!

"உனக்காய் கொத்து பரோட்டா வாங்கி வச்சிருக்கேன் நிமலா. சூடாய் இருக்கும்போதே ருசிச்சு சாப்பிடு. படுக்கும் முன்னே சமையல்காரம்மாட்ட உனக்குப் பாலும் தரச் சொல்லியிருக்கேன்."

ஆனால் கவலையால் நிரம்பியிருந்தவளுக்கு வேறேதும் இறங்கவில்லை.



'ஒரு பிரச்சனைக்குத் தீர்வு உண்டெனில் கவலைப் படத் தேவையில்லை;

ஆனால் அதற்குத் தீர்வு இல்லையெனில் கவலைப் படுவதில் அர்த்தமில்லை.' - என்பார்களே.

'திடும்'மென முளைத்த பிரச்சனைக்கான தீர்வை இவள் கண்டு அதைத் தன்னளவில் தீர்க்க முயற்சியும் எடுத்தாயிற்று.

இனி எதற்கு தவிப்பது?

சென்னைக்குப் போகும் ரயிலில் கிளம்பியிருந்தாலும், நடு வழியில்... அதாவது திண்டுக்கல்லில் இறங்கி அங்கிருந்து 'தந்த பவனம்' இருந்த சிறு கிராமத்திற்குப் போய் அடைக்கலம் புகப் போகிறாள். இறங்குவது நள்ளிரவு நேரம் என்பதால் கூட்டிப் போக யாரேனும் வர வேணும். வேடிக்கையும் விநோதமாயும் பேசிய அந்த ரஜ்வின் வராவிட்டாலும், தானே விலாசத்தை தேடிப் போய் சேர வேண்டியதுதான்...

திட்டம் தீட்டும் போதிருந்த துணிச்சல், நள்ளிரவு ஒரு புது நகரில் இறங்கி நின்றபோது காணாமல் போயிருந்தது.

இவள் இறங்கிய இடத்தில் அதிக வெளிச்சம் இல்லாததால், ஓட்டமும் நடையுமாய் தன் சொற்ப உடைமையுடன் ஸ்டேஷனின் மையப்பகுதியை அடைந்தவளின் கண்கள் பதட்டமாய் சுற்றின...

யாரைத் தேடுகிறோம் என்பதில் தெளிவில்லாத ஒரு அலசல்! மலைவாழைப்பழம், கற்கண்டு பாலின் விற்பனை மும்முரமாயிருந்தது.

ஓரளவு நாகரீக தோற்றத்திலிருந்த ஓரிரு இளைஞர்கள்,

யாருக்காகவும் காத்து நிற்பது போலில்லை.

தங்களது வேலைகளில் முனைந்திருந்தனர்.

தயங்கி நின்று, நகர்ந்த இவளைப் பல கண்கள் அளவிட்டதில், நத்தையாய் ஒடுங்கினாள்.

குளிர் காற்றில் உள்ளமும் நடுங்கியது.

நேரம் நகர, நகர தன்னை தடவிய பார்வைகளின் தகிப்பு கூடியதை உணர்ந்தவள், அடுத்து செய்ய வேண்டியதை யோசித்தாள்.

இந்த ஆபத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

சரியான உயரமும் அளவுகளுமான நிமலா பொன்னிறம். திருத்தமான முகமும் அடர்ந்த கூந்தலுமான அழகி.

ஆனால் பொலிவில்லாத பெண்ணாய் இருந்தாலும் இப்படி தனியே நின்று மலங்க விழிப்பது ஆபத்தை வரவேற்பது போலத்தானே? சித்த சுவாதீனமற்ற பெண்களையும் விடாமல் சின்னா பின்னப்படுத்தும் உலகமல்லவா இது?

தன்னைப் போல அநாதரவான பெண்கள் எல்லாம் ஔவையாரைப் போல முதுமை வரம் கேட்டுப் பிழைக்க வேண்டியதுதானா?

விழிகள் சிவந்த ஒருவன் இவளை நெருங்க, இவள் அங்கிருந்த காவல்துறை அலுவலகம் நோக்கி நகர்ந்தாள். அங்கிருந்த நாற்காலியில் அரைத் தூக்கத்தில் இருந்தவரை இவளது குரல் உலுக்கியது.

''ம்ம்...?''

''நல்லூர் போகணும் ஸர். ஆனா என்னைக் கூட்டிட்டு போறதாய் சொன்னவங்க வரலை...'' என்றவளை மேலும் கீழுமாய் பார்த்தவர் -



''செல் போன் இருக்குமில்ல - கூப்பிட்டுப் பாரும்மா'' என்றார்.

''இல்லீங்க ஸர். ஊரிலேருந்து அவங்களுக்குத் தகவல் தெரிவிச்சுட்டுதான் கிளம்பினேன்.''

''விலாசம் இருக்கா?''

இவள் நீட்டிய அட்டையை வெளிச்சம் படுமாறு தூக்கிப் பிடித்து வாசித்தவர் முக பாவனை மாறியது.

''நிரஞ்சன் ஸாரு வீட்டுக்கா?'' - மலர்ச்சியாய் விசாரித்தார்.

''என்னை வேலைக்கு வரச் சொன்னது அஞ்சுகம்மா...''

''இந்நேரம் அவுங்களை எல்லாம் தொந்தரவு செய்ய முடியாதும்மா. சற்று நேரமானாலும் பார்ப்போம். நீ இங்கயே இரு.''

விடிந்ததும் இங்கிருந்து போன் போட மறுமுனையில் அது அழைத்து ஓய்ந்தது -

எடுப்பாரில்லை.

''ஸர், எப்படியாச்சும் என்னை அங்க கொண்டு சேர்த்திட்டீங்கன்னா...''

''பத்து, பன்னெண்டு கிலோ மீட்டரம்மா. நானென்ன அனுமாரா? உன்னையத் தூக்கிக் கொண்டு போய் விட? ஆட்டோவைக் கேட்டு பார்க்கலாம். எனக்குத் தெரிஞ்ச வரை நிரஞ்சன் ஸர் பொறுப்பானவரு. எங்க இன்ஸ்பெக்டருக்கு ரொம்பப் பழக்கம்...'' பாதி தனக்குள் பேசியபடி தன் வேலைகளில் இருந்தார் அவர்.

"பொட்டப் பிள்ளைய வரச் சொல்லிட்டு கூட்டிப் போக வராமல் இருக்க மாட்டாரு..."

"அவர் என்னை வரச் சொல்லலைங்க... அவங்க பாட்டிதான்..."

'பேச்செல்லாம் தெளிவுதான்' என்பது போல ஒரு முறைப்பு விட்டவர் நகர. இவள் அங்கிருந்த இரும்பு நாற்காலியில் சரிந்தாள்.



# 6

'ஆசை இல்லாத முயற்சி அசட்டுத்தனமானது
முயற்சி இல்லாத ஆசை ஆபத்தானது!'

தனது இக்கட்டிலிருந்து தப்ப இவள் செய்த முயற்சி சரிதான்.

ஒரு கௌரவமான வாழ்வுக்கு ஆசைப்பட்டது தப்பில்லையே... ஆனால் இப்போது சிக்கியிருந்த நிலைமை ஆபத்தும் அசட்டுத்தனமுமாய் பட்டது.

ஆனால் இவள் உதவி கேட்ட போலீஸ்காரரின் கருணை இவளுக்கு உதவியது. தன் மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிரஞ்சனின் 'செல்' எண்ணை வாங்கியவர், ஒரு பெண் அவனுக்காய் காத்திருப்பதை தெரிவித்து விட்டார்!

"முகம் கழுவிட்டு, ஏதேனும் சாப்பிட்டுக்கம்மா. சார் வர்ரேனுக்கார்" என்றவர் தன் ட்யூட்டி முடித்துக் கிளம்ப,



வந்த மற்றொரு பெண் அதிகாரியைக் கண்டு சற்று தெம்பாகி காத்திருந்தாள் இவள்.

'இரவு உறங்காத அசதி அவளை அமுத்தி விட்டது.

'இதோ... இந்தப் பொண்ணுதான்' என்ற பேச்சில் திடுக்கிட்டு விழித்தாள். தன் முன் நின்றவனை தூக்கம் மிச்சமிருந்த விழிகளால் ஏறிட்டபோது மேலும் நிம்மதியானது.

கம்பீரமாய் நின்றவனின் கண்களில் கனிவு இருந்ததுதான் காரணம்!

"நீங்கதான் நிரஞ்சன் ஸாரா.. வணக்கம்."

"ம்ம்... நீங்க யார்னு தெரியலை."

அவசரமாய் தன் விளக்கத்தைச் சொன்னாள்.

"ரஜ்வினுக்கு விளையாட்டுப் புத்தி - அது வினையாகி இருக்குது." என்றான் பதிலுக்கு.

"அவர் யார்?"

"பெரியவர்களின் மற்றொரு பேரன்... ஆனா இப்ப முக்கியமான விஷயம் என்னன்னா..."

அவனது தயக்கம் இவளை மிரட்டியது!

"சொல்லுங்க ஸர்."

"பாட்டிம்மா இப்ப இங்க... அதாவது நல்லூரில் இல்லை."

வெலவெலத்துப் போனாள்.

"ஐயோ... என்ன... சொல்றீங்க?"

"வெளிநாட்டிலுள்ள அவங்க மருமகளுக்கு, அதாவது என் அம்மாக்கு கணுக்காலில் ஃப்ராக்சர் ஆக உதவிக்குப் போயிருக்காங்க."

''பத்து நாளுக்கு முன்னேதான் ஸர் பாத்தேன்.''

பரிதாபமாய் சொன்னாள்.

''அதற்குப் பிறகுதான் விபத்து நேர்ந்த தகவல் வந்தது. பாட்டிம்மாவிற்கு மல்ட்டிபிள் - விஸா இருப்பதால், உடனே ஆஸ்ட்ரியா கிளம்பிட்டாங்க.''

கேட்டவளுக்குக் கண்களை இருட்டியது. தனக்கு இப்படி ஓடி உதவ யாருமில்லாத திகைப்பு!

''இங்க எனக்குத் தெரிஞ்சவங்க உண்டு. அங்கே இருங்க; நான் முடிஞ்சளவு சீக்கிரமாய் உங்களுக்கான டிக்கெட் வாங்கி... நீங்க வந்திருப்பது நாகர்கோயில் பக்கமிருந்துதானே? அங்கே திரும்ப அனுப்பி வைக்கிறேன்.''

அறிமுகமற்ற தனக்கு இவன் இவ்வளவு செய்வதே அதிகம், என்பது புரிந்தாலும் அதுவரை போர்த்தியிருந்த தைரியம் 'சட்'டென நழுவி விட... நடுங்கும் தன் உதடுகளைக் கடித்து, பொங்கிய அழுகையை அடக்க முயன்றாள்.

''நா... நான் மறுபடி அங்க போக முடியாது ஸர்.''

நிரஞ்சனின் புருவங்கள் கூடி முடிச்சிட்டன.

'அது என் பிரச்சனை இல்லை' என்று விடுவானோ? போக்கிடமற்ற தெரு நாய் குட்டி கடும் மழையில் யார் வீட்டுத் திண்ணையிலோ ஒண்டியபடி அந்த வீட்டுக் காரரை கெஞ்சலாய் ஒரு பார்வை பார்க்குமே அதே போல அவனை ஏறிட்டாள் நிமலா.

''சரி. முதல்ல கிளம்புங்க'' என்றவன் இவளது பையை எடுத்தபடி நகர, பெருகிய நன்றியுடன் அவனைத் தொடர்ந்தாள்.



இவர்களின் கார் சத்தம் கேட்டு, வெளியே எட்டிப் பார்த்த பெண்ணின் வயது முப்பதுகளில் இருக்கும். மிடுக்கான தோற்றம்; சிநேகமான முகம் -

''வாங்க நிரஞ்சன். நேற்றே இங்கே டவுனில் உள்ள வேலைகளை முடிச்சிட்டதாய் சொன்னீங்களே?...'' வரவேற்றவளின் கண்கள் காரின் உள்ளே பரிதாபமாய் அமர்ந்திருந்த புதுப் பெண்ணைப் பார்த்து விட்டன.

நிரஞ்சன் சொன்ன விவரத்தை முழுக்க கேட்கும் முன்னே பிரியமாய் வந்து காரின் கதவைத் திறந்தாள்.

''உள்ளே வாம்மா. நான் ரஞ்சிதா - அதோ அந்த ரூமில் குளியலறையும் இருக்குது. குளிச்சுட்டு வா - சாப்பிட லாம்.''

அந்த வரவேற்பே நிமலாவிற்கு தெம்பு தந்தது.

குளித்து, தலை வாரி சீராய் வந்த நிமலாவிற்கு மிருதுவான தோசைகளோடு மணக்கும் மீன் குழம்பைப் பரிமாறியபடி,

''நிரஞ்சனுடைய பாட்டிம்மாட்ட பேசியாச்சு. அவங் களுக்கு உன் நிலைமையெல்லாம் தெரிஞ்சிருக்கே... ஆக உன்னை பத்திரமாய் பார்த்துக்க சொல்லியிருக் காங்க'' அறிவித்தாள் ரஞ்சிதா.

நன்றி மிக, நிமிர்ந்த நிமலாவிற்கு நிரஞ்சனின் முகத்தின் இறுக்கமும் தெரிந்தது.

ஆக அவனுக்கு இதில் ஒப்புதலில்லை!

''ஒரு பெண்ணிற்கு எத்தனையோ சிக்கல். மானமும் மரியாதையுமாய் இவ இருக்கணும்னால், யோசிக்காமல் இவளை தந்த பவனத்திலே இருக்க விடுங்க.'' என்று ரஞ்சிதா பரிந்துரைக்க,

''அங்க யார் பொறுப்பில் இவங்களை விடறது?'' சற்று அலுப்பாய் ரஞ்சிதாவை அதட்டினான் நிரஞ்சன்.

''நிமலாவின் பொறுப்பில் உங்க வீடு இருக்கட்டுங்கறேன்.''

''அங்குள்ள நிலமை... உனக்குத் தெரிஞ்சும்...''

''பாட்டிம்மா ஒரு மாதத்தில் நல்லூர் வந்திடுவாங்க... அதற்கு இடைப்பட்ட சமயம் பட்டு வருவாளே - பிறகென்ன?''

''ஓ...'' ஞாபகம் வந்தது போல நெற்றியை நீவினான்.

''மறந்தாச்சுல்ல? உங்க வேலையைத் தவிர மற்றதெல்லாம் மறந்திடுது... இந்நிலையில் அந்தச் சின்னப் பொண்ணு எப்படி பண்ணை வீட்டில் இருப்பா? நிமலாவும் இருந்தால் பிரச்சனையில்லை. சேர்ந்து தையல், சமையல்னு இருவருக்கும் பொழுது போகுமே?''

''பட்டுவை இங்க கூட்டிட்டு வரலாம்னு இருந்தேன். மூணு நாளில் வந்திடுவா.''

''நந்த பவனத்தின் இளவரசி அவ. இங்கே வந்து தள்ளினால்... அதை ஒத்துக்குவாளா?''

கண்ணைக் கட்டி, காட்டில் திரிய விட்ட நிலையிலிருந்தாள் நிமலா!

இந்தப் பட்டு யார்?

அப்பெண்ணைத் தன்னிடம் ஒப்படைக்கப் போகிறார்களா?

அஞ்சுகம்மா தன்னைப் பற்றி போனில் இவர்களிடம் என்ன சொன்னார்கள்?



சற்றைக்கெல்லாம் ரஞ்சிதாவோடு வாய்த்த தனிமையில் தன் சந்தேகங்களைக் கேட்டு விட்டாள்.

''நிரஞ்சனோட பாட்டிம்மாவுக்கு நீ அவங்களைத் தேடி வந்ததில் ரொம்ப திருப்தி, சந்தோஷம். மருமகளுக்கு உதவும் அவசரத்தில் இங்கே வீட்டை அப்படியே போட்டுட்டுக் கிளம்பிட்டேன். எல்லாம் அள்ளி இறைபடும். நிமலா பொறுப்பாய் வீட்டைப் பார்த்துக்குவா... முக்கியமாய் பட்டுக்கு...''

''மன்னிக்கணும். அவங்க யாரு?''

''நீ அவளை ஒருமையிலேயே கூப்பிட்டுக்கலாம். பத்மாக்கு பதினெட்டு கூட முடியலை. அஞ்சுகம்மாவின் மகள் வயிற்றுப் பேத்தி - அதாவது நிரஞ்சனின் அத்தை மகள்.''

''என்ன பண்றாங்க?''

''வட இந்தியாவில் பள்ளிப் படிப்பை முடிச்சிட்டா, கல்லூரி படிப்பு சென்னையிலதான்னு முடிவு பண்ணி அட்மிஷனும் ஆச்சு. அவளும் ஒரு விதத்தில் உன்னைப் போலத்தான் நிமலா. பட்டுவின் மூன்று வயசிலேயே அவங்கம்மா இறந்துட்டாங்க - ஒரு விபத்தில்! வட இந்தியாவிற்கு வேலைக்காக போன அவ அப்பாக்கு ஒரு குஜராத்திப் பெண்ணோடு பழக்கமாகி, அவங்களைக் கல்யாணம் செய்ததோடு பெண் வீட்டாரின் குடும்ப வியாபாரத்திலும் பங்கெடுத்ததில், அவர் தெற்கே வரதில்லை. பொறுப்பான தகப்பனாய் மகளைப் படிக்க வைத்தாலும், பட்டு விவரம் தெரியும் வரை அவ பாட்டியின் கைக்குள்ளே வளர்ந்தா, விடுமுறை சமயமெல்லாம் இங்கேதான். அப்போதுதான் அவளது பாஷை, பழக்க வழக்கமெல்

லாம் மறக்காதுன்னு அவங்க அப்பாவும் அதற்குத் தலை போட்டதில்லை...''

''அவங்களுக்கு வேற குழந்தைங்க...?''

''பிறந்ததால்தான் பட்டு தன் இஷ்டத்திற்கு இருக் முடியுது.''

சிரித்தாள் ரஞ்சிதா.

''சுமுகமான பழக்கம்னாலும், இங்கே பத்மா ஒரு இ வரசி... ஏகச் செல்லம். தான் இல்லாமல் பேத்தி எப் சமாளிப்பான்னு பெரியவங்க வருந்த, அதற்கு விடிவா நீ வந்து சேர்ந்துட்ட நிமலா. அவங்களுக்கும் திருப் உனக்கும் இது பாதுகாப்பான இடம்.''

மறுக்க திராணியோ தகுதியோ இன்றி நின்றிருந்தா இவள்.

'அங்குள்ள நிலைமை...' என்று நிரஞ்சன் ஏதே சொன்னாரே... அது என்ன? என்ற கேள்வி மனதுக்கு குடைந்தது.

இவளது தயக்கத்தைப் போக்கும் விதமாய் ரஞ்சித பேச, அதற்கான பதிலும் கிடைத்தது.

''பெரியவங்க இல்லாமல் நீ தனியே... அதாவ நிரஞ்சனின் வீட்டில் இருக்க நேருமேன்னு யோசிக்கவ வேண்டாம் நிமலா. அவர் வேலையில் மும்முரம். தவிர, மனைவியை இழந்த மூணு, மூணரை வருஷமா தன் பெயரைக் கெடுத்துக்காதவர். ஆக போய் நிம்ம யாய் இரு. நான் முடிஞ்சப்ப வர்றேன்...''

இவளுக்குள் 'நறுக்'கென ஒரு குத்தல்.

நிரஞ்சன் மனைவியை இழந்து வாழ்பவரா?



தன் மகள் இள வயதில் விபத்தில் பலியானதையோ, மிஞ்சி தன்னோடு தங்கிய பேரனின் வாழ்வும் கருகிப் போனதையோ அஞ்சுகம்மா தன்னிடம் மூச்சு விடவில்லையே?

தன் புலம்பல்களை வெகு பொறுமையாய் கேட்டவரின் வாழ்விலும்தான் பல பொத்தல்கள்...

ஒவ்வொரு வாழ்வு புத்தகத்திலும் பல பக்கங்கள் தாறுமாறாய் கிறுக்கப்பட்டவைதான் போல...

பெருமூச்சுடன் 'தந்த பவனம்' போக, தன் சம்மதத்தைச் சொன்னாள் நிமலா.



# 7

பிரதான சாலையிலிருந்து உள்ளடங்கிய 'நல்லூர்' இவள் நினைத்ததை விட சிறிய கிராமம் என்றால், 'தந்த பவனம்' இவளது எதிர்பார்த்ததை விட பிரமாண்டமும் பிரமாதமுமாய் நின்றது!

அவர்கள் வந்து சேர்ந்த பின்மதியப் பொழுதின் சாய்ந்த சூரிய ஒளியில் அப்பெரிய வீட்டின் சதுர கற்கள் தந்தம் போன்ற வழுவழுப்பில் மின்னின.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன் எழும்பிய வீடு, வெயில், மழையின் தாக்கங்களை மீறி தங்கம் போல ஜொலிப்பதை ஆச்சரியமாய் பார்த்தாள்.

அதைப் புரிந்து விளக்கமும் தந்தான் நிரஞ்சன்.

''எதையும் சரியாய் பராமரிக்கணும்னு நினைப்பேன். ஆக ஆஸிட் - வாஷ் தந்து கற்களைப் புதுப்பித்தேன். இதன் பழைய அழகைப் பார்த்த பாட்டிம்மாக்கு அத்தனை சந்தோஷம்.''

''மற்றபடி கற்கள் பாசமேறி கறுத்துக் கிடந்திருக்கும்.'' என்றவளின் கண்கள் மிரண்டன - மிக பலக்கக் கேட்ட நாயின் குரைப்பில்.

''நாய்ங்க இருக்கு போல?''

''இப்ப கட்டியிருக்கும். ஆறு மணிக்கு மேல் ரெண்டையும் அவிழ்த்து விடுவோம் - காவலுக்கு.''

''கடிக்கும் ரக நாய் போல?''

''புத்திசாலி ரகம். யாரைக் கடிக்கணும், விடணும்ங் கறது அதுகளுக்கு தெரியும்.'' - சற்று பெருமிதத்துட னேயே சொன்னான்.

இவளுக்காய் தரப்பட்ட அறையைப் பார்த்தவள் திகைத்து விட்டாள்.

இவளுக்கென்று தனி அறை!

இதுவரை இப்படியொரு வரம் அவளுக்கு வாய்த்ததில்லை.

அதிலும் வெங்காய நிற சுவர்களும், பாலைத் தேக்கியது போல பளபளத்த வெள்ளைத் தளமும்... அந்த அலங்காரம் அவளைக் கூச வைத்தது.

வசதியான மெத்தைக் கட்டில், இருக்கைகள், மெல்லிய திரைச் சீலைகள், கண்களை உறுத்தாத விளக்கு அமைப்பு, ஓவியங்கள் என்றிருந்த அறையை பரவசத்துடன் சுற்றி வந்தாள்.

இணைக்கப்பட்டிருந்த குளியல் அறை, இவளுக்கு இறக்கைகளை உருவாக்கியது... பறந்து விடுமளவிலான பரவசம்!



விடுதியிலிருந்த சொற்ப குளியலறைகளில் ஆளுக்கு மூன்று நிமிடங்கள்தான் குளிக்க அனுமதி.

அதற்குள் உடை களைந்து, குளித்து, துடைத்து, வேறு சுற்றியபடி வெளியேறிவிட வேணும்.

அல்லது தகரக் கதவு அறையப்படும் - அல்லது காதுகளைக் குடையும் ஏச்சுக்களை கேட்க நேரும்.

சற்று முன்பு வரை போக்கிடமற்று தவித்தவளுக்கு இது ராஜ வாழ்க்கை! கண்கள் கசிய கடவுளுக்கு நன்றி சொன்னாள். இவளது சிறு பையோடு ரஞ்சிதா தந்து விட்ட பெரிய துணி பண்டில்களும் இவள் அறையில் வைக்கப்பட்டிருந்தன.

ரயிலில் தான் சந்தித்த அஞ்சுகம்மா இந்தியாவிலேயே இல்லை என்றதும் இவளுக்கு மூச்சும் பேச்சும் அற்று தான் போயின.

இரண்டும் சீரானது பெரியவரின் குரலை போனில் கேட்ட பிறகுதான். இவளது நிலைமை புரிந்து ரஞ்சிதாதான் இணைப்பை ஏற்படுத்தி தந்தது.

''சந்தோஷம் நிமலா - நல்ல முடிவாய் எடுத்திருக்கே. இனி நிம்மதியாய் இருக்கப் போறேம்மா'' - என்று பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து அஞ்சுகமம்மா ஆறுதல் கூற, நிர்மலாவிற்கு விம்மத் தான் முடிந்தது - வார்த்தைகள் அத்தனையும் மறந்து போயின.

''உன் உடைமைகளை எல்லாம் எடுத்துட்டு வந் துட்டல்ல? இனி அந்த விடுதிக்குப் போக நேராதே?''

''உருப்படியாய் இருந்தது மூணு செட் புடவைம்மா எங்கம்மாவின் போட்டோ அவ்வளவுதான்'' என்றவள்

மற்ற விவரங்களையும் சொல்லி முடித்த பின் மனம் ஆசுவாசப்பட்டிருந்தது.

படுத்தவள் தூங்கியிருக்க வேண்டும்.

முகம் கழுவி வந்தவள் சாப்பிட வைத்த ரஞ்சிதா, இந்த துணி பண்டில்களைக் காட்டினாள்.

''இதெல்லாம் பெரியம்மா சொன்னதுபோல வாங்கிட்டு வந்திருக்கேன் நிமலா. இது முழுக்க பருத்தி துணி - கைக்குட்டை, உள்பாவாடைக்கானது. கம்மி விலையில் எடுத்தேன். முதலில் அங்குள்ள பெண்களுக்கு...''

''யாருக்கு?''

''பண்ணையில் வேலை பார்க்கும் பெண்கள் முன்பு தையல் கற்றுக்க ஆர்வமாய் இருந்து, ஏதோ பழகவும் செய்தாங்க போல...''

''பெரியவங்க தன் மருமகள் தையல் மெஷின் வாங்கிப் போட்டு, கிராமத்துப் பெண்களுக்குக் கற்றுத் தந்ததாய் சொன்னாங்க.''

''அந்த வேலையைத் தொடரணுமாம் நீ. இதில் ரவிக்கைத் துண்டுகள் இருக்குது - அவர்களுக்கு ஓரளவு தையல் பிடிபட்ட பிறகு ரவிக்கை வெட்டித் தைக்க சொல்லிக் கொடு.''

''நல்லதுங்க.''

''இந்தப் பையில் நாலு புடவையும், அதற்குப் பொருத்தமான உள்ளாடைகளும் இருக்குது. இது நான் வாங்கி கட்டாமலேயே வைத்திருக்கும் க்ரேப் சில்க். அஞ்சு கிலோ குறைஞ்ச பிறகு கட்டலாம்னு நினைச்சு வைத்தது...'' வருத்தமாய் உதடு பிதுக்கினாள் ரஞ்சிதா. இவள் மீது அதை இட்டு அழகு பார்த்தாள் -

''உனக்குப் பொருந்தும்...''

''ஐயோ... எதுக்குங்க?''



''உஷ்... மறுத்துப் பேசக்கூடாது. உன்னையும் கூட்டிட்டுப் போய் வாங்கியிருக்கலாம். அசந்து படுத்திருந்தே. இன்னொரு தரம் நாம சேர்ந்து ஷாப்பிங் போகலாம். அநாவசிய கேள்வி, பேச்சுக்களைத் தவிர்க்க வீட்டில், ஊரில் உன்னை தன் தூரத்து சொந்தம்னு பெரியம்மா அறிமுகப் படுத்தச் சொல்லியிருக்காங்க. அதற்கேற்றது போல உடுத்தி, 'பளிச்'னு நீ இருக்க வேண்டாமா? அங்கே போய் வீட்டைச் சீர்படுத்தி, அன்றாடம் நடத்தி, தையல் கிளாஸையும் ஆரம்பிச்சுட்டியானால் பிறகு உனக்கு எதைப் பற்றியும் யோசிக்க நேரமிருக்காது. பவுடர், சோப், க்ரீம் கூட வச்சிருக்கேன்.''

''ஐய்யோ... இத்தனைக்கும் காசு?''

''நிரஞ்சனின் 'கார்ட்'தான்! பாட்டியின் சொல் அவருக்கு வேதமாச்சே. அவங்களும் சீக்கிரமே ஆஸ்ட்ரியாவிலிருந்து வந்திடுவாங்கன்னு நினைக்கறேன். குரல்ல அத்தனை உற்சாகம்!''

இதெல்லாம் இன்று காலையில்தானா நடந்தது?

தன் வாழ்வு புரட்டிப் போட்டாற்போலல்லவா மாறிப் போனது?

மாளிகைப் போலுள்ள இந்த வீட்டைப் பார்க்கவும் தான் புரிகிறது - இங்கு தான் நைந்த உடையில் நசுங்கலாய் உலவ முடியாது!

தன் உடைகளுக்கான பணத்தைத் தன் சம்பளத்திலிருந்து கழிக்கச் சொல்ல வேணும்...

ஆனால் இத்தனை பாதுகாப்பான, ராஜ வாழ்க்கை வாழ அவர்களிடமிருந்து சம்பளம் வேறு தான் எதிர்பார்த்தால்... பெரும் பாவமல்லவா அது?

வீட்டின் வெளிப்புறம் நன்கு பராமரிக்கப்பட்டிருந்தாலும், உள்ளே அத்தனை நறுவிசாயில்லை. ஆக அதிலிருந்து தான் வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

'துர்நாற்றத்தைத் தொடர்ந்தால் சாக்கடைக்கும்

வாசனையைத் தொடர்ந்தால் பூக்கடைக்கும் செல்லலாம்'

என்பார்களே - அது எத்தனை சரி.

சிதம்பரத்தின் அழைப்பை ஏற்றிருந்தால் தன் வாழ்வு நாறிப் போயிருக்கும். பூக்கடைக்கு வந்தாகி விட்டது. இதை தன்னால் முடிந்தவரை அம்சமாக்க வேண்டும் என்று முடிவு செய்தவள், தன் உடைமைகளை அடுக்கி வைத்த பின் கீழே இறங்கினாள்.

படியிறங்கும் போதே கீழே பேச்சுக்குரல்... யாரும் விருந்தாடி வந்திருக்கிறார்களோ?

'தயங்கி நிற்க, கூடவே நாய்களின் சன்னக் குரைப்பும் கேட்டது. மேலும் இறங்கியவளை அக்காட்சி, சித்திரம் போல ஈர்த்தது. உயரமும் வனப்புமான இரு உயர்ஜாதி நாய்கள் தங்கள் அடர்ந்த வால்களை சாமரமாய் ஆட்டியபடி, அமர்ந்திருந்த நிரஞ்சனைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவன் கைகளைக் கௌவுவதும், முகத்தை எம்பி முகர்ந்து செல்லமாய் முணங்குவதுமாய்...

''இன்னும் எவ்வளவு நேரம் என்னையே கவனிக்கப் போறீங்க? காவல் வேலையை பிறகு யார் பார்க்கறது?'' நிரஞ்சன் அவற்றைப் போலியாய் அதட்டிக் கொஞ்ச, இவளுக்குத் தொண்டை இறுகியது.

குழந்தையாய் இருந்த போதும் தான் யார் மீதும் இப்படி விழுந்து மகிழ்ந்ததில்லை. யாரும் இவளை அள்ளிச் சீராட்டியதுமில்லை.



இப்பிராணிகளுக்கான கவனிப்பு அவற்றைப் பார்க்கும் போதே தெரிந்தது.

அவற்றைத் தொட்டுத் தடவும் ஆவலுடன் இவள் இறங்க, காலடிச் சத்தம் கேட்டு அவை விறைத்துத் திரும்பின.

நிரஞ்சன் அவற்றின் காலரைப் பற்றிக் கொண்டான்.

''கொயட் டிம்மி அன்ட் டானா.''

அவன் உத்தரவிட, இவளை அமைதியாய் முறைத்தன.

ரோமம் அடர்ந்த ஜாதி நாய்கள். ஒன்று ஆழ்ந்த தேன் நிறத்தில் இருக்க, மற்றது பொன்னிறம். அதே நிற கோலிக் குண்டு கண்கள் இவளை அளவிட்டன.

இவள் ஆவலாய் நெருங்க, இரண்டுமே மேல் உதட்டை உயர்த்தி உறுமின. கூரிய பல்வரிசையில் மிரண்டு பின் வாங்கினாள்.

''நோ'' அவன் அதட்டலுக்குக் கட்டப்பட்டு வாயை மூடினாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டன.

''ஜாதி நாய்கள் புது ஆட்களிடம் லேசில் பழகாது.''

நிரஞ்சன் சொல்ல, இவள் ஏக்கமாய் அவற்றைப் பார்த்தாள்.



# 8

இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 914 பெண்களே இருப்பதாய் சொல்கிறது புள்ளிவிவரம்.

பெண்ணென்று தெரிய, கருவையே கலைத்து விடும் பாதகத்தால் நேர்ந்த வித்தியாசம் இது.

பாதகத்திற்கான காரணம் பெண்ணிற்குத் தர வேண்டிய வரதட்சணை பற்றிய பயம்.

பிஹாரின் தஹ்ரா எனும் கிராமம் இந்த விஷயத்தில் ஒரு முன்னோடி. அங்கே பெண் பிறக்க, உடனே அவள் பெயரில் பத்து மாமரக் கன்றுகள் நடப்பட்டு விடும். இருபது வருஷங்களில் அதன் பழங்களை விற்று சேர்த்த காசில் குறையின்றி அப்பெண்ணின் கல்யாணம் சீர் செனத்தியோடு நடக்கும்.

அது நல்ல திட்டமென்று பட்டாலும் நட்டு வளர்க்க, கையகல நிலமேனும் வேண்டுமே. அதுவும் இல்லாத பெண்களுக்குப் பெரும் பலம், கைத்தொழில் என்று புரிந்த நிமலா, தனக்குத் தெரிந்ததை பிற பெண்களுக்கு சிரத்தையுடனேயே கற்றுத் தந்தாள்.

முதலில் கைக்குக் கிடைத்த கந்தல் துணிகளை ஓரம் தைக்கவும், வெட்டவும் பழக்கியவள், ஐந்தாம் நாளே அவர்களின் முன்பு புதுத் துணிகளை எடுத்துப் போட்டாள்.

முதலில் வந்த நான்கு பெண்கள், ஆளுக்கு மேலும் இரண்டு பேரை கூட்டி வர, யாருக்கு எதைக் கற்றுத் தருவது என்பதில் திணறல் ஏற்பட்டது.

முதல் செட் காலையிலும், புது செட் மாலையிலும் வந்து பயிலுவது என்று பிரித்தவள், மற்ற நேரத்தில் வீட்டு நிர்வாகத்தையும் கவனித்தாள்.

'அங்கே, 'பாட்டிம்மா இல்லாததால் சென்னையிலுள்ள என் தோழி வீட்டில் ரெண்டு நாள் இருந்துட்டு வர்றேன்' என்று பத்மா தகவல் அனுப்பியதும் நிமலாவிற்கு வசதியாகவே போனது.



பின்புற அறைகளில் கிடந்த தோதகத்தி நாற்காலிகளைத் துடைத்து வரவேற்பறையில் அம்சமாய் இட்டு, அதன் அமைப்பை மாற்றினாள். பத்மாவிற்குப் பிடித்த பலகாரங்கள் தயாராயின.

சற்று அலட்சியமாய் விடப்பட்டிருந்த தோட்டம் சில நாட்களில் கண்ணைப் பறித்தது.

அன்று பத்மா வரப் போகிறாள்... என்ற பதட்டத்தில் நிமலாவிற்கு தூக்கம் கூட பிடிக்கவில்லை.

உயர்மட்டப் பெண்ணான அவளும்... டிம்பி, டானாவைப் போல தன்னிடம் பட்டும், படாமல் தான் நிற்பாளோ?

சாதாரண பண்ணைப் பெண்களைப் போல வந்து தன்னிடம் தையல் கற்றுக் கொள்வாள் என்று எதிர்பார்ப்பது பேராசை.

பார்க்க கௌரவமாய் இருக்க வேண்டி, ரஞ்சிதா வாங்கித் தந்திருந்த தளிர் பச்சை ஜார்ஜெட் புடவையை இன்று கட்டிக் கொண்டிருந்தாள். பொருத்தமான புது ரவிக்கை.

காலை வகுப்பிற்கு வந்த பெண்களின் பார்வையே நிமலாவைப் பாராட்டியது -

''ஜோராய் இருக்கீங்கம்மா. இதே போல நாங்களும் சட்டை தைச்சு போட்டுக்குவோமா?''

''நிச்சயமாய். புதுக் கைக்குட்டைக்கான ஓரங்களை ஓரளவு கச்சிதமாய் போட்டிருக்கீங்க. இன்று அதில் பூ வேலை போடக் கற்றுத் தரப் போறேன்.''

ஏற்கெனவே இருந்த எம்பிராய்டரி நூல்களைப் பிரித்து, பூ வேலையை ஆரம்பித்து விட்ட போது

வெளியே நாய்களின் உற்சாகக் குரல் கேட்டது. இச்சில நாட்களிலேயே அவற்றின் பாஷை இவளுக்குப் புரிபட ஆரம்பித்திருந்தது.

ஆக பத்மாதான் வந்திருப்பாள். மதுரைக்கு விமானம் மூலம் வந்திறங்கியவள் இங்கு கார் மூலம் வந்து சேர்ந்திருக்கிறாள். கார் கதவுகள் திறக்கும் சத்தத்தில், ஜன்னல் வழியே பார்வையால் துழாவினாள் -

வந்து இறங்கிய இளம் பெண், நடுத்தர உயரத்தில் ஒடிசலாய் இருந்தாள். தன்னைச் சுற்றி வந்த நாய்களை வாஞ்சையுடன் தடவியவளின் சிரிப்பு, அவளது பாட்டி அஞ்சுகம்மாளை ஒத்திருந்ததோ?

ஆர்வத்துடன் வெளி வராந்தாவிற்கு நடந்தாள் நிமலா. கலையாத தன் கூந்தலை நீவிக் கொண்டவள் வரும் விருந்தாளி தன்னைப் பார்க்கும் இடமாய் தேடி மரியாதையாய் நின்றாள்.

'வாங்க பட்டும்மா' என்று பாசமாய் விளித்து, தன்னுடன் நடந்த வேலைக்காரர்கள் சூழ, வீட்டை நோக்கி நடந்த பத்மாவின் கண்கள், தந்த நிற முரட்டு கட்டிடத்தின் முகப்பில், முளைத்த தளிர் செடிபோல பசுமையாய் நின்றவளை உறுத்தன.

''அவங்க நிமலா பாட்டிம்மா சொல்லியிருப்பாங்களே?'' என்ற நிரஞ்சனின் அறிமுகத்தை ஒதுக்கி விட்டு வேகமாய் நடந்த பத்மாவின் குரல் உயர்ந்து கிரீச்சிட்டது.

''பாட்டிம்மா, என்னை ஏமாற்றிட்டாங்க, நிருத்தான்.''

அதுவரைத் தயங்கித் தளர்ந்திருந்த நிமலாவின் கால்கள், இப்போது தாழ்வாரத்தின் தூண்களில் ஒன்று போல இறுகின.



அசையக் கூடாத ஒரு சிலை போல நின்றிருந்தாள்!

மேலும் தீவிரமான பார்வையுடன் இவளை நெருங்கிய பத்மா,

''உங்களை ரயிலில் சந்திச்சது பற்றி நீட்டி முழக்கினாங்க. உங்க உதவும் குணம், பொறுமை பற்றியெல்லாம் சொன்னவங்க, நீங்க இத்தனை அழகுன்னு சொல்லலியே... ச்சீட்டிங்!'' உதட்டைச் சுழித்தாள்.

வந்தது பழியா, பாராட்டா என்பது புரியாததால் எவ்வித பாவனையும் காட்டத் துணியாமல் இன்னும் சிலையாகவே இருந்தாள் நிமலா!

பல பிரச்சனைகளை தனக்குக் கொண்டு சேர்த்த அழகை இவள் எப்போதுமே கொண்டாடியதில்லை. இப்போது வந்த பத்மாவும் இந்த அழகில் எரிச்சலாகி ஒதுங்கி விடுவாளோ என்று புதுக் கலக்கமும் சேர, புன்னகைக்கக் கூட முடியாத நிலை!

''ரஜ்வின் அத்தானும் உன்னிடம் போனில்தான் பேசியதாய் பாட்டிம்மா சொன்னாங்க. ஆக உங்க அழகு அவங்கக் கண்ணில் பட்டிருக்காது. ஆனா வரும் வழியில் நிருத்தான் கூட எங்கிட்ட சொல்லலியே?''

''நான் எதைச் சொல்லலை?'' காரைப் பூட்டிவிட்டு வந்த நிரஞ்சன் கேட்க, நிமலாவிற்கு மேலும் உதறியது!

''இந்த அக்கா இவ்வளவு அழகுன்றதை... நீங்களும் ஏன் எங்கிட்ட சொல்லலை?''

அழுத்தமாய் வந்த கேள்வியில் சற்று திகைத்தவன், பின் சமாளித்துச் சிரித்தான்!

அந்த அசட்டுச் சிரிப்பின் ஊடாக, நிமலா முதன் முதலில் வாய் திறந்தாள் -

"நீ கூடத்தான் அழகாய் இருக்கே பத்மா. அதையும்தான் என்னிடம் யாரும் குறிப்பிட்டுச் சொல்லலியே?"

இதுவரை பதுமைப் போலிருந்தவள் வாய் திறந்து பேசிய முதல் வார்த்தையே தனக்குப் பாராட்டுப் படிக்க, 18 வயதும் நிரம்பாத பத்மா குளிர்ந்து போனாள்!

இரு பெண்களும் வீட்டிற்குள் நுழைய, பின் தங்கிய நிரஞ்சனின் பார்வையில் புது வேறுபாடு தெரிந்தது இவளுக்கு.

பத்மாவின் பேச்சு, அவனில் சலனத்தை ஏற்படுத்தி விட்டதோ? தனக்குப் பரிமாறப்பட்ட குளிர்ந்த பாதாம் பாலைப் பருகியபடி பெரிய மனுஷியாய் பேசினாள் பத்மா -

'எவ்வளவு இக்கட்டான நிலைமையில் உங்க சந்திப்பு இருந்துச்சுன்னு பாட்டிம்மா சொன்னாங்க. அப்பமே எனக்கு அதற்கான காரணமும் புரிஞ்சிருக்கணும். பொம்மை யாட்டம் இருக்கீங்க! எங்க வீட்டு ஹால் கூட இப்போ 'பளிச்'னு ஆயிடுச்சே?"

"ம்ம்... உள்ளே கிடந்த சில. அபூர்வ பொருட்களை இங்கே கொண்டு வந்தேன். உனக்கு இந்த அமைப்பு பிடிச்சிருப்பதில் சந்தோஷம். பெரியம்மாட்ட கேட்டுட்டு தான் இதையெல்லாம் செய்திருக்கணும் நான்... ஆனா... இங்க ஏறக்குறைய ஐந்தாறு நாட்கள் இருந்தேனா..."

"நல்லதை யார் செய்தா என்ன? நீங்க எனக்குத் தையல், சமையல் எல்லாமும் சொல்லித் தருவீங்களாங்க பாட்டிம்மா."



"தையல் சரி... ஆனா இரண்டாவது சொன்னதை. நானும் உன்னோடு சேர்ந்து கற்றுக் கொள்ளும் அளவில் தான்."

"குட்! வெந்நீராவது வைக்கத் தெரியுமா?"

"ரசம், சாதம், கூட்டுனு எளிமையான சமையல் பழக்கம். ஆனால் தையல் போல அதில் தனி ஆர்வம், திறமை இல்லை."

"சேர்ந்தே கலக்குவோம், நிமலாக்கா."

என்று சிரித்தவளை கட்டிக் கொள்ளலாம் போலிருந்தது. பத்மா அவளது அறைக்குப் போக, சில சமையல் புத்தகங்களைத் தேடி எடுத்த நிமலா, அன்று மதியத்திற்கான ஒரு பதார்த்தத்தை தேர்ந்தெடுத்து, அதற்கான சாமான்களை எடுத்து வைத்ததும் தன் தையல் வகுப்பிற்குப் போனாள்.

அங்கு கூடுதலாய் பத்து புதுப் பெண்கள் வந்திருக்க, அவர்களை மாலை வகுப்பில் சேர்த்துக் கொண்டாள்.

"முதல்ல வந்த ஏழு பேருக்கு இப்ப மெஷினில் கை பழகியிருச்சு - ஆக அவங்க முதல் செட்டாக இருக்கட்டும். மற்ற இரண்டாம் செட்டிற்கான நேரம் மதியம் மூன்றிலிருந்து ஐந்து வரை..."

"நாங்க அப்போதும் வரலாங்களா?" முதல் செட் பெண் ஒருத்தி கேட்க, நிமலா புன்னகைத்தாள்.

"கண்டிப்பாய். சீனியர் செட் கற்றுத் தந்தால், மற்றவர்களுக்கு பாடம் சுலபமாகும், எனக்கும் அது வசதி தானே?"

ஆக நிமலாவின் நாளிற்கான அட்டவணை கச்சிதமாய் அமைந்து விட்டது.

எழுந்ததும் தோட்ட வேலை, பிறகு வீட்டின் பராமரிப்பு, காலையிலும், மாலையிலுமாய் தையல் வகுப்புகள், நடுவே சமையல் என்று!

ஞாயிறன்று தங்களின் கணவன்மார் வீட்டிலிருப்பதால் தையலுக்காய் பெண்கள் அன்று வருவதில்லை.

வந்த முதல் ஞாயிறன்று தனக்கான ரவிக்கைகளை தைத்துக் கொண்டவள், அடுத்த வாரம் பூட்டிக் கிடந்த சில அறைகளைத் திறந்து சுத்தப்படுத்த முனைந்தாள்.

பத்மாவிற்கும் பழகாத இந்த வேலை சுவாரஸ்யமாயிருக்க, உதவினாள்.

''பட்டும்மாக்கு தூசி ஆவாதுங்க'' என்று வேலைக்காரர்கள் எச்சரிக்க, 'ஜம்முனு உட்கார்ந்து பூ வேலை செய்வியாம்' என்று நிமலா, இளையவளை ஊசியும் நூலுமாய் வேறு அறையில் இருத்தி வைத்தாள்.

''மாரி, என் ரூமிலுள்ள துணிகளை துவைக்க எடுத்துக்கோ'' என்றபடி நிரஞ்சன் வெளியே போக, மெள்ள அவனது அறைக்குள் தலை நீட்டினாள் நிமலா.

வெகு களேபரமாய் இல்லாவிட்டாலும், அறை களையாகவும் இல்லை என்று தோன்ற வேலையில் இறங்கினாள்.

பயன்படுத்திய துணிகளை எடுத்துப் போக வந்த மாரியம்மாளிடம், ''ஐயாவுடைய படுக்கையை நல்லபடி வைக்க வேண்டாமா?'' என்று இவள் கடிய, மாரி,

''பெரியம்மா போனதிலிருந்து யாரும் இங்க வர்லீங்களே'' என்று சமாளித்தாள்.



''அம்மா இல்லாத நேரம் நாமதான கூடுதல் பொறுப்போடு நடந்துக்கணும்?'' என்றவள் பரபரவென படுக்கையின் கசங்கிய விரிப்புகளை அகற்றினாள்.

''இதையும் சலவை மெஷினில் போட்டுட்டு, டஸ்டர், பெருக்குமாரோடு வாங்க மாரி'' என்று கலைந்து கிடந்த மற்ற பொருட்களை சீர்படுத்தினாள்.

படிந்திருந்த தூசைத் தட்டி, அறை பெருக்கித் துடைக்கப்பட்ட, அதன் களை மீண்டிருந்தது.

''புது பெட்ஷீட்ஸ் எங்கேயிருக்கும்?''

''அது... பெரியம்மாதான் மாற்ற எடுத்துத் தருவாங்க.''

''சரி. நான் பார்க்கறேன். மெஷினிலுள்ள துணிகளை உலர்த்திடுங்க'' என்றபடி சில அலமாரிகளைத் திறந்தவளின் கைகள், சற்று நலுங்கியிருந்தவற்றை நேர்படுத்தாமல், கதவை மூடவில்லை. ஒரு சுவர் முழுக்க அடைத்தாற் போலிருந்த அலமாரிகளின் பல கதவுகளைத் திறந்து மூடியவள், கடைசிக் கதவை திறக்க, அவளது விழிகள் சிமிட்ட மறந்து விரிந்தன. இவள் தேடிய படுக்கை விரிப்புகளும், தலையணை உறைகளும் அங்கு இருந்தத்தோடு, கீழ்தட்டில் இருந்தபடி சிரித்த அப்பெண்ணின் முகம் நிமலாவை திகைக்க வைத்தது!

வெகு உயிர்ப்புள்ள ஓவியம் அது!

மாருதியின் பாணியில் கழுத்துவரை வரையப்பட்ட ஒரு கவர்ச்சியான குண்டு முகம்! வளைந்த இமைகளும், சுருண்ட கூந்தலும், வாய்விட்டுச் சிரிக்கும் களிப்புமாய் கண்களைக் கட்டி ஈர்த்த அழகு!

படத்தின் கீழே எழுதப்பட்டிருந்தது என்ன...?

குனிந்து பார்த்தாள் - பொடி எழுத்துக்கள் -

'பிரியமுடன் - ஷியாம்' என்றன!

படத்தின் அருகே ஒரு கட்டு கடிதங்கள் சிகப்பு பட்டு ரிப்பனால் கட்டப்பட்டிருக்க, அதிலும் அதே பொடி சரிந்த எழுத்து!

இப்படத்திலுள்ள பெண்தான் நிரஞ்சனின் மனைவியா?

அதாவது இறந்துவிட்ட அவனது வாழ்க்கைத் துணை? இவ்வளவு உற்சாகமும் கவர்ச்சியுமான ஒருத்தியை மணந்து, இளம் வயதிலேயே அவளை இழந்தது கொடுமை தான்.

இப்படத்தை வரைந்த, கட்டுக் கட்டாய் கடிதமெழுதிய ஷ்யாம் யார்? மனைவியுடைய படத்தின் அருகே வைக்கப்பட்டதால், இவையெல்லாம் அவளுக்கு எழுதப்பட்டவைதான் போலும்...

இவ்வளவு நெருக்கமாய் ஒரு ஆண் இவளோடு பழகுவது என்றால்...?

'சட்'டென தன்னை உலுக்கிக் கொண்டவள், தேவையான விரிப்புகளை எடுத்துக் கொண்டு அலமாரியை மூடினாள்.

அனுமதியின்றி ஒருவர் அறையில் நுழைந்ததே தவறு.

இதில் அவர்களுடைய அந்தரங்கத்தைக் குடைந்து, ஆராய்வது பாவம்... என்று தன்னையேக் கடிந்தபடி படுக்கையை போட்டாள். வாசலில் நிழலாட, திடுக்கிட்டு நிமிர்ந்தவள் தொண்டை உலர்ந்தது. அங்கே முகமெல்லாம் கோபம் வழிய நின்றது நிரஞ்சன்!



எவ்வளவு நேரமாய் அங்கேயிருந்தபடி தன்னைக் கவனித்திருக்கிறான்?

மன்னிப்பு கேட்கவும் கூடாத நடுக்கத்தில் அங்கிருந்து நழுவினாள் இவள்.



# 9

'பிறப்பு ஒரு விபத்தெனில்

இறப்பு ஒரு மர்மம்...

இடைப்பட்ட வாழ்வோ பெருங்குழப்பம்!'

என்று ஒரு அனுபவஸ்தர் சொல்லிப் போனது சரிதான்!

பிறப்பும் இறப்பும் நம்மை மீறியவை என்று விட்டு விடலாம்.

ஆனால் வாழும் நாட்கள் எல்லாம் சீரும் தெளிவுமாய் போகின்றனவா என்ன? கடலின் அலைகளைப் போல சிறிதும் பெரிதுமான குழப்பங்கள் ஒவ்வொருவரையும் புரட்டித் தள்ளி சிரிக்கின்றனதான்.

பெரும் ஆபத்திலிருந்து தப்பின தன் நாட்கள் நிம்மதியாய் கழிகின்றனவே என்று திருப்திகொள்ள விடாமல் அவளை நிரஞ்சனின் கோப முகம் உறுத்தியது.

வேலையாட்களிடம் கூட முகம் கோணாமல் பழகுபவன் அவன், என்பதைக் கவனித்திருந்தாள்.

ஏன் - சொல்லாமல் வந்து நின்று அடைக்கலம் கோரிய தன்னிடம் கூட அவன் கடுமையாய் நடந்தவனில்லையே...

அவனது அறை வாசலில் நின்றவனின் முக இறுக்கமும், கண்களில் கொப்பளித்த கோபமும், இப்போது நினைத்தாலும் நடுங்கினாள்.

அனுமதி இன்றி அவன் அறைக்குள் புகுந்து, வெகு உரிமையாய் தான் அங்கு நடமாடிக் கொண்டிருந்தது தப்புதான். அவன் வாய் திறந்து திட்டும் முன் ஓடியும் வந்து விட்டாள்.

''நீங்க சொல்லித் தந்த 'லேஸி டெய்ஸி' பூவேலை எத்தனைக்கு எத்தனை போட சுலபமோ... அத்தனைக்கு பார்க்க சூப்பரில்லக்கா?''

தன் வேலையைத் தானே ரசித்துப் பாராட்டிய பட்டுவிடம் வெறுமே தலையாட்டினாள்.

''என்ன நிமலாக்கா... ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''நான் உன் அத்தான் அறையில் இருந்தப்போ... அவர் வந்துட்டார்...''

''வந்து பெண்களிடம் வழியற ஆசாமி இல்லையே அவர்?''

பட்டு சீண்ட, மற்றவளின் முகம் சிவந்தது.

''சேச்சே... அந்த அர்த்தத்தில் சொல்லலை... ரொம்பக் கோவமாய் தெரிஞ்சார்.''

''அவர் அறையைச் சுத்தம் தானே செய்திருப்பீங்க?''

''ஆமாம் பட்டு...''

''உங்க கை பட்டால் எல்லாம் பளிச்சிடுமே? வேற ஏதேனும் எரிச்சலில் வந்திருப்பாங்க... தவிர, குயிலிக்கா அது மாதிரி வேலை எல்லாம் செய்ததே இல்லையே... அந்த நினைப்பாய் கூட இருக்கலாம்.''



''யாரது... குயிலி?''

''நிருத்தானின் ஒன் மனைவி - ஓ... உங்களுக்குத் தெரியாதில்ல? பேர் குயில்னாலும் பார்க்க வெளுப்பா, அழகாத்தான் இருப்பாங்க.''

நிமலாவின் மனக்கண்ணில் படத்தில் பார்த்த குதூகலமான குண்டு முகம் வந்து நின்றது.

பட்டு தொடர்ந்தாள் - ''ஆனா குயிலிக்கா சதா புலம்புவாங்க. இங்கே போர் அடிக்குது... பொழுது போகலைன்னு. பாட்டிம்மா முதல்லியே சொன்னாங்க - 'நிரஞ்சனைக் கட்டிக்கப் போறவளுக்கு அழகு மட்டும் போதாது. அவன் நோக்கமறிஞ்சு துணை நிற்கும் பெண்ணாய் வரணும்'னு. ஆனா அத்தை மாமா அப்பவே வெளிநாட்டில் இருந்ததால், அத்தான் இங்கே தனியே இருப்பானேன்னு அவசர அவசரமாய் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க.''

''அதாவது நிரஞ்சன் ஸாரின் பெற்றவங்க...?''

''அந்த சார், மோரை எல்லாம் விட்டுருங்கக்கா... ஏன் இவ்வளவு சோகமாய் முழிக்கறீங்க?''

''ல்ல... அவங்க சேர்ந்திருந்த சில வருஷங்களும் சந்தோஷமாய் வாழலையோன்னு பட்டுது.''

இதுவும் தான் மூக்கு நீட்டக் கூடாத விஷயம் என்று உறைக்க,

''இப்ப சமையலைப் பார்ப்போமா?'' என்று பேச்சை மாற்றினாள். ஆனாலும் கூட்டிய குழம்பில் பதியாமல் மனம் தன் சிந்தனைகளிலேயே கொதித்துக் கொண்டிருந்தது.

பத்மாவின் மனதும் குயிலி மேலேயே கட்டுண்டிருந்தது போலும் -

இவர்கள் இருவரும் தனியே இருந்த சமயம் பேச்சைத் தொடர்ந்தாள் -

''ஒரு தரம் பாட்டிம்மா -

'புருஷனுக்குப் பிரியமானதை சமைக்க, வீட்டைப் பராமரிக்கனு இருந்தால் பொழுது அழகாய் நகருமே குயிலி. வா, உனக்கு மீன் குழம்பு வைக்கக் கற்றுத் தாரேன்னு' சொல்ல -

அன்னைக்கு முழுக்க குயிலிக்கா அழுதாங்க...''

''ஐயய்யோ...'' என்ற நிமலா 'ஏன்?' என்று தொடர்ந்து எழும்பிய கேள்வியை உதட்டை அழுத்தி விழுங்கினாள்.

''எங்கம்மா என்னை எப்படி தூசு படாமல் வளர்த் தாங்க? நீங்க கரித்துணி பிடிக்கச் சொல்றீங்களேன்னு குயிலிக்கா புலம்பினது எனக்கு ஞாபகமிருக்குது. அவங் களின் பல சண்டைகள் எனக்கு அப்போது புரியாதவை.''

''பட்டணத்து வாழ்வு பழகினவங்களுக்கு இங்கே அலுப்பாய் தோன்றும்தான்.'' பழகி அறியாத ஒரு பெண்ணிற்காய் பரிந்து பேசினாள் நிமலா.

''நீங்க வேற. குயிலிக்கா குடும்பம் பக்கத்து பண் ணைக்காரங்கதான். எங்களுக்கு அவங்க சிறு வயசி லிருந்தே தெரியுமே...''

''ஓஹோ - உறவா?''

''இல்லையில்ல. ஆனா நல்ல பழக்கம்.''

'குயிலுக்கு ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் சரியா யிடும்'னுவாங்க எல்லாரும்... ஆனா அக்காக்கு அதிலும் நோக்கமில்லை.''

முகம் சிவக்க சொன்னாள் பத்மா.



''எங்க குடும்பத்தில முதல் பிறப்பது ஆண்தான்... என்ன அப்படி பார்க்கறீங்க? நான் எங்கம்மாக்கு முதல் குழந்தையில்லை. எனக்கு முன்னே ஒரு பையன் இறந்தே பிறந்தானாம். தனக்கு ஒரு வாரிசு வரணும்னு நிருத் தானுக்கும் ஆசைதான் போல..''

''அதாவது ஆண் குழந்தை?'' அவளையும் மீறி நிமலா வின் தொனியில் ஒரு கசப்பு.

தான் பெண்ணாய் பிறந்ததால்தான் பெற்றவர் ஓடி விட்டாரோ என்ற எரிச்சல் இவளுக்குண்டு.

கடவுள்களுக்கும் ஆறுகளுக்கும் சகஜமாய் பெண் பெயர்களை வைத்துப் பூரிக்கும் நம் சமூகம் ஏன் ஆண் பிறந்தால் மட்டுமே பெருமைப் படுகிறது?

''கடைசியில்... அதாவது கல்யாணமான மூணாம் வருஷம் குயிலிக்கா கர்ப்பமானாங்க.''

''ஓ..?''

''ஆனால் மஞ்சள் காமாலை தாக்கி இறந்துட்டாங்க.''

அவர்களிடையே ஒரு சங்கடமான மௌனம்.

சற்று முன் நிரஞ்சனை பயத்துடன் நினைத்தவள் இப் போது அவனுக்காய் பரிதவித்தாள்.

இரு வேறுபட்ட சூழலில் வளர்ந்து உருவானவர்கள் திருமணத்தில் இணைந்ததுமே மனம் ஒன்றி வாழ்வது சுலபமல்ல. ஒரு குழந்தை இவர்களிடையே அன்புப் பாலமாகும் முன்பே இவர்களது வாழ்வு முடிந்து விட்டது பெரும் சோகம்.

ஒரு ஆண் பிள்ளை பிறந்திருந்தால், தன் சொத்திற் கான வாரிசு உண்டென்ற தெம்புடன் நிரஞ்சன் நடமாடி இருப்பான்.

ச்சே... தானும் ஏன் மடத்தனமாய் வாரிசு என்றால் 'ஆண்' என்றே எண்ண வேண்டும். இந்த பண்ணையை நிர்வகிக்க ஒரு பெண் பிள்ளையால் கூடாதா என்ன?

ஜவஹர்லால் நேருவிற்கு பிறந்த ஒரே பெண் - இந்த நாட்டை ஆளவில்லையா?

சாயங்காலம் பெண்கள் இருவரும் காலார நடந்தார்கள்.

''ராத்திரிக்கு தோசை வார்க்கறோம் பட்டு. தொட்டுக்க என்ன பிடிக்கும்?''

''உங்களுக்கு?''

''மதியம் நாம செய்த பூண்டு குழம்பே போதும்.''

''எனக்கும். கூடவே கெட்டித் தயிர்.''

''ஆனா நிரஞ்சன் சாருக்கு...? அவருக்கு என்ன பிடிக்கும்?'' என்று சமையல் ஆளை விசாரித்தாள் நிமலா.

''மல்லிச் சட்னி இருந்தால் ஐயா கூட ஒரு தோசை எடுத்துக்குவாங்க.''

''அப்ப அது செய்திடலாம்.'' என்றவள் அதன் செய்முறையையும் கவனித்துக் கொண்டாள்.

''வாங்க நிமலாக்கா. நாம பார்க்கணும்னு நினைச்ச இசை நிகழ்ச்சி டி.வி.யில் ஆரம்பமாகப் போகுது. டி.வி. பார்க்கவும் நேரம் குறிக்குமளவு நான் மாறப் போகிறேன்னு நான் யோசிச்சதில்லை. ஆனா நேரத்தையும் கணக்கு பார்த்து செலவழிக்க, ஒரு நாளில் நிறைய செய்ய முடியுது... இதை எல்லாம் கற்றுக் கொண்டதாய் நான் பாட்டிம்மாட்ட சொல்லி ரொம்ப சந்தோஷப்பட்டாங்க...''



''நீ இங்கே வர்றது வருஷத்துக்கு ஒரு தரம். அந்நேரம், தான் இங்க இருக்க முடியாதது பற்றி வருத்தமாத்தான் கிளம்பியிருப்பாங்க பெரியம்மா. இப்ப நிம்மதியாய் இருக்கும். நீ வந்தது எனக்குக் கூட தனி தெம்புதான் பட்டு.''

''இல்லைன்னா போர் அடிச்சிருக்குமா?''

''ஒவ்வொரு நாளும் சுவாரஸ்யமாய் கழியுது.''

''ரஜ்வின் அத்தானுக்கு இங்கே முழுசாய் ரெண்டு நாள் கூட இருக்கப் பொறுக்காது. அப்படி இருந்த ரெண்டு நாளில்தான் உங்களோடு போனில் வேற பேசி சொதப்பிட்டாங்க இல்லையா?''

''அதான் மூத்தவர் வந்து காப்பாத்திட்டாரே!''

டி.வி. நிகழ்ச்சி முடிய, சாப்பிட்டும் முடித்தவர்கள், நிரஞ்சனைச் சாப்பிட அழைத்து தோசை வார்க்கலானார்கள் -

''நல்லா சாப்பிடுங்க நிருத்தான். அக்கா உங்களுக்காய் ஸ்பெஷலாய் மல்லிச் சட்னியெல்லாம் செய்து வச்சிருக்காங்கல்ல?''

நிமலா மனதிற்குள் இளையவளை 'அதிகப் பிரசங்கி' என்று செல்லமாய் திட்டினாலும், ஏதோ ஒரு குறுகுறுப்பும் உள்ளோடியது.

ஒரு ஆப்பிளையும் வெட்டி அடுக்கியவள் அதை மேஜையின் மேல் வைக்கப் போனபோது,

''தாங்க்ஸ் நிமலா. திருப்தியாய் சாப்பிட்டேன்'' என்றவன் சொல்ல, அவள் நெஞ்சம் மேலும் படபடத்தது.

# 10

சும்மா கிடந்த சங்கை தான் வீணே எடுத்து ஊதி விட்டோமோ? என்றிருந்தது நிமலாவிற்கு.

நடந்தது இயல்பான நிகழ்வுதான் -

அசாதாரணமாய் ஏதுமில்லை.

பின்னே என்ன?

நிரஞ்சனின் பார்வை சற்று வேறுபட்டிருந்ததுதான் காரணம். இப்போது வெகு உன்னிப்பாய் இவளைக் கவனிக்கின்றன.

அவை தன்னிடம் எதையோ சொல்ல முயலுவது போலொரு பிரமை!

ஆக இனி அவன் முன் போய் நிற்பதை, நடமாடுவதை தவிர்க்க வேண்டும்!

அன்று மாலை ஆறு மணிக்கு அவிழ்த்து விடப்பட்ட நாய்கள் தோட்டத்தை நாலுகால் பாய்ச்சலில் சுற்றி வந்தன.

அவற்றோடான முதல் 'உறுமல்' அனுபவத்திற்குப் பிறகு இவள் அவற்றை நெருங்கத் துணியவில்லை. எட்டி நின்று ரசிப்பதோடு சரி.

ஆனால் திடும்மென அவை உறைந்து, காதுகளை உயர்த்த, யாரோ வருகிறார்கள் என்பது இவளுக்கும் புரிந்தது. எதிர்பார்த்தது போல மறுநிமிடம் சன்ன உறும



லுடன் வீட்டின் முன் வந்து நின்றது அந்த உயர்ரக கார்.

அதிலிருந்து இறங்கிய மனிதர் வெகு தோரணையாய் இருந்தார்.

வயது அறுபதிற்குள் இருக்கலாம். ஆனால் நடையும் உடையும் வெகு மிடுக்கு!

நாய்கள் அவரை நெருங்கி, முகர்ந்து, அளவாய் வாலாட்ட, அவர் இந்த வீட்டிற்கு ஏற்கெனவே பரிச்சயமானவர் என்பது இவளுக்குப் புரிந்தது.

தோட்டத்து வேலையில் நின்ற தன் மீது அவரது பார்வை ஒரு கணம் அழுந்தி, அளந்து பின் நகர, நிமலாவிற்குள் வெலவெலத்தது! பத்மாவிடம் போய் கேட்டாள்.

''அது... அவர்தான் குயிலியுடைய அப்பாவா?''

''நோ நோ. அவுங்க தேசிகன் பெரியப்பா - சென்னையில் இருக்காங்க. இவங்க தனராஜ் அங்க்கிள்...''

''யார் இவர் என்று கேட்டறியும் ஆர்வம் இருந்தாலும், தன் எல்லை புரிந்து அடக்கிக் கொண்டாள் நிமலா.

தோட்ட வேலைக்கென தான் போட்டிருந்த கனத்த கையுறைகளை உருவி, அவற்றைக் கழுவி விட்டு, கலைந்த கேசத்தைக் கோதியபடி நிமலா வீட்டினுள் நுழைய வெளியேறிக் கொண்டிருந்த தனராஜுடன் இவள் ஏறக்குறைய மோதும் நிலைமை.

மன்னிப்புக் கோரலுடன் இவள் ஒதுங்க, அவர் கண்கள் முன்னிலும் உக்கிரமாய் இவளை வெறித்தன.

நிமலாவிற்குப் புரியவில்லை.

யாரென்றே அறியாத இவர் ஏன் தன்னை முறைக்கிறார்?

வீடு தேடி வந்தவருக்கு இங்கு வேண்டிய உபசரணை கிடைக்கவில்லையோ? தோட்ட வேலையை விட்டு விட்டு, தான் இவருக்குக் குடிக்க ஏதேனும் தந்திருக்க வேண்டும். அது மறந்து நின்றதை 'விட்டேறித்தனம்' என்று எண்ணிய கோபமா?

'நிரஞ்சன் பணிக்க, சமையலறையின் ஆட்கள் நிச்சயம் வந்தவருக்கு ஏதேனும் பரிமாறியிருப்பார்கள். தான் முந்திரிக் கொட்டை போல உள்ளே போய் நின்றிருந்தால், பெரியவரின் கோபம் மேலும் பெரிதாகி இருக்கும்

காரில் ஏற இருந்தவர், மறுபடி தன்னை வந்து முகர்ந்த நாய்களை அதட்டினார். அக்குரலின் எரிச்சல் தொனியில் அவை, சற்று விறைப்பாகி விலகின.

வந்து பேசியவர் கடும் எரிச்சலுடன் போகிறார்!

நிரஞ்சனுடன் ஏதோ வாக்குவாதம் நேர்ந்தது போலும்! பெரியவருக்கு அது ஆத்திரம் ஏற்றியது என்றால்.. நிரஞ்சனின் நிலைமை என்ன?

அவனிடமிருந்து தான் சற்று எட்டியே நிற்பது என்ற முடிவை மறந்து, அவனது அலுவலக அறைக்கு முன் நின்றாள். தயக்கமாய் கதவைத் தட்டும் முன்பே, பாதி திறந்தே இருந்து அதை முழுதுமாய் திறந்து கொண்டு வந்த நிரஞ்சனின் முகம்... இவள் அதுவரை பார்த்திராத கோபத்தில் சிவந்திருந்தது!

அவன் நடையில் அசைவில், உள்ளே கனன்ற ஆத்திரத்தின் அனலடிப்பு!



ஆனால் தயக்கமும் கரிசனையுமாய் எதிரே நின்றவளைக் கண்டவனின் கோபம் சற்று தணிந்ததோ? ஆனால் முன்பைப் போல அதில் ஒரு விதமான புது பாவனையோடு கேள்வியும் ஏறி நிற்க, இவள் பம்மினாள்.

'என்ன யோசிக்கிறான்?'

தான் ஏதோ ஒரு விதத்தில் நிரஞ்சனை பாதிக்கிறேன்... ஆனால் அது என்ன... எதனால்?

அன்றிரவு படுத்தவளுக்குள் இக்கேள்வி மீண்டும் மீண்டுமாய் தோன்றியும் விடை ஏதும் கிடைக்கவில்லை.

பெண் மனம் ஆழமானது என்பதெல்லாம் சும்மா. ஆணோ, பெண்ணோ எவருடைய மன ஓட்டத்தையுந் தான் பிறரால் கணிக்க முடிவதில்லையே?

குழப்பத்துடன் அரைகுறையாய் உறங்கினாள்.

மறுநாள் காலை உணவிற்காய் பூரி மசாலா தயாராக, இவள் எலுமிச்சையோடு புதினா இலைகள் சேர்த்து ஒரு பழச்சாறை தயாரித்து மேஜையில் வைத்தாள். உதிர்த்த மாதுளை முத்துக்கள் சிறு கண்ணாடி குவளை நிறைய.

இவள் தட்டுக்களை துடைத்து இட்ட நேரம், நிரஞ்சன் வருவது தெரிய, அவசரமாய் அங்கிருந்து அகன்றவள், சமையலறையின் ஜன்னல் வழியே மெள்ள தலை நீட்ட, 'திக்'கென்றது!

நிரஞ்சனின் கண்கள் இவளுக்காய் காத்திருந்தது போல, இவளதைச் சந்திக்க, 'சட்'டென பின்னடைந்தாள். படபடத்த நெஞ்சை அமைதிப்படுத்த, சமையலறையின் பின் வாசல் வழியே நழுவினாள். கொல்லைப்புறத்தில் நாய்களுக்கான உணவை வைத்துவிட்டு, அவற்றைக்

கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள் பத்மா. ஏனோ அந்த காட்சியும் இவளுக்கு ரசிக்கவில்லை.

காரணத்தைத் தேடினால்... அது துளிப் பொறாமை என்றது! தனக்கென்று ஒரு ஜீவன்... இப்படி அமைந்தால் அது பெரும் ஆறுதல்... ஒரு பூனைக்குட்டியையேனும் தேடி அதைத் தனக்குத் துணை ஆக்கிக் கொள்ள விழைந்தது அவளது மனம்.

நிரஞ்சன் சாப்பிட்டு முடித்திருப்பான் என்ற கணிப்புடன் வீட்டினுள் வந்தவள், கிடைத்த காட்சியில் சற்று திகைத்துப் போனாள். நிரஞ்சன் செய்தித்தாளை புரட்டிக் கொண்டிருந்தான். வழக்கமாய் வாசிப்பு - வேலையும் அவன் அலுவலகத்தில்தானே நடக்கும்...?

ஒருவேளை தனக்காய் காத்திருக்கிறானோ? மறுபடி பின் வழியே போய் தையல் வகுப்பிற்குப் போகும் முடிவுடன், இவள் நகர, அவனது குரல் அவளைத் தடுத்தது.

''உனக்காகத்தான் காத்திருந்தேன் நிமலா. ஆபிஸுக்கு வா - உன்னோட பேசணும்.''

எடுத்ததும் தன்னை ஒருமையில் அவன் கூப்பிடாதது அவளுக்குப் பிடித்திருந்ததைப் போலவே பிறகு இயல்பாய் அவன் மாறிக் கொண்டதும் நிமலாவிற்கு இதம்தான்.

பிடிக்காதது... இல்லையில்லை புரியாத மர்மம் அவனது சமீபத்தின் வினோதமான பார்வைதான். அதற்கான விடைதான் இப்போது கிடைக்கப் போகின்றதோ?

''அரை மணியில் தையல் கிளாஸ் போகணும். நான்...''



—''போகலாம்...'' என்றவன் எழுந்து நடக்க, மௌனமாகப் பின் தொடர்ந்தாள்.

செய்தித் தாளை அலுவலக மேஜையின் மீது கவனமாய் மடித்து வைத்தவன்,

''உட்கார் நிமலா'' என்றான்.

''இருக்கட்டும்...''

''ப்ளீஸ்'' - அவனது சிறு அதட்டலில் அவசரமாய் அமர்ந்தாள்.

காலையிலிருந்து அதுவரை நின்ற கால்களுக்கு அப்பருத்த பஞ்சு இருக்கை இதமாகவே இருந்தது.

''வீட்டை ரொம்பப் பொறுப்பாய் பார்த்துக்கறே நிமலா... நன்றி.''

அவன் இப்படி சொன்னதாய் அஞ்சுகத்தம்மாவும் போனில் இவளிடம் சொல்லியிருந்ததுதான்.

''அது என் கடமை. அதுவும் நீங்க எனக்கு செய்த பெரிய உதவிக்கு... பதிலுக்கு நான் என்ன செய்ய முடியும்னு தெரியலை.''

''என் அறை இவ்வளவு ரசனையாய் சுத்தப்படுத்தப் பட்டதே இல்லை. அதற்கும் இன்னொரு நன்றி.''

''பரவால்லைங்க... உங்க அனுமதி இல்லாமல் நான் அந்த வேலையில் இறங்கினது உங்களுக்குப் பிடிக்கலைன்னு தோணிச்சு...''

தொடரத் தெரியாமல் தடுமாறினாள்.

''ஓ... கோபம் உன் மேலில்லை. வேறு ஆத்திரத்தில், தனிமைக்காக என் அறைக்கு வந்த போது, அங்கே தனிமை இல்லாததால் கொஞ்சம் சிடுசிடுப்பாய் இருந்திருக்கும் என் முகம்... அவ்வளவுதான்.''

அந்த விளக்கம் இவளுக்கு பெரும் நிம்மதியாயிருந்தது.

அந்த நிம்மதியுடன் அவள் முறுவலித்ததைக் கூர்ந்து கவனித்தான்.

"நன்றி சொல்லுவதாய் எண்ணி நீ அதிகப்படி வேலைகளை இழுத்துப் போட்டுக்கறேன்னும் படுது நிமலா. நீ சும்மா உட்கார்ந்தே நான் பார்த்ததில்லை."

"இதைவிட கடினமாய் உழைத்துப் பழக்கப்பட்டவ நான். இவ்வளவு வசதியான அறை, சாப்பாடுன்னு எனக்கு இங்கே எந்தக் குறைவுமில்லை."

"பட்டுவும் ரொம்ப நிறைவாய் தான் இருக்கறா. மற்றபடி விடியோ கேம்ஸ், டி.வி.ன்னு மட்டுமே பொழுது போக்கறவ, அடிக்கடி திண்டுக்கல் அல்லது மதுரைக்குப் போகணும்னு என்னைத் தொல்லைப் பண்ணுவா, பாட்டிம்மாவுக்கும் இதில் நிம்மதி..."

இப்படி வரிசையாய் நன்றி நவிலவா தன்னைத் தனியே அழைத்து உட்கார வைத்தான்?

இவளது அசௌகர்யத்தை உணர்ந்தவன் செருமியபடி பேசினான் -

"பாட்டிம்மா நிறைய வாசிப்பாங்க. அதில் சுவாரஸ்ய தகவல், கவிதை வரிகளை எங்களுடன் பகிர்ந்து கொள்வதுண்டு."

"ம்ம்... அவர்களோடு நேர்ந்த ரயில் பயணத்தின் போதும் கூட எனக்கொரு கவிதையை வாசித்தாங்க."

"இப்போ ஆஸ்ட்ரியாவிலிருந்து அவங்க எனக்குச் சொன்னது ஒரு ஜப்பானிய கவிதை."



இவள் ஆவலாய் அவனை ஏறிட்டாள்.

"மரங்கள் படைக்கப்பட்டதும் உலகிற்குப் பூக்கள் கிடைத்தன.

பறவைகள் படைக்கப்பட்டதும் உலகிற்கு சிறகுகள் கிடைத்தன.

பெண் படைக்கப்பட்டதும் உலகிற்கு நாகரீகம் கிடைத்தது!"

நிதானமாய் சொன்னவன் தொடர்ந்தான் -

"உன்னைப் பற்றி பண்ணைப் பெண்களும் பட்டுவும் பிரமாதமாய் சொல்ல, பெண்ணின் பெருமையை என்னிடம் வலியுறுத்த இந்தக் கவிதையை பாட்டிம்மா பயன்படுத்தினாங்க."

சின்ன கூச்சத்துடன் அவன் சொல்ல, இவளது புன்னகை விரிந்தது. அது தொற்று நோய் போல, அவனையும் பற்ற, சிரித்தவனை வியப்பாய் பார்த்தாள் நிமலா. "உனக்கு நான் ரொம்பக் கடன் பட்டிருக்கேன்."

வயதிற்கு மீறிய முதிர்வோடு தெரியும் அவனது முகம் சிரிப்பில் மிக இளமையாகி இருந்தது.

முறுவலுடன் ஒருவரை மற்றவர் பார்த்திருந்த அந்த மாயச் சூழலை, தங்களுக்குள் விளையாடியபடி அறைக்குள் பாய்ந்து வந்த நாய்களின் உரத்த குரைப்பு நொறுக்கிக் கலைத்தது.

அன்றிரவும் வெகு நேரம் நிரஞ்சன் சொன்ன கவிதை வரிகளை, தங்களது சம்பாஷணையை, இருவரும் ஒரு அறையில் தனித்து பேசிய புதிய சூழலை அசைபோட்டபடி புரண்டிருந்தாள். இங்கே இருந்த இரு வாரங்களில்

அப்படி ஒரு சந்தர்ப்பம் அமையவில்லை... அதை அமைத்தவன் தன்னிடம் ஏதோ சொல்ல வருகிறான் என்பதை யூகிக்க முடிந்தாலும், அது என்ன என்று அறிவதற்கு முன்னே... நாய்களின் குறுக்கீடு. அவற்றை தொடர்ந்த பத்மா, தன் கையிலிருந்த பலூனைத் தட்ட, அவை மேலும் எம்பிக் குரைத்தன.

வழக்கமாய் அப்பிராணிகளின் அசைவுகளை ஆர்வமாய் கவனிக்கும் தனக்கு அந்நேரம் ஏன் எரிச்சலாய் வந்தது?

அறைக்குள் நிமலா இருந்ததைக் கண்ட பத்மா சற்று ஆச்சரியம் காட்டினாலும்,

''உங்களிடம் சொல்ல ஒரு விஷயமிருக்கு நிமலாக்கா. வர்ற வாரம் டவுனில் களிமண் நகை செய்யக் கற்றுத் தரும் ஒரு கோர்ஸ் நடக்குதாம் - போலாமா? உங்க டெய்லரிங் ஸ்டூடன்ட்ஸில் ஆர்வமுள்ளவங்களும் வரட்டுமே.'' உற்சாகமாய் அறிவித்தாள்.

''கண்டிப்பா... கேட்போம். இப்ப கிளாஸ் ஆரம்பிக்கணும்'' என்றபடி வெளியேறியவளை நிரஞ்சனும் தடுக்கவில்லை.

அன்று மாலை தாழ்வாரத்தின் அலங்காரச் செடிகளைச் சுற்றி வர்ண கூழாங்கல்லை வைத்த இரு பெண்களின் பேச்சு தொடர்ந்தது -

''ஆக உங்களுக்குக் களிமண் நகை பற்றித் தெரியுமாக்கா? நனைஞ்சால் கரைஞ்சிடாதா?''

''களிமண் பானையில்தானே சமைக்கிறோம்? அதே போல சுட வைத்த நகைகளை ஒரு மாசம் வரைக் காயவிட்டு, நிறமேற்றுவாங்க.''



''அவை ஐநூறு, அறநூறு வரை விலை போகுமாமே? பெண்களுக்கு தையலோடு இதுவும் ஒரு நல்ல கைத் தொழிலில்லையா?''

''ரொம்ப குட்டிகையாயிட்டே, பட்டு.''

''டவுனுக்குப் போனால் அப்படியே நாம கொஞ்சம் ஷாப்பிங்கும் செய்யலாமே?''

''ம்ம்... சில நிற நூல்கண்டு, பட்டன்ஸ், லேஸ், நாடாக்கள் தேவைதான்.''

''நீங்க வேற. ஆடி தள்ளுபடியில் 'சிக்கனமாய் வாங்க' சொல்ற விளம்பரங்களை எல்லாம் நீங்க பார்க்கறதே இல்லையா?''

''ஏற்கெனவே எனக்கு உங்க பாட்டிம்மா, ரஞ்சிதாக்காவின் மூலம் வேண்டியதற்கு மேலேயே வாங்கித் தந்துட்டாங்களே?''


''உங்களுக்கு ஸல்வார் போட்டால் நார்த் - இன்டியன் ஸ்டார் போலிருப்பீங்களே...'' உதட்டைச் சுழித்தாள் இளையவள்.

''அதெல்லாம் எனக்குப் பழக்கமில்லை, பட்டு. எனக்குப் புடவைதான்.''

''அப்ப அதையே வாங்கிடலாம்'' என்ற கிண்டலுடன் பத்மா வீட்டினுள் ஓட, சன்ன உறுமலுடன் மறுபடி அந்தப் பெரிய கார் வந்து நின்றது. அன்று தனராஜ் என்பவர் வந்த அதே வாகனம்.

விரல்களில் ஒட்டியிருந்த செடி மணலைத் துடைத்தபடி தயக்கமாய் நின்றிருந்தாள் நிமலா. தானும் வீட்டுக்குள் போய் விடுவதா, அல்லது நின்று வந்தவரை

வரவேற்பதா என்று குழம்பியவளின் முகம், காரிலிருந்து இறங்கியவளைக் கண்டு அச்சத்தில் உறைந்தது! கண்டதை நம்ப முடியாத இவள் நெஞ்சம் பலக்க துடிக்க ஆரம்பித்தது!



# 11

அவள் அச்சத்திற்குக் காரணம் -

காரிலிருந்து இறங்கியது அன்று வந்த தனராஜ் அல்ல. ஒரு பெண்!

நிரஞ்சனின் அலமாரியின் கீழ் தட்டில் வைக்கப்பட்டிருந்த ஓவியத்தில் சிரித்த அதே பெண்!

கவர்ச்சியான குண்டு முகத்தின் சுருண்ட கூந்தல் சற்று கலைந்திருந்தது. ஆனால் அதே உற்சாகமான சிரிப்பு. இறந்ததாய் சொல்லப்பட்ட குயிலி இல்லையா இவள்?

எப்படி உயிரோடு... இங்கே?

அல்லது குயிலியின் கூடப் பிறந்தவளோ?

எண்ணங்களில் திணறியவளை நெருங்கிய அந்தப் புதுப்பெண் புருவம் உயர்த்தி சீண்டினாள் -

"நான் பார்க்க அவ்வளவு பயங்கரமாவா இருக்கேன்? ஏனிப்படி நடுங்கறே?"

"ல்ல... நீங்க?"

"ஷியாமளா. நிரஞ்சன் வீட்லதான இருக்கார்?" இவளது பதிலை எதிர்பாராமல் உள்ளே நடந்தவளை விடாமல் வெறித்தன நிமலாவின் கண்கள். கார் சத்தம் கேட்டு



அலுவலக அறையிலிருந்து வெளியே வந்த நிரஞ்சனின் முகத்தில் வந்த விருந்தாளியை வரவேற்கும் வகையில் மரியாதையான ஒரு முறுவலும் கூட இல்லை.

ஆனால் வந்தவளின் முகமெங்கும் சந்தோஷம் பொங்கி வழிந்தது.

"ஹாய் நிரு... நியாயத்துக்கு நான்தான் 'உம்'முனு இருக்கணும். நான் வந்து இத்தனை நாளாகுது. நீங்க வந்து என்னை எட்டியும் பார்க்கலியே? பரவால்லைன்னு நானே தேடி வந்தால் இப்படியா...? வாசல்ல நின்ற புதுப் பெண் வேற, பேயைக் கண்டது போல அரண்டு நிற்கறா."

"ஞானிகள் பெண்ணைப் பேய் என்றுதானே சொல்றாங்க?" நிரஞ்சன் அலட்டாமல் சொல்ல,

"நான்சென்ஸ். பையன்களை முரடன், போக்கிரின்னு சொல்றது போல? நீங்க முரடன் இல்லை... நானும் பேய் இல்லை நிரு" என்றவள் அவன் மூக்கைச் செல்லமாய் நிமிண்ட, அவன் முகம் மேலும் கருத்தது.

"அப்பா சொன்னாங்கல்ல? நான் மும்பையிலிருந்து வந்துட்டதாய்? ஏன் வீட்டுக்கு வரலை?"

"இங்கயே நீ செட்டிலாகப் போறதாய் சொன்னாங்க. பிறகென்ன? மெள்ள வரலாம்னு இருந்தேன்."

"இது நல்லூர் இல்ல நிரு. நல்ல காடு! இங்க நான் துணிஞ்சு வந்ததே நீ இங்க இருக்கறதாலத்தான்? நீயும் பிகு பண்ணினால் எப்படி?" அவளது குரல் கெஞ்சியது.

"எனக்கு என் வேலை இருக்கும் ஷியாமா. நீ செய்யும் நகை டிசைனிங்கிற்கு இந்தக் காடு சரிப்படாதே?"

"ஏனாம்?" கொஞ்சலாய் கேட்டாள்.

"நீ உருவாக்கும் நகைகளை இங்க யார் வாங்குவா?"

முன்னறையில் இருந்தபடி அவர்கள் வார்த்தையாடியது தாழ்வாரத்தில் நின்ற நிமலாவிற்குத் தெளிவாகக் கேட்டது. ஆனாலும் நகர்ந்து விடும் எண்ணமின்றி இருந்தாள் அவள்.

"அடடா... எவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வி நிரு? அப்படி பார்த்தா, எல்லா எழுத்தாளர்களும் பத்திரிகை ஆபீஸில் போய் உட்கார்ந்ததில்ல எழுதித் தள்ளணும்? தறி நெய்றவங்களும் புடவைக் கடையிலேயே நெய்து, சுடச்சுட புடவைகளை விற்க வேண்டியது தான்!" சீண்டிச் சிரித்தாள்.

"பரவால்ல - பேசக் கத்துகிட்ட."

"என் கற்பனைக்கு இங்குள்ள அமைதி உதவும். கற்பனையில் உருவாகும் நகைகளின் விற்பனை நகரங்களில் - எப்படி?"

"நீ இங்க வந்து அஞ்சு நாளிருக்குமா?"

"அப்ப என்னைப் பற்றி யோசிச்சிட்டேதான் இருந்தம்ம்?"

"அதிக நாட்கள் உன்னால் இங்கு தாக்குப் பிடிக்க முடியாது ஷியாமா. கற்பனைக்கு சரி - ஆனால் உன் நவநாகரீக பிரண்ட்ஸ், லைஃப் - ஸ்டைல் எல்லாம் இல்லாமல் எப்படி சமாளிப்பே? அவர்களின் தேவை புரிந்தால்தானே அதற்கு ஏற்றபடி உன்னால சப்ளை செய்ய முடியும்."

"இன்ட்டர்-நெட் இருக்கே? அதன் மூலம் அவங்க ரசனையை நாடி பிடிச்சுப் பார்த்திடுவேன்."

"ஆரம்ப ஜோர் - பிறகு போரடிக்கும்."



"நீ இருக்க, அதற்குச் சான்ஸே இல்லை."

"குயிலியும் இப்படிதான் நினைச்சு, என்னை ஒரு விளையாட்டுப் பொருளாய் வைத்து ஆடிட்டு போயிட்டா..."

"இப்ப நீ என்னோடு விளையாடலாம், நிரு."

"ஷியாமா. கிளம்பு நீ." - கறாரானது அவனது குரல்.

"தொடர்ந்த ஞாயிறன்று, வழக்கமான வேலைகள் கிடையாதென்பதால் மற்ற வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்து, வியர்த்திருந்தாள் நிமலா. தலைக்குள் வியர்வை பிசுபிசுக்க, காய விட்டு, சிறிது புளித்த தயிரைத் தேய்த்து வைத்தவள், பின்பு ஷாம்பூ செய்து அலசினாள்.

நிதானமாய் கோதி, கூந்தலை உலர்த்தியவளுக்கு ஏனோ கண்கள் செருகின.

ஓய்வெடுக்கக் கூடிய நாள் என்பதால் படுத்தும் விட்டாள்.

ஒரு மணி நேரங் கழித்து, விழித்தபோது, உலகம் மேலும் பிரகாசமாகி இருந்தது போலொரு பிரமை! முகம் கழுவி, தளர்வாய் பின்னலிட்டவளின் பிம்பமும் கூட அழகு கூடியே தெரிந்தது.

வசதியை விட, இங்குள்ள மன நிம்மதிதான் அதற்கான காரணம் என்று முடிவு செய்தவளுக்குள் நேற்றிரவு அஞ்சுகம்மாவுடன் போனில் பேசிய ஞாபகம் -

"இப்ப உன்னோடு எடுத்த போட்டோவை பட்டு எனக்கு மெயில் செய்திருந்தான்டா, நிமலா. உன் அழகு கூடிட்டே போறதாய் பட்டு சொல்றது உண்மைதான். பட்டும் ரொம்பத் தெளிவாய் தோணறா."

''அப்படியாம்மா? நல்லது.''

''புத்திசாலிப் பெண்களின் அழகு குறைவதேயில்லடா. பொறுப்பாய் நீ செய்த வேலையெல்லாம் கேட்டதுமே உன் அறிவும் எனக்குத் தெரிஞ்சிடுச்சே...''

''ரொம்ப புகழறீங்கம்மா... என் கடமையைச் செய்றேன்...''

''அக்பர் பீர்பால் பற்றி உனக்குத் தெரியும் - ஆனா நான் சொல்லப் போகும் கதையை கேள்விப்பட்டிருக்க மாட்டே நிமலா.''

''சொல்லுங்கம்மா.''

''பொன்னைப் புடமிட, புடமிட அது மின்னுவது போல அக்பரின் சோதனைகள் பீர்பாலின் சாதுர்யத்தை வெளிப்படுத்தும். ஆனால் அன்று மன்னர் கேட்டது ஒரு படி காளை மாட்டுப் பால் - அதுவும் ஒரு வாரத்திற்குள்!''

அது தான் கேள்விப்படாத குட்டிக் கதை என்பதால் ஆர்வமானாள் நிமலா.

''புருஷனின் வாடலைக் கண்டு, அதற்கான காரணத்தை அறிந்து கொண்ட பீர்பாலின் மனைவி, அவனுக்குத் தைரியம் சொன்னதோடு, காரியத்திலும் இறங்கி விட்டாள்!

மறுநாள் நன்கு உடுத்தியவள், அரண்மனை அருகே உள்ள படித்துறையில் துணி துவைக்க ஆரம்பிக்கிறாள்.''

''அதாவது மன்னரின் பார்வையில் படுவது போல?''

''ஆமாம் அதைப் பார்த்த அக்பர் - 'வசதியான நீ ஏனம்மா இவ்வளவு பெரிய மூட்டைத் துணிகளை தனியே துவைக்கிறாய்?' என்று விசாரிக்கிறார்.



'எதிர்பார்த்த நாளிற்கு முன்பே என் கணவர் பிரசவித்ததால், துணைக்கு யாருமில்லை அரசே. அதுதான் நானே வந்தேன்' பாவமாய் பதிலளிக்கிறாள் பெண்.

'என்ன கதை இது?' கோபமானார் அக்பர்.

'காளை மாடு பால் தருமாயின், ஆண்கள் ஏன் பிரசவிக்கக் கூடாது?'

துடுக்காய் வந்த பதில் கேள்வியில் மன்னருக்குப் புரிந்தது - இது பீர்பாலின் மனைவிதான் என்று!''

''சபாஷ்... சரியான ஜோடி!''

மறுநாள் பீர்பாலிடம் அவனது மனைவியைப் பாராட்டிய அரசர் -

'வீட்டில் இப்படி ஒரு புத்திசாலிப் பெண் இருப்பதால் தான் நீ இவ்வளவு அறிவும், திறனும், துடிப்புமுள்ளவனாய் இருக்கிறாய்' என்று பரிசுகளை அள்ளித் தந்தாராம்.''

கதை சுவாரஸ்யந்தான் என்றாலும் அது எந்தத் தொடர்பில் தனக்குச் சொல்லப்பட்டது என்ற கேள்வி இவளுக்குள்.

''பானை பிடித்தவள் பாக்கியசாலின்னு நம் பக்கமும் சொல்வோமே? வர்ரவளின் சாமர்த்தியத்தைப் பொறுத்துதான் ஒரு மனிதனின் சந்தோஷமும் வெற்றியும். கல்யாணத்தப்ப பெண்ணின் அழகை எடை போடறவங்க, அவ குணத்தை, திறமைகளையும் கவனிக்கணும் - நீடித்த சந்தோஷ வாழ்விற்கு அதுதானே அடிப்படை?''

''ஆமாம், ரொம்ப சரிதான்'' என்று அப்போது ஒத்து ஊதிய நிமலா, இப்போது மறுபடி அக்கதை தனக்கு ஏன் சொல்லப்பட்டது என்று யோசித்தாள்.

மதிய சமையலில் உதவ, கீழே இறங்கியவளிடம் யோசனையோடு நெருங்கத் தொடுத்த ஜாதிப்பூ சரத்தைத் தந்தாள் பத்மா.

''நானே தொடுத்தேன் - எப்படி?''

''அழகான வேலை. தலைப் பின்னி உனக்கு வச்சு விடறேன் பட்டு.''

''நோ நோ - இது பழமாட்டம் இருக்கற உங்களுக்கு!''

''அதென்னப் பழம்? ஞானப்பழமா?'' கிழவி குரலில் பேசிக் கேட்டாள் நிமலா.

''உங்களுக்கு புத்தியும் உண்டுதான். ஆனால் இந்த கமலா ஆரஞ்ச் கலர் புடவையில் இப்பதான் பறிச்ச பழ மாட்டம் இருக்கீங்க'' என்றபடி இளையவள் பூச்சரத்தை தன் கூந்தலில் செருக, நிமலாவிற்கு என்ன சொல்வ தென்று தெரியவில்லை.

பாட்டியும் பேத்தியுமாய் தன் தோற்றம், திறமை பற்றி அடிக்கடி பேசுவது ஏனோ இவளை நெருடியது.

''என்ன - சமையலறையிலிருந்து அபாரமான வாசனை கிளம்புது? பிரியாணிக்குக் கூட்டியாச்சு போல?'' நகர்ந்தாள்.

''செய்முறை குறிப்போடு, அத்தனை சாமானையும் அளந்து எடுத்து வச்சிருந்தீங்களே - ஆச்சி சொன்னது போல பொறுமையாய் வதக்கி தம் கட்டியாச்சு.''

''பிரமாதமாய் இருக்கப் போகுது - வாசனையே சொல்லுதே. தொட்டுக்க, இஞ்சி இனிப்புச் சட்னி, முட்டை எல்லாம் ரெடி பண்ணுவோம் வா.''

எல்லாரும் ரசித்துச் சாப்பிட்டு படுத்து விட, ஏற் கெனவே உறங்கியிருந்தவள் வேறு வேலையில்



இறங்கினாள். உள்பாவாடைகளின் விளிம்பில் பெண் களுக்கு பூ வேலை செய்யக் கற்றுத் தந்திருந்ததால், பல உற்சாகக் கைகளின் முயற்சியில் பல பாவாடைகளும், பூவேலையுள்ள கைக்குட்டைகளும் தயாராகியிருந்தன.

ரவிக்கைகளை வெவ்வேறு அளவில் வெட்டி வைத் திருந்தவள் அவற்றுக்கான சில டிஸைன்களை தனியே எடுத்தும், வரைந்தும் வைத்தாள்.

அடுத்தக் கட்டத்திற்குப் போவதற்குப் பெண்கள் தயார்.

தயாரான பொருட்களை விற்றுப் பணம் வந்தால், அதைக் கொண்டு மேலும் துணிகள் வாங்கலாம்.

அடுத்த 'லாட்'டில் அதை உருவாக்கியவர்களின் கைக்கு உதவிப் பணம் கூட போக வாய்ப்புண்டு.

அதற்குள் பெரியம்மாவும் இங்கே வந்து விடுவார்கள்... இவளது அறைக் கதவு தட்டப்பட்டது.

''யாரு?''

''வேற யார் - நான்தான்.''

உள்ளே வந்து பத்மா இவளது புது வேலைகளைப் பார்த்தபடி -

''எல்லாம் சரிதான் - திறமையோடு திட்டமிட்ட உழைப்பும் உள்ள நீங்க ஏன் நிமலாக்கா தயங்கறீங்க?'' கேட்டாள்.

''என்ன சொல்றே பட்டு?''

''துணிச்சலாய் வந்து நின்று பேச மாட்டேங்கறீங்க. நிருத்தான் முதல் ஷியாமாக்கா வரை - எல்லாரிடமும் என்ன பயம் உங்களுக்கு?''

நிரஞ்சனின் அறையிலிருந்த படத்தைப் பார்த்து அவள் நிரஞ்சனின் மனைவி என்று தான் அனுமானி தைச் சொல்லி - தன் 'ஞானப்பெண்' பட்டத்தை இழக்க விரும்பாதவள் -

''அவங்க பெரிய இடத்துப் பெண். அவங்களுக்கு சமமாய் நிற்க முடியாதே நான்? ஒதுங்கி நின்றேன் அவ்வளவுதான்'' சமாளித்தாள்.

''பணக்கார குடும்பத்தில் பிறந்து, வசதியாய் நீங் வளரலைன்னாலும் உங்களுக்கு என்ன குறை?'' என்றவளின் கைகளை பாசம்மிக நிமலா பற்றிக் கொள்ள பத்மா கண்களை உருட்டினாள் -

''அச்சச்சோ மறந்துட்டேன்... இப்ப நான் இங்க வந்தது எதுக்குத் தெரியுமா?''

''எனக்கு ஞான திருஷ்டியெல்லாம் கிடையாதே?''

''ரைட். உங்களை நிருத்தான் பார்க்கணுமாம்.''

அதுவரை இயல்பாய் சிரித்துப் பேசியவள் சட்டென இறுகினாள்.

''என்ன விஷயமாய்?''

''எனக்குந்தான் ஞானதிருஷ்டி வரமில்லை! நான் டி.வி.யில் ஒரு படம் பார்க்கலாம்னு இருக்கேன். அப் பிறகு... அத்தான் என்ன பேசினாங்கன்னு எங்கிட்ட சொல்வீங்கதான?''

பத்மா போய்விட தன் தோற்றத்தை சற்று திருத்தியவள் நிரஞ்சனின் அறைக்குப் போய், அவன் காட்டிய நாற் காலியில் 'பிகு' பண்ணாமல் அமர்ந்து கொண்டாலும் உள்ளே பதட்ட பந்துகள் உருண்டன!



அவனுக்குள்ளும் ஏதோ அவஸ்தை போலும்...

மௌனம் அவர்களுக்கிடையே தானும் நின்று முறைத்தது!

''உன்னிடம் ஒரு... பெரிய கோரிக்கையை வைக்கப் போறேன் நிமலா. அதிர்ச்சி அடையாமல் நிதானமாய் கேட்டு, முடிவெடு -

''என்ன?''

''சொல்லுங்க.''

''நீ என்னை... நாம் கல்யாணம் செய்துக்கணும்.''

போன முறை சுற்றி வளைத்தவன் இம்முறை நேரே சொல்லிவிட, இவள் உறைந்து உட்கார்ந்திருந்தாள்!



# 12

இந்த எண்ணந்தான் கடந்த சில நாட்களாய் இவன் மனதில் ஓடினதோ?

அதுதான் அந்த வினோதமான பார்வையா?

அஞ்சுகம்மா 'புத்திசாலி மனைவி' பற்றி கதை சொன்னதெல்லாம் இதற்காகத்தானா?

பட்டுவும், பிற பெண்களும் தன்னிடம் இதம் பதமாய் பழகுவது கூட இவனது இந்த நோக்கம் புரிந்ததுதானோ?

புத்தி பலதை கணக்குப் போட்டாலும், வாய் விடையை உடனே சொல்லி விட்டது -

''ல்ல... அதெப்படி? நீங்க... என்னை... அப்படி யோசிக்கவும் முடியாதே...''

''தப்பாய் ஏதும் கற்பனை செய்ய வேண்டாம் நிமலா - அதாவது காதல் அப்படி இப்படின்னு. இப்ப நானிருக்கும் நிலைமையில்... என் நிலைமை மாற எனக்கு ஒரு மனைவி தேவை.''

இவளது மனம் விதிர்க்க, உடம்பு வியர்த்தது!

'வேலைக்கு ஆள் தேவை' என்று கடை வாசலில் மாட்டும் பலகை போல இதென்ன ஒரு அறிவிப்பு?

''உங்க நிலையில் இருப்பவர் என்னிடம் இப்படி பேசுவது முறையில்லை'' - துணிச்சலைத் திரட்டிச் சொல்லி விட்டாலும் நிமிர்ந்து அவனை நோக்கும் துணிவில்லை.

''என் நிலை...? நான் மனைவியை இழந்தவன்னு சொல்றியா?''

''ல்ல... உயர்ந்த குடும்பமும் அந்தஸ்தும் உள்ளவர்னு..''

''நாம இருவருமே ஒரே நிலையில்தான் இருக்கோம், நிமலா?''

அவளது மௌனம் 'எப்படி?' எனக் கேட்டது.

''உனக்குப் பாதுகாப்பாய் தங்க, வாழ ஒரு இடமில்லை இப்போது. உன்னை கல்யாணம் செய்துகிட்டால் நானும் பாதுகாப்பாய் இருப்பேன்.''

''அதற்கு என்னை விடத் தகுதியான பல பெண்கள் இருப்பாங்க. கொஞ்சம் பொறுமையாய் இருந்தால், பெரியவங்க வந்ததும் நல்ல, பொருத்தமான பெண்ணாய் அவங்களே தேர்ந்தெடுப்பாங்க.''

''எனக்கு யார் பொருத்தம்னு தேர்வு செய்யும் தகுதி எனக்கிருக்குது. தவிர, என் முதல் கல்யாணம் பெரியவங்களின் தப்பான தேர்வு - இப்ப அந்த உரிமையை நான் விட்டுத் தரப் போறதில்லை.''



நிமலா மெள்ள நிமிர்ந்து, அவன் முகம் பார்த்து கேட்டாள் -

''அதே உரிமை எனக்கும் உண்டில்லையா?''

இவள் எதிர்பார்த்தது போல அவன் பின் வாங்கவில்லை.

''ஆனால் அதற்கான சுதந்திரம் உனக்கில்லை, நிமலா.''

இவளது அதிர்ச்சி விலகி, 'சுருக்'கென ஆத்திரம் முளைத்தது.

''அதாவது...?''

''நீ கல்யாணத்திற்கு மறுத்தால், தொடர்ந்து இங்கே இருக்க முடியாது!''

தன் கன்னங்கள் சூடாவதை உணர்ந்தாள்.

''இப்படி நீங்க என்னை மிரட்டுவது உங்க பாட்டிம்மாக்குத் தெரிந்தாலும். பட்டு... ஏன் எல்லாருமே உங்களை உயர்வாய் நினைத்திருக்க, நீங்க...''

கடினமான வார்த்தைகள் அவளுக்கும் தெரியும்தான் - ஆனால் பயன்படுத்தத் தயங்கினாள்.

ஆனால் அவனிடம் தயக்கமேயில்லை.

''போன தரம் நீ எனக்கு நன்றிக் கடன் பட்டிருப்பதாய் சொன்னதை மறந்துட்டியா நிமலா? அது என் குடும்பத்தாரிடம் என்னை ஒரு வில்லனாய் சித்தரிப்பதில் தீர்ந்துவிடுமானால், தாராளமாய் செய். தவிர, நான் உன்னைச் சிறை பிடித்துக் கூட்டி வரலை. ரஞ்சிதாவிடம் கூட நீ இங்கு வர வேண்டாம்னு தான் சொன்னேன். அவளது

வற்புறுத்தலில், பாட்டிம்மாவின் சிபாரிசில் வந்த நீ இங்கு இவ்வளவு நாளாய் ரொம்ப உபகாரமாய் இருந்தாலும், நீயும் நிம்மதியாய் பாதுகாப்பாய் உணர்ந்தாய். என்ன சரிதானே?''

இவளுக்கு வெளியே ஓடிப் போய் தனிமையில் யோசிக்க வேண்டும் போலிருந்தது.

அடைக்கலம் தேடி வந்த ஒரு அநாதைப் பெண்ணிடம் இப்படி ஒரு கோரிக்கை... அதுவும் நிரஞ்சனிடமிருந்து - ஏன்?

''உன் நிலையைப் பயன்படுத்தி உன்னை மடக்குவதாய் நீ அஞ்சலாம். ஆனால் அப்படியில்லை. எனக்குச் சரியாய் அதாவது இதமாய் கேட்கத் தெரியலை. ஆண்களுக்கும் நிராதரவான நிலை உண்டு. அப்படிப்பட்ட நிலையிலிருந்து நான் வைக்கும் கோரிக்கைதான் இது.''

அவன் எழுந்து இவளை நெருங்க, இவளும் எழுந்தாள். அதிர்ச்சியில் நடுங்கிய இவளது மெல்லிய விரல்களை சேர்த்து பிடித்தான்.

அந்த வெப்பத்தில் அவை சமாதானமாகின.

அசாதாரண கோரிக்கையைத் தொடர்ந்த அந்தத் தொடுதல், அவளை உலுக்கியது... அதே சமயம் மன உதறலை நீவி விட்டது!

''உத்தரவிடுவது போல கேட்டுட்டேனோ நிமலா? இதை ஒரு உதவியாய்தான் கேட்கறேன்.'' அவனது குரல் தழைந்திருந்தது.

''கல்யாணம்ங்கறது... உதவியா?''

''இந்த சந்தர்ப்பத்தில் அப்படித்தான். இந்த பாதுகாப்பான இடத்தில் நீ தொடர்ந்து தங்கலாம்... உரிமையோடு - தவிர...'' சற்று தயங்கியவன் தொடர்ந்தான் -



நான்... உன்னிடம் வேறெந்த உரிமையும் எடுத்துக்க மாட்டேன்.''

புரிந்தும் புரியாமல் தலை குனிந்திருந்தாள்.

''ஏதும் சொல்ல விரும்பறியா நிமலா?''

''இது ஒரு நாடகமாய்...?'' இரும்குழ்றீங்க?''

''பெயரளவில் நான் கணவனாய் இருந்தாலும் போதும். அதில் எனக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

திருமணம் என்ற புனித பந்தத்தை, புதிராய் அல்லவா காட்டுகிறான்?

''உங்களுக்கு ஏற்ற பெண்கள் பலர் இருப்பாங்க. அநாதையான என்னைப் போய்...''

''தோட்ட மூலிகையின் அருமை வீட்டுக்காரங்களுக்குத் தெரியாது-ன்னுவாங்க. முதலில் நானும் உன்னை அந்த கோணத்தில் பார்க்கலை. இங்கே வந்த ஷியாமளாவின் அப்பா, உன்னை பார்த்து விட்டுப் பொறாமையால் காயவும்தான், என் கருத்தில் நீ பட்டாய். என் பிரச்சனைக்கு முடிவு நீதான்னு பட்டது.''

''சிரமமில்லாமல் வேலை முடியும்னு நினைச்சீங்க?''

''அநாவசியமாய் ஏன் சிரமப்படணும்? தொட்டி மீனை விட்டுட்டு கட்டு மரமேறி கடலுக்குள் வலை வீசப் போவானேன்?''

''ஆனால் கடல்மீன் உங்களைத் தேடி வந்ததே?''

அவன் முகம் பாராட்டுடன் மலர்ந்தது.

''ஷியாமா என்னைத் தேடி வந்த காரணத்தை யூகிச்சுட்டே - குட் - ஆனா அவ சுறா மீன்! சிக்கினவன்

காலி! பாட்டி பாராட்டும் புத்திசாலிப் பெண்ணான உனக்கு அது ஏன் புரியலை?

அஞ்சுகம்மா பேரனிடமும் பீர்பாலின் புத்திசாலி மனைவி கதையைச் சொல்லியிருப்பார் போலவே!

அதனால்தான் பெரியவரிடம் சொல்லுவதாய் மிரட்டியதை இவன் கண்டு கொள்ளவேயில்லை!

''ஷியாமளா என் மனைவியாய் வருவது... ஒரு வியாபாரம் போல - அதை நான் விரும்பலை.''

''அதை ஆசையாய் வந்த அவங்களிடமே நீங்க சொல்லலாமே?''

''அவ ஆசைக்கு எதிராய் பேசினால், அவளால் தாங்க முடியாது.''

''என்னைத் திடீர் கல்யாணம் செய்து கொண்டால்... அதைத் தாங்கக் கூடுமா?'' விடாமல் வாதம் செய்தாள்.

இத்தனைத் தைரியம் தனக்கு எப்படி வந்தது? ஆனால் பேசாமலும் இருக்க முடியாதே.

திடீர் புளியோதரை, பிரியாணி போன்றவை வாழ்வை சுலபமாக்குவது போல திடீர் கல்யாணமும் செய்யும் என்பது அவன் முடிவா? இந்த வேளையிலும் வேடிக்கையான ஒரு நினைப்பு அவளுக்குள்!

''என் இக்கட்டான நிலைமையைப் புரிஞ்சு... உன் சம்மதத்தைச் சொல்லு நிமலா... ப்ளீஸ்'' என்றவன் இவளது மெல்லிய கைகளைப் பற்றிய அழுத்தத்தில் அவனது அவசரம் புரிந்தது.

அதன் வெதுவெதுப்பில் புது பாதுகாப்பை உணர்ந்தாள்!

மூன்று வாரங்களுக்கு முன்பு நிராதரவாய் அவனிடம் உதவிக்கு நின்ற தன்னிடம், இப்போது அவன் கெஞ்சுவது



விதி வலியதுதான் போலும்!

இப்போது தான் சொல்லும் சம்மதம் நிரஞ்சனை இவளது சொந்தமாக்கி விடுமா...?''

அந்த எண்ணம் ஒரு பேரலையாய் எழும்பி அவளைச் சாய்த்தது.

''ம்ம்'' என்றாள் - அவனுக்கு மட்டுமே கேட்குமளவில்!



# 13

தன் அறைக்கு வந்து கதவை மூடிய பிறகே, உணர்வு பெருக்கில் தனக்கு மூச்சிரைப்பதை உணர்ந்தாள்.

தன் சம்மதம் எவ்வளவு பெரிய அசட்டுத்தனம் என்றும்! ஆனால் நிரஞ்சன் செய்தது அயோக்கியத்தனம் அல்லவா? வேறு ஒருத்தியிடம் இப்படி ஒரு கோரிக்கையை வைக்கக் கூடுமா?

'இந்த வாழ்வு ஒரு நாடகம். அதில் நீ என் மனைவி எனும் கதாபாத்திரத்தை ஏற்றுக் கொள்' என்று சில காலமே பழகிய ஒரு கௌரவமானப் பெண்ணிடம் அவன் நின்று பேசியிருக்க முடியுமா?

'மிக இக்கட்டான நிலைமை' என்றான் - சரி.

ஆக அந்த நிலை அவனுக்கு மாறியதும் தனது நிலை என்ன?

காதல் மணமும், பெரியவர்கள் சகல பொருத்தங்களும் பார்த்து இணைக்கும் இல்லறமுமே கிழிந்து

கந்தலாய் போகும் இந்நாளில்... இரண்டும் கெட்டானாக இந்த கல்யாணத்தின் நிலை என்னவாகும்?

நினைப்பு பயமுறுத்தியது.

கதவைத் தட்டி விட்டு, மெதுவே உள்ளே வந்த பட்டு, அங்கிருந்த சிறு மேஜையில் தான் எடுத்து வந்த உணவு - தட்டை வைத்தாள்.

"தலைவலியாமே நிமலாக்கா? உங்களைத் தொந்தரவு செய்யாமல் வரணும்னாங்க அத்தான். சாப்பிட்டுட்டுப் படுங்க."

இத்தனைப் பரிவான சூழலில் இருப்பது கொடுப்பினை தான்!

ஆனால் அடிப்படை சரியில்லையே.

எந்தச் சூழ்நிலை தன்னை இப்படியொரு முடிவு எடுக்கத் தூண்டியது என்பதை நிரஞ்சன் உடைத்துச் சொல்ல வில்லையே?

அவனது கோரிக்கை தவறுதான்.

ஆனால் அது பற்றி மனம் விட்டு விவாதிக்க, இவளுக்கு ஆலோசனை தர இவளுக்கென்று யாருமில்லையே...

அந்த நினைப்பில் அவளது கண்கள் கரித்துப் பொங்கின.

தனது பாட்டியிடம் அவன் கலந்து பேசியிருக்க வேண்டும். அனுதாபம் கொண்டு, தன்னை இங்கு வேலைக்கு அழைத்த அஞ்சுகம்மா, பேரனோடு சேர்ந்து தன்னை இவ்வகையில் பயன்படுத்த நினைப்பது துரோகமில்லையா?



இதில் தான் நன்றி மறக்கக் கூடாது என்று வேறு மிரட்டினானே!

சிதம்பரத்திடம் சிக்கிக் கொண்டது போலத்தானோ இதுவும்?

அதில் இவளுக்கு ஆசைநாயகி வேடம்...

இப்போது வரவிருப்பது கௌரவமான பாத்திரம் - மனைவியாக!

ஆனால் 'வேறு எந்த உரிமையும் எடுத்துக் கொள்ள மாட்டேன்' என்றானே?

இனந்தெரியாத ஒரு பயங்கரம் தன்னைச் சூழ்வதை உணர்ந்தாள். அது தன்னைக் கவ்விக் குதறும் முன் தப்பி விடலாமா?

வேறு ஒரு கௌரவமான இடமும் வேலையும் தேடுவது அத்தனை சுலபமா?

முன்பைப் போல தன் உடமைகளை எடுத்துக் கொண்டு கிளம்பலாம் - என்ற நினைப்பு கூட அவளுள் வராமல் முரண்டியது!

ஏன்?

இங்குள்ள சௌகர்யமா?... இல்லை இந்த வீட்டில் அனுபவித்த சந்தோஷத்தை பாதுகாப்பை இதுவரை வேறெங்கும் சுகித்ததில்லை. இங்கு தான் பயனுள்ளவளாய் இருப்பது - அது தனி திருப்தி!

ஆனால் மனம் இங்கிருந்து கிளம்ப மறுப்பதற்கு வேறு ஒரு காரணமும் இருப்பதாய் தோன்ற... அதைத் தேடித் துழாவினாள்.

தெளிவாய் புலப்படவில்லை.

நம் மூக்கினால் ஒரே சமயத்தில் இரு முரணான வாசனைகளை முகர முடியாது. ஆக அது மணத்தை நுகர,

அந்நேரம் துர்நாற்றமும் இருந்தால் அதை உணர முடியாதாம் -

அது போலத்தான் நிரஞ்சனின் மனைவியாகப் போகும் எண்ணம் அவளில் வியாபித்து, மற்ற எதையும் ஆராயக் கூடாதபடி அவள் புத்தியை மழுங்கடித்திருந்ததோ?

அன்றிரவு முழுக்க அரைகுறை உறக்கத்தில் நீந்தியவளுக்கு விடிந்ததும் மனதில் எழுந்த முதல் எண்ணம் -

'நிரஞ்சன் தன்னைக் கல்யாணம் செய்யக் கேட்டது கனவா - அல்லது தன் வெட்கங்கெட்ட கற்பனையா - என்பதுதான்!

அது நிஜந்தான் என்பது உறைக்க அடுத்ததாய் கிளம்பியது -

'இனி, அவன் முன்பு எப்படி போய் நிற்பது' என்ற குழப்பம்! வீட்டு வேலைக்காரர்களிடம்... பத்மாவிடம், இச்செய்தி பரவி இருக்குமா? அவர்களை எப்படிச் சமாளிப்பது?

இவர்கள் இருவருக்கிடையே காதல் தோன்றிவிட்டதென அனுமானித்து அவர்கள் நமட்டாய் சிரித்து, சீண்டினால் தன்னால் அதைத் தாங்கக் கூடுமா?

குன்றி நிற்க நேருமே...

வழக்கமாய் தனக்கான காபியைக் கலந்து கொண்டு, தோட்டத்தைச் சுற்றி வந்து, பூப்பறித்து, காலை உணவோடு தன்னையும் தயார்படுத்துபவளுக்கு இன்று எதுவும் முடியவில்லை.

கால்கள் அறையை விட்டு வெளியேற மறுத்தன!



மாறாக, நிரஞ்சன் தங்களது நேற்றைய சம்பாஷணையைப் பற்றி எவரிடமும் சொல்லவில்லை எனில் - தான்,

'எங்கப்பன் குதிரில் இல்லை' என்பது போல எதையும் உளறி வைக்கவும் கூடாது!

நேற்று மாலையிலிருந்து அறையிலேயே இருந்ததால், அதுதான் கேள்விகளுக்கு இடம் தரும் என்று முடிவு செய்தவள் கீழிறங்க, வழக்கமான சிநேக பார்வையும் முறுவலும் இவளுக்குக் கிடைத்தன -

''தலைவலி தேவலைங்களா? - தலைக்கு ஊத்தினவங்க, முழுக்க உலர்த்தல போல...''

'ஆமாமா' - என்று இவளும் அதையேப் பிடித்துக் கொண்டாள்!

''காபி எடுத்துட்டு வரலாம்னுதான் இருந்தேன். இன்னும் உறங்குதீங்களோனு...'' வேலைக்காரி அக்கறையாய் சொன்னாள்.

வந்த பத்மாவும் அதையே கேட்க, நிம்மதி பெருமூச்சுடன் நிமலா தன் அன்றாட வேலைகளில் இறங்கினாள்.

இவள் வெட்டிய ரவிக்கை மாடல்களை ஆதாரமாய் வைத்து, தாங்களும் வெட்டப் பழகியவர்களுக்கு அது சுலபமாகவே வர, தையல் வகுப்பு வெகு ஆர்ப்பாட்டமாய் போனது!

கற்றுக் கொண்ட உற்சாகத்தில் பெண்கள் திளைக்க, புரிவது போல கற்றுக் கொடுத்த பெருமிதத்துடன் இவள், அடுத்த வேலையான சமையலில் இறங்கினாள்.

சாம்பார் சாதம், சேனை வறுவல், பச்சடி என்று அதுவும் கச்சிதமாய் அமைந்து விட, தன் அறைக்குப் போவதற்காய் ஹாலிற்கு நடந்தவளின் முகம் சிறுத்தது!

அத்தனைக்குக் காட்டமான முகத்துடன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் ஷியாமளா!

ஓவியத்தில் மலர்ந்த பூ போலிருந்த குண்டு முக இப்போது சிவந்து கிடந்தது. அவள் நடையின் வேக 'செய்தி' அவளை எட்டி விட்டதை நிமலாவிற்குச் சொ னது!

ஷியாமளாவிடமிருந்து தப்புவதற்காய் முதலி அவள் காதிற்கு விஷயத்தை நிரஞ்சன் அனுப்பியிருக் வேண்டும்!

ஷியாமளாவும் அவளது தந்தையுமாய் தரும் ஏதே ஒரு நெருக்கடியிலிருந்து தப்ப வேண்டி, நிரஞ்சன் த பின்னே ஒளிந்து கொண்டிருக்கிறான் -

அவனை நினைத்தாலும் பாவமாய்தான் இருக்கிற

நிமலா ஒளிந்தது போல நிற்க, வேகமாய் ஹாலி வலது புறமிருந்த நிரஞ்சனின் அறைக்குள் நுழைந் ஷியாமளா, அந்த அறைக்கதவை அறைந்து சாத்தினா

இவளுக்கு மேலும் பரிதாபமானது.

மூடிய கதவை மீறிய ஷியாமளாவின் குரலை கேட்டபடி மாடிக்கு ஓடியவள், முகம் கழுவித் துடை தாள். துளி ஒப்பனையை முடித்து கண்ணாடி மு நின்றவள், கட்டியிருந்த புடவையை உருவினாள்!

திண்டுகல்லில் ரஞ்சிதாக்கா தந்திருந்த வயலட் நிற மைசூர் ஜார்ஜெட்டைப் பிரித்தாள். பொடி தங்க கட்டங்களுடன் பளபளத்ததை ஒரே நிமிஷத்தில் சுற்றி கொள்ள, அது அவளுக்கு அமர்க்களமாய் பொருந்தியது! ஏற்கெனவே போட்டிருந்த கருநீல ரவிக்கையும் கண்ண உறுத்தவில்லை.



விறுவிறுவென இறங்கி மறுபடி நிரஞ்சனின் அறைக்கு முன்னே நிற்க, மூடிய கதவை மீறி ஷியாமளாவின் கூச்சல் கசிந்தது -

''என்னிடமிருந்து தப்புவதாய் நினைச்சு... எதில் சிக்கி... பாழுங்கிணற்றில் விழப் போறியா நிரு?''

ஆத்திரத்தில் அவன் குரலும் உயர்ந்திருந்தது -

'பாழும் கிணறா? நிமலாவை இங்கே நீ பார்த்ததும் பொறாமையில் பொசுங்கிக் கேட்கலை - 'மாடல் போலிருக்கும் இவ இந்த காட்டில் என்ன பண்றா?'ன்னு?''

'பட், ஷி இஸ் எ நோபடி! பார்க்கக் கண்ணுக்குக் குளிர்ச்சி - ஆனா உயர்தர படிப்பு, கௌரவமான குடும்பம், அந்தஸ்து, பணம் - ஷி ஹாஸ் நத்திங்.''

''என் பட்டியலைக் கேளு. பொறுப்பான திறமை, அலட்டாத புத்திசாலித்தனம், குறையாத குணம், என் மீதும் என் குடும்பத்தின் மீதும் அளவில்லாத அன்பு, கடைசியாய் அலுக்காத அழகு... போதாது? எனக்குப் போதும்!'

அதற்கும் மேல் தாள முடியாத நிமலா கதவைத் தள்ளி திறந்தாள்.

''பசிக்குதுன்னீங்களே நிரஞ்? சாப்பிட வாங்க... ஓ ஷியாமளா? நீங்களும் சாப்பிட்டுட்டு போகலாமே?''

உள்ளே நின்றவளின் கண்கள் இவளை அளந்து, பின் வெறித்தன. விலை உயர்ந்த உடையில் பொலிவும் அந்தஸ்துமாய் நின்ற நிமலா, வெகு இயல்பும் உரிமையு மாய் நிரஞ்சனை அழைத்தது. ஷியாமளாவிற்குள் எரிந்த பொறாமைக் கங்குகளை பலக்க விசிறி விட, அதன் வெக்கைத் தாளாமல் அங்கிருந்து கிளம்பினாள் அவள்!



# 14

சாப்பிட்டுக் கொண்டிருந்த நிரஞ்சனுக்குப் புரைக் கேறியது! அதற்குக் காரணமான தன் சிரிப்பை அடக்கிக் கொண்டவன் நீரெடுத்துப் பருகினான்.

''நீ இவ்வளவு பிரமாதமாய் நடிப்பேன்னு தெரியாது, நிமலா.''

நேற்றிரவு வேதனையில் வதங்கியிருந்த அவன் முகத்தின் உற்சாகத்தை ஓரக்கண்ணால் ரசித்தவள் பதிலடித்தாள் -

''உங்களுக்கு இவ்வளவு சரளமாய் பொய் சொல்ல வர, எனக்கு நடிப்பு வராதா என்ன?''

அறியாத ஆர்வத்துடன் கேட்டான் - ''பொய்யா... என்ன பொய்?''

''பொய்ப் பட்டியல்! பொறுப்பான திறமை, அளக்காத அன்புன்னு...'' அவளுக்குத் தொடரவும் கூச்சமானது.

''அதெல்லாம் உண்மைதானே? ஏறக்குறைய ஒரு மாசமாய் உன்னைக் கவனித்து இட்ட பட்டியலது - அதான் ஷியாமாக்கு அத்தனை எரிச்சல் - சரியாய் அந்த நேரம் நீயும் ஜெகஜ்ஜோதியாய் என் அறைக்குள் நுழைஞ்ச. கச்சிதமாய் விட்ட வசனம்... என் பட்டியலில் நான், 'எதையும் சமாளிக்கும் சாமர்த்தியத்தை' சேர்த்திருக் கணும்.''

ரசித்து சிரித்தவன், உணவை அத்தனை ருசித்ததாய் தோன்றவில்லை.



''சரியாய் சாப்பிடலை நீங்க.''

''போதும் நிமலா - நாடகத்தை ரொம்ப நீட்டாத! நேற்று என் கோரிக்கையை ஏற்றதற்கு என் நன்றி. தக்க சமயத் தில் வந்து என்னைக் காப்பாற்றினதற்கும் இன்னொரு பெரிய நன்றி! ஒரு வாரத்துக்கேனும் இதை நினைச்சு நினைச்சு சிரிப்பேன்னு தோணுது.''

ஆக எல்லாம் நாடகந்தான் - இவனைக் கட்டிக் கொள்ள சம்மதித்ததை விட, ஷியாமாவிடமிருந்து காத்ததிற்குத் தான் பெரிய நன்றியாம் - உள்ளே எரிந்தது!

கை கழுவி வந்தவனிடம் சற்று விறைப்பாகவே விசாரித்தாள் -

''வீட்டில் உள்ளவங்களிடம் எப்ப சொல்றதாய் உத்தேசம்?''

''அடுத்த வாரம் பாட்டிம்மா வந்திடுவாங்களே... அதுவரை பொறுக்கலாம்னு நினைச்சேன். நாம் என்ன பேசினோம்னு துளைத்த பட்டுவிடம், உன் இல்லத்திலிருந்து உன்னை வரச் சொல்வதாய் ஏதோ சமாளித்தேன் - சரிதானே?''

அதி முக்கியமான முடிவை சர்வாதிகாரியாய் தானே எடுத்தவன், இப்போது பரம சாதுவாய் தன் கருத்தைக் கேட்பதில் இவளது எரிச்சல் எகிறியது!

''இன்று உன் மனம் மாறி, தந்த அரைகுறை சம்மதத்தை வாபஸ் வாங்கிடுவியோன்னு கொஞ்சம் பயம்தான்.''

''அதற்கு வழியிருந்தால்... நான் நேற்றே கிளம்பியிருப்பேனே? வேற போக்கிடம் இல்லாமல் மாட்டிகிட்டேன்.''

''ஸாரி நிமலா... இவ்வளவு வெறுப்புடன், சம்மதிச்சேன்றது... உன் வாழ்வை தியாகம் பண்றதா படுதா?''

''தியாகம் - ரொம்ப நாடகத்தனமான வார்த்தை! இ புது மாதிரியான உடன்படிக்கைன்னு வைக்கலாம். புடவையை மாற்றணும்... பட்டு பார்க்கும் முன்...'' என்றபடி விலக, சற்று முன் அவனில் பொங்கி வழிந் சிரிப்பு, வற்றி வறண்டிருந்தது!

குடை வடிவ உள்பாவாடைகள் உருவாகிய வேகத்தி நிமலா மலைத்துப் போனாள்.

ஒரு பாவாடைக்கான ஏழு துண்டுகளை ஒருத்தி கணக்காய் வெட்டிப் போட, ஏழு பெண்கள் ஒவ்வொன்றிலும் கைவேலையாய் விளிம்பு வைக்க, மற்றொருத்தி அவற்றைக் கச்சிதமாகப் பொருத்தினாள்!

சி.டி.யில் பாடல்களை சுழல விட்டு விட்டு, அக்கம் பக்கம் திரும்பாமல், பேசி சளசளக்காமல் கருத்தாய் வேலை நடந்தது!

இவள் பாராட்ட, அவர்களும் உற்சாகமாய் விளக்கினார்கள் -

''நீங்கதானே சொன்னீங்க? சாதா பாவாடை நூறிலிருந்து கூட இருவது ரூபாய் வரை விற்கும்ன்னால் வேலைப்பாடானதின் விலை இருநூற்றைம்பதுன்னு? டவுனிலிருந்து ரஞ்சிதாம்மா ஆர்டரும் பிடிச்சுத் தந்திருக்காங்க - ஒரு நாளுக்கு நாலு தயாரானாலே ஆயிரம் ரூபாய். முடிந்ததை செய்வோம்னு இறங்கிட்டோம். சில துணிகளைக் கையோடு எடுத்துட்டுப் போய், பிள்ளைக பாடம் படிக்கற வேலையில பக்கத்தில் இருந்தபடி முடிச்சிடறோம்.''



''ரொம்ப நல்லது.''

''எங்க வீட்டு நிலவரமும் இப்ப நல்லாத்தாம்மா இருக்குது. வெட்டிப் பேச்சில்லாம வீண் விவகாரமும் இல்லைல்ல?''

''இந்த வேகத்திற்கு நம்மிடம் இருக்கும் துணி தாக்குப் பிடிக்காதே?''

''வேண்டிய துணியோட ரஞ்சிதாம்மா வர்றாங்களாம்ல? நாம முடிச்ச உருப்படிகளைக் கையோட அவுக எடுத்துட்டுப் போயிறட்டும்.''

இவளுக்குள் ஆச்சரியமான ஆனந்தம் பரவியது.

சந்தித்த அன்றே தன்னிடம் வெகு பிரியம் காட்டிய ரஞ்சிதாவுடன் அவ்வப்போது போனில் பேசுவது உண்டென்றாலும் மறுபடி நேரில் பார்க்க ஆசைதான். அவள் வருவதை ஏன் யாரும்... அதாவது பட்டு தன்னிடம் சொல்லவில்லை?

''எனக்குத் தெரியாதே...'' என்றாள் சிறு குறையோடு.

''உங்களைக் குஷியில திகைக்க வைக்கணும்னு ரகசியமா வச்சிருப்பாங்க. எங்க ஓட்டை வாய் 'அவுட்' ஆக்கிருச்சே...''

''அப்ப களிமண்ணு நகை செய்றத கத்துத் தர டீச்சரம்மா வர்றதும் தெரியாதுங்களா?'' இன்னொரு அப்பாவி கேட்டு குட்டு வாங்கிக் கொண்டாள்!

முதலில் அந்த வகுப்புகளுக்கு டவுன் வரைப் போக வேண்டுமென்ற பட்டு, பிறகு அந்தப் பேச்சை எடுக்காதது - இதனால்தானா?

ஆதங்கம் இவளது மன ஓரத்தை அரித்தது!

'வேலை முடிஞ்சதும் அறையை பூட்டி சாவியை என்னிடம் தந்திடு கோமளம்'' என்றவள் தோட்டத்

திற்குப் போனாள். பயன்படாத சில நீண்ட கற்களை நிரஞ்சன் இருக்கைகளாக்கி ஆங்காங்கே இட்டிருந்தான் அதில் உட்கார்ந்தவளை இரு கைகள் தோள் பற்றி அணைத்தன -

''என்ன - வருத்தமா இல்லைக் கோவமா?'' என்ற விசாரிப்புடன்

திரும்ப, முகமெல்லாம் பல்லாய் நின்றிருந்தாள் பட்டு.

''அதெல்லாம் இல்லை...''

''ஆனா எனக்கு ரெண்டும் இருந்துச்சு. நீங்க ரொம்ப அழுத்தந்தான் திருமதி. நிரஞ்சன் அவர்களே!

நிமலா புது பதட்டத்துடன் குனிந்து கொண்டாள்.

''பாட்டியோடு, அத்தையும் மாமாவும் இந்தியா வரப் போறாங்கன்னதுமே எனக்குச் சந்தேகம். அவங்க போன வருஷம் வந்தாச்சே... இனி அடுத்த வருஷந்தானே வர்ற வழக்கம்னு. பாட்டி எக்ஸ்ட்ரா குஷியோட அடிக்கடி நிருத்தானிடம் பேச, கொஞ்சம் ஒட்டுக் கேட்டதில் உங்க கல்யாண 'ஸ்கூப்' கிடைச்சது! அதான் இந்தப் பழி வாங்கும் படலம்.''

''ரஞ்சிதாக்காவிற்கு?'' தடுமாற்றத்தோடு கேட்டாள். விஷயம் வெளியாகி விட்டதா என்ற வெட்கத்தோடு கூடவே நிம்மதியும் உணர்ந்தாள்.

''அவங்களுக்கும் விவரம் ஓரளவு தெரிஞ்சிருந்தது. எல்லாரும் என்னை சின்னப் பொண்ணு ஒதுக்கியிருந் தாலும் நீங்க 'குட் நியூஸை' எங்கிட்ட சொல்லியிருக் கலாம்... நான் ரஞ்சிக்கா வர்றதை உங்களிடம் தெரியப் படுத்தலைன்னதும் உங்க ஸ்ருதி எவ்வளவு இறங்கிடுச்சு?''



''ஸாரி பட்டு...'' என்றவளுக்கு அதற்கு மேலே என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'இதெல்லாம் வெறும் நாடகம் என்றும், நிரஞ்சன் தப்புவதற்காய் தான் சிக்கிக் கொண்டதையும் எப்படி இச்சின்னப் பெண்ணிடம் சொல்வது?

''நீ நினைக்கறது போலில்லை பட்டு...''

''பாட்டி நினைச்சால் அதை நடத்திடுவாங்க. எடுத்ததுமே, 'என் வீட்டு மருமகளாய் வாம்மா'ன்னு சொன்னால் மிரண்டிடுவீங்கன்னு.

'வேலை தர்றேன் - வா'ன்னு உங்களை மடக்கிட் டாங்க!''

ஆக இந்த திட்டத்தில் குடும்பமே சம்பந்தப்பட் டிருக்கிறது!

பாட்டியம்மாளோடு, நிரஞ்சனின் பெற்றோரும் வரு கிறார்களாமே?

''அத்தை மாமாவால் இங்கே அரை மாசத்திற்கு மேலே தங்க முடியாது - அதற்குள் என் விடுமுறையும் முடிஞ் சிடுமே... ஆக, நாம ஓரளவு ஷாப்பிங் செய்து வைப்பது நல்லதுக்கா.''

நிமலாவிற்கு அதிலெல்லாம் நாட்டமில்லை.

''இங்குள்ள மற்றவங்களுக்கு... இந்த விவரம் தெரியுமா பட்டு?''

''நான் வாய் திறக்கப் போறதில்லை. அதெல்லாம் பெரியவங்க வந்ததும் சொல்லிக்கட்டும். அதுவரை விஷயம் நம்ப சீக்ரெட்'' குதூகலித்தாள் இளையவள்.

மற்றவர்களுக்கும் இவர்கள் கல்யாண விவரம் தெரிய வரும்போது இந்த உற்சாகம் பரவும்தான். ஆனால் முடிவில் இது அத்தனையும் நாடகம் என்பது வெளி யாக... தலை மேலே தூக்கிக் கொண்டாடுபவர்கள், 'தொப்'பென விட்டுவிட, தனது வலி அதிகமாயிருக் குமே?

அப்போது தான் யார் தோளில் சாய்ந்து ஆறுதல் பட?

பயமும் துக்கமும் நிமலாவை அழுத்தின.

அதை யாரிடமும் பகிர முடியாத தனிமை மிரட்டியது.

அவிழ்த்து விடப்பட்ட நாய்கள் கூட இவளை அதிகம் கண்டு கொள்ளாமல் போக, இவள் தனியே நடக்க லானாள்.



# 15

'எனக்குமே யாருமில்லை - நானும் பாவந்தான்' என்பதான செய்தியைத் தன் மணிக்கண்களில் தேக்கி, நிமலாவை ஏறிட்டது அந்தக் குட்டி நாய்.

நீரில் நனைந்து, மண்ணிலும் புரண்டிருந்தது போல... திரிதிரியாய் அதன் பழுப்பு ரோமம் விறைத்திருந்தது. விலா எலும்புகள் தெரிந்த மெலிந்த தேகத்தோடு அதன் சின்ன வால் 'தயக்கமாய் ஆடிக் கொண்டிருந்தது.

''அடடா.. ஏன் தனியா இருக்க... உன் அம்மா எங்க?''

நிமலாவின் சிநேகக் கேள்வியில் அதன் வால் வேக மெடுத்தது!



வயிறு ஒட்டிய அச்சிறு ஜீவனைத் தொட்டு வருட, இவள் கை நீட்ட, அது பம்மவில்லை - உறுமவில்லை. மேலும் உற்சாகமாய் முனகி, இவள் கையை முகர்ந்து நக்கியது!

நிமலாவிற்கு கடவுளின் கருணையில் நம்பிக்கைப் பெருகியது.

'தனக்கென்று யாருண்டு?' - என்றுதான் மறுகிய சில நிமிடங்களிலேயே தன் முன் மாயமாய் இந்த குட்டி ஜீவனை அனுப்பி விட்டாரே!

அதை அள்ளியெடுத்துக் கொண்டு வீடு வந்தவள், தோட்டத்திற்காய் கொல்லைப்புறமிருந்த குழாய் நீரில் குட்டியை இதமாய் கழுவித் துடைத்தாள். சிறு கிண் ணத்து பாலை அது ஒரே மூச்சில் குடித்தாலும் அந்நேர மும் அதன் ஒரு கண் நிமலாவின் மீதுதான்! இவள் சற்று விலகினாலும்,

'என்னை விட்டுப் போய் விடாதே' என்பது போல நிழலானது.

இது அன்பா அல்லது வெறும் நன்றியா?

நிமலாவினுள் இக்கேள்வி எழும்பி, இதைத் தன் நிலைமையோடும் ஒப்பிட்டுப் பார்த்தது -

நிரஞ்சனை மணக்க தான் சம்மதித்தது வெறும் நன்றியாலா?

இல்லை என்று பட்டது!

ஓரம் நைந்த ஒரு மூங்கில் கூடையினுள் மிருதுவான துணி பரத்தி குட்டியை இட்டவள், அதன் கழுத்திற்கு ஒரு சிவப்பு பட்டு கயிறையும் கட்டினாள்.

மறுநாள் காலை எழுந்ததுமே வந்த முதல் நினைப்பு - 'குட்டி'தான்!

அதுவும் இவளைக் கண்டதும் உடம்பை முறுக்கி பிழிந்தது. வால் இருக்கிறதா இல்லையா என்றே தெரியா தளவு வேகமாய் ஆட்டியது.

பாலும் பன்னும் வைத்து அதனோடு சற்று நேர விளையாடியது நிமலாவை மிக ஆசுவாசப்படுத்தியது.

தையல் வகுப்பிற்கும் 'குட்டி' உடன் வந்தது.

சில நாட்களாய் அஞ்சுகம் அம்மாவிடமிருந்து அழைப்பு வராததும் கூட நெருடல்தான். ஒரு வழியா இவள் தையல் வேலையில் மும்முரமாக, வெளியே கா வந்து நின்ற ஓசை.

சற்று அச்சத்துடனேயே எட்டிப் பார்த்தவளின் முகம் மலர்ந்தது. வந்தது ஷியாமளாவோ அவளது கடுகடு தந்தையோ அல்ல, இவள் திண்டுக்கல் வந்திறங்கின அன்று வெகு ஆதரவு காட்டிய ரஞ்சிதா!

கைவேலையைப் போட்டு விட்டு நிமலா வெளியே பாய, 'குட்டி'யும் தடுமாற்றமாய் அவளைத் தொடர்ந்தது.

இவளுடையதை ஒத்த ஆர்வம் ரஞ்சிதாவிலும். இவளைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்தாள்.

அந்த நேசத்தில் நிமலாவின் கண்கள் பொங்கின.

''ரொம்ப சந்தோஷங்க்கா... உங்களைப் பார்க்கறது...''

''எனக்குந்தான் - வாழ்த்துக்களும் கூட'' என்று காதோரம் கிசுகிசுத்தவள், சாதாரண குரலில் தொடர்ந்தாள் -

''இந்த இடமே களையாயிடுச்சே நிமலா. நீ கடவுளின் வரம்தான்.''

ஓட்டுனர் பெரிய துணி பண்டல்களை இறக்க, பெண்களின் தையல் வேலையைப் பார்த்த ரஞ்சிதா,



''அற்புதமாயிருக்குது. என் சிநேகிதி நடத்தும் 'ஸேல்' லில் நமக்கு ஒரு ஸ்டால் கேட்டிருக்கேன். மூட்டை கட்டி வைங்க. பிறகு நான் வாங்கி வந்ததை எல்லாம் பார்க்கலாம்'' என்றபடி வீட்டினுள் நுழைந்தாள்.

கொறிக்க, குடிக்க பரிமாறிய நிமலா தாளாமல் சொல்லி விட்டாள் -

''எல்லாஞ் சரிக்கா. ஆனா பெரியம்மாவிடமிருந்து போன் வரலை. ஏன்னு சஞ்சலமாயிருக்குது.''

''வேற ஒண்ணுமில்ல - பாட்டிம்மாக்கு உடம்புக்கு முடியல...''

''அய்யய்யோ.''

''வைரஸ் காய்ச்சல் - பிறகு நிமோனியாவிற்குக் கொண்டு போயிடுச்சு. தவிர, நேரில் உன்னைப் பார்த்து வாழ்த்தணுங்கறது அவங்களுக்கு.''

''பெரியவங்களுக்கு உடம்பு சரியில்லாததை நிரஞ்சன் கூட என்னிடம் சொல்லலியே?''

''நீ கவலைப்படக் கூடாதுன்னுதான். மேலும் ஒரு வாரம் பிந்தி வருவாங்க - அவ்வளவுதான? சரி உனக்கென்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு - போன வாரம் சென்னை போயிருந்தேன்ல...?''

பரிசுப் பொருட்களைக் கடை பரப்பினாள் ரஞ்சிதம்.

அது உண்மையான அன்பும், உற்சாகமும் தான். ஆக இவர்களுக்கெல்லாம் இது பொம்மைக் கல்யாணம் என்பது தெரியாது போலும். இந்த உயர்ந்த குடும்பத்திற்குள் ஏன் இந்த அநாதைப் பெண் என்ற கேள்வி கூடவா யாரிடமும் எழவில்லை?

குவிந்திருந்த ஆடை, அலங்காரப் பொருட்களை வெறித்திருந்தாள் நிமலா.

மறுநாள் காலை 'குட்டி'யோடு விளையாடிய நிமலாவை, ரஞ்சிதத்தின் கேள்வி உலுக்கியது.

''நாயோடு இருக்கையில்தான் சிரிக்கிற... மற்றபடி ஏனிந்த வாட்டம் நிமலா?''

''அப்படியா?''

''கண்ணு நிரம்ப குழப்பம்.''

குனிந்த நிமலாவின் மோவாயைப் பற்றி நிமிர்த்தியவள்,

''இது ஆனந்த கண்ணீராவும் தோணலை... என்னன்னு சொல்லும்மா.''

எனவும் நிமலா கொட்டி விட்டாள்.

''எங்களுக்குள்ளே... பிரியம்னு ஏதும் விசேஷமாய் இல்லைங்கக்கா. அவர் என்னை என்ன காரணத்திற்காய் கல்யாணம் செய்ய நினைக்கிறான்றது புரியலை. எனக்குக் கனவாய் தோன்றுவதை நிரஞ்சன் ஒரு நாடகம்றார். இதில் நான் எப்படி சந்தோஷப்பட?''

''காதலைப் பற்றி உனக்கேதும் தெரியுமா நிமலா?''

கல் இருக்கையொன்றில் கை கட்டியபடி அமர்ந்தபடி கேட்டாள் மற்றவள்.

நிமலாவின் முகத்தில் வெட்கம் பரவவில்லை. சிறு நிராசையுடன் பதில் வந்தது -

''அதற்கெல்லாம் எனக்கு சந்தர்ப்பமில்லைக்கா.''

''காதலில் ஏற முடியாது;



இறங்க நிற்க, பறக்க முடியாது!

விழத்தான் முடியும்''ன்னுவாங்க! கேள்வி பட்டதில்லை நீ?''

''இங்க்லிஷில் 'ஃபாலிங் இன் லவ்' என்பது சரியான பதம்தான் போல?''

''நிரஞ்சன் ஏற்கனவே கல்யாணமானவன் என்றாலும் அப்போது அவன் காதலில் விழுந்தது போலத் தெரியவில்லை. ஆனால் இரு பெண்களுக்கு அவன் பேரில் ரொம்ப தடுமாற்றம். அதைக் காதல் எனலாமா - வயசுக்கோளாறா என்று தெளிவாய் சொல்ல முடியலை என்னால். ஆனால் ஒன்று ஷியாமளா...''

''இவருக்காய் இங்க இருந்திடத் தயாராய் இருக்காங்களே... அப்படீன்னா அது காதல்தானே?''

''ஆசைப்பட்ட பொருள் அல்லது நபரை அடைந்த பிறகும் தொடர்ந்தால், அது நேசம்தான். நிரஞ்சனால் ஈர்க்கப்பட்ட மற்றொருத்தி - குயிலி. முதலிலிருந்து சொன்னால்தான் உனக்குப் புரியும் நிமலா. நாம் உன் அறைக்குப் போயிடலாமா?'' இருவரும் எழுந்து நடந்தார்கள்.

அறைக் கதவைத் தாளிட்டு விட்டு அமர்ந்தனர்.

குட்டி இருவருக்குமிடையே ஓடி ஆடியது.

''குயிலியும் ஷியாமளாவும் நிரஞ்சனுக்கு தூரத்து உறவுதான். பண்ணையை ஒட்டித்தான் அவர்களின் நிலமும் இருந்தது. ஆக விவரம் தெரிந்த காலத்திலிருந்தே பழக்கமானவர்கள். நிரஞ்சன் ஷியாமாவிற்கு நாலு வயதிற்கு மூத்தவன். குயிலி ஷியாமளாவை விடவும் ஒரு வயசு கம்மி. எல்லோரும் சேர்ந்து ஒரே காரில்தான்

திண்டுகல் - பள்ளிக்குப் போய் வந்தார்கள். படிப்பிலும் விளையாட்டிலும் நிரஞ்சன் டாப்பர். கோ - எடுகேஷனுள்ள அப்பள்ளிப் பெண்களுக்கு அவன்தான் ஹீரோ. அந்த சேம்பியன் தன் உறவுப் பையன் என்பதில் ஷியாமளாவிற்கு ஏக பெருமை. மற்ற பெண்களின் பொறாமையும் கேலிப் பேச்சும் அவளுக்குப் பிடித்திருந்தது.

'நிரு என் முறைப் பையன் - இன்னும் அஞ்சு வருஷத்தில் எங்க கல்யாணம்' என்று கதை திரித்திருக்கிறாள்.

ஹீரோவின் ஜோடி என்பதால் சுலபமாய் ஹீரோயின் ஆகிவிட்ட ஷியாமளாவின் மேல் குயிலிக்குக் காட்டம் - வெளிக்காட்ட முடியாத ஒரு ரகசியக் காய்ச்சல். ஷியாமா போல அலட்டலாய் பேசத் தெரியாத அவள், வயதும் குறைச்சல் என்பதால் உள்ளுக்குள்ளேயே கற்பனைகளை வளர்த்து மறுகியிருக்கிறாள்.''

இப்போது நிமலாவிற்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஓரளவு யூகிக்க முடிந்தது.

''ஆடை, அணிகலன்களை உருவாக்கும் படிப்பிற்காய் மும்பை போன ஷியாமா இல்லாதது குயிலிக்கு நிம்மதியும் வசதியுமாய் போனது! நிரஞ்சன் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு நல்லூர் வந்தபோது குயிலி கல்லூரியில் அப்போதுதான் சேர்ந்திருந்தாள். தனக்குப் படிப்பில் ஆர்வமில்லை, நிரஞ்சனைத் திருமணம் செய்து கொள்வதுதான் வாழ்வின் நோக்கம் என்றவள் தன் பெற்றோரிடம் சொல்லி, அவர்கள் மாப்பிள்ளை வீட்டிலும் பேச, திருமணம் நிச்சயமாகி விட்டது.''

''ஷியாமளா...?''

''அவள் தன் கதையை பள்ளியில் பரப்பினதோடு சரி. வீட்டில் மூச்சு விடலை. தன் காதலுக்கு இப்படி ஒரு



எதிரி இருப்பதையும் அவள் உணர்ந்திருக்கலை. நிரஞ்சனின் தாத்தா அப்போ ரொம்ப சுகவீனமாய் இருந்தார். அவருக்கு தன் பேரனைக் கல்யாண கோலத்தில் பார்த்துவிட ஆசை.

ஆனா பாட்டிம்மா சரியாய் சொன்னாங்க -

'நிரஞ்சனுக்கு வயசும் அனுபவமும் போதாது. அவனுக்கேற்ற பொறுப்பான பண்ணை மனைவியாய் குயிலி இருப்பது சந்தேகம்'னு.''

''ஆனா யாரும் அதைக் கேட்டுக்கலை - ஏன்னா கல்யாணம் நடந்திருக்குதே?''

''இங்கேயே வளர்ந்த பெண் குயிலி, நிரஞ்சனுக்கு ஏற்ற மனைவியாய் இருப்பா. தவிர பண்ணை நிர்வாகம் தெரிஞ்ச மாமனார் இருப்பதும் ஒரு பலம்னு ஒரு எதிர்பார்ப்பு. சட்டுனு கல்யாணமாயிடுச்சு.''

''ஷியாமளா ஏதும் சொல்ல... செய்யலியா?''

''ஜெம்மாலஜி பற்றிய ஒரு டூருக்காய் வெளிநாடு போய் திரும்பின மகளுக்கு, தனராஜ் ஸார் சாவகாசமாய் விவரத்தைச் சொல்ல, ஷியாமளாவால் அதைத் தடுக்க முடியலை. ஆனா ரொம்ப கெட்டிக்காரத்தனமாய் தன் ஆசையை வெளிக்காட்டிக்காமல், தன்னை குயிலியின் சிநேகிதியாகவே காட்டிகிட்டா...''

''ஓஹோ?'' இதுவரை இயல்பாய் ஓடிய கதையில் கள்ளத்தனம் நுழைந்ததை நிமலா உணர்ந்தாள்.

''ஆக ஷியாமளா ஒரு நாடகத்தை ஆரம்பிச்சுட்டாங்க?''

''தான் ஒரு முக்கிய போட்டியில் ஜெயிச்சுட்டதாய் நினைச்சு பூரிப்பாய் இருந்த குயிலியின் மனசைக்

கொஞ்ச கொஞ்சமாய் மாற்றினாள் ஷியாமா. மும்பையிலிருந்து ஒழுங்காய் கடிதங்கள், புகைப்படங்கள், பரிசுகள் குயிலுக்கு வரலாயின.''

''குயிலி அவங்களை அதாவது சிநேகிதியை 'ஷியாம்'னு கூப்பிடுவாங்களா?''

''ஆமா. ஸிட்டி வாழ்க்கையின் வசீகரங்களை அவள் விவரிக்க, தன் நவநாகரீக வாழ்வு முறையை விரித்துக் காட்ட, குயிலிக்கு இப்போது நாட்டம் இங்கில்லை. தான் ஒரு கிராமத்தில் மாட்டிக் கொண்டதாய், கல்யாண பந்தத்தில் சிக்கி விறுவிறுப்பான ஒரு வாழ்வை இழந்து விட்டதாய் மறுக ஆரம்பித்தாள்.''

''அந்தக் கடிதங்களை குயிலி கைக்குக் கிடைக்காமல் தடுத்திருக்கலாமே?''

''இந்தக் கதையும், ஷியாமாவின் தந்திரங்களும் அப்போது எங்க யாருக்கும் தெரியாதே...? 'சட்'டென நடந்த நிரஞ்சனின் கல்யாணத்தின் போது வர முடியாத அவனது சில நண்பர்கள், அதாவது பள்ளிக்கால சிநேகிதர்கள் ஏறக்குறைய ஒரு வருஷம் கழித்து இவனைப் பார்க்க வந்தபோது பேசிய கேலி, சீண்டலில்தான் விஷயம் மெல்லக் கசிந்தது!

'ஷியாமாட்ட இருந்து நிரஞ்சை தட்டிப் பறிச்சிட்டியே'ன்னு அவங்க சீண்ட, குயிலி வெடிச்சிட்டா -

'ஷியாமா புத்திசாலி. போரடிக்கும் இந்த கிராம வாழ்விலிருந்து தப்பிச்சுட்டா. அவளை ஜெயிக்கிற துடிப்பில் நான் தோத்துட்டேன். ஒரு விவசாயியின் மனைவியாய்... என் லைஃபே போச்சு. ஷியாமா ஒரு இளவரசி



யாட்டம் வாழ்க்கையைக் கொண்டாடறா'ன்னு பொறுமித் தள்ளிட்டா.''

விக்கித்துப் போனாள் நிமலா.

நிரஞ்சனுக்கு எத்தனைக் கடும் அவமானம் அது...

''வருஷத்திற்கு ஒரு தரம் பண்ணைக்கு வரும் ஷியாமா, குயிலியோடு சேர்ந்து மதுரை, திண்டுக்கல்னு போனாலும் வாய் ஓயாமல் அலுப்பாளாம்.

'மும்பையில் செவன் - ஸ்டார் ஹோட்டெல்ஸ் உண்டு. அவற்றில் நுழைந்தால் சொர்க்கம் வந்துட்டது போலிருக்கும். ஒரு பகுதி தரை முழுக்க கண்ணாடி பாவி, அதற்குக் கீழே தண்ணீர் விட்டிருப்பாங்க. விளக்குகளால் வெள்ளியைக் கரைச்சு விட்டது போல ஜொலிக்கும் நீரில் தங்க மீன்கள் நீந்தும். அதைப் பார்த்தபடி நாம் கண்ணாடி மேல் நடக்கும் அனுபவம் அலாதி... நீ ஒருதரம் அதெல்லாம் வந்து பார்க்கணும் குயிலி... ஆனா ஒன்று. பிறகு நீ இந்த கிராமத்திற்கு திரும்ப மாட்டே''ன்னு சொன்னதாய் குயிலியே எங்கிட்ட சொன்னா - எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் ஷியாமளாவின் சதி குயிலிக்குப் புரியலை... நிரஞ்சனோட முறுக்கிட்டு நின்னா...''

## 16

''செல்வம் என்பது சிந்தையின் நிறைவு'' என்றாராம் குமரகுருபரர்.

திருப்தி வந்துவிட்டால் வாழ்க்கை நிம்மதியாய் போகும். வேறு எதுவும் வேண்டாம்.

மற்றொருத்தி ஆசைப்பட்டதைத் தான் அடைந்து விடும் தகாத ஆசை குயிலிக்கு! ஆனால் அப்படி அடைந்ததைக் கொண்டு திருப்திப் பட்டிருந்தால் விவகாரமில்லை.

ஆனால் முதல் கோணல் முற்றிலும் கோணிப் போனது!

'ஒரே ஆண் அல்லது பெண்ணோடு வாழ்நாள் முழுக்க வாழறது அநாகரீகம்றதுதான் மும்பை... பெரிய இடங்களின் நாகரீகம், குயிலி. மாற்றமிருந்தால்தான் வாழ்வு மணக்கும்... இல்லை, தேங்கி நாறிடும்' என்றெல்லாம் போதித்த ஷியாமளாவின் கடிதங்களால் குழம்பித் தடுமாறினாள் குயிலி -

தோழமையை - தன்னலமில்லாத பகிர்தலை இருவருமே கொச்சைப் படுத்தி விட்டார்கள். அதைப் போட்டியாக்கி அடுத்தவள் அழிந்தாலும் பரவாயில்லை என்ற வெறியோடு ஆடித் தீர்த்திருக்கிறார்கள்.

இந்த பலப் பரீட்சையில் சிக்கி நிம்மதி இழந்த நிரஞ்சனின் மீது இவளுக்குப் பரிவு பொங்கியது.

எத்தனை திமிர் இருந்தால் ஷியாமளா இன்னும் குற்ற உணர்வின்றி நிரஞ்சனை விரட்டி வருவாள்?

நினைக்க நினைக்க மனம் பொங்கி பொசுங்கியது.

நேற்றே ரஞ்சிதாவிடம் சில சந்தேகங்களையும் கேட்டாள் -

'ஆனால் ஷியாமளாவின் ஒருதலை வெறி எப்படி நிரஞ்சனுக்குத் தெரியாமல் போனது?'



'அவன் பள்ளி நாள் கிண்டலை பெரிசாய் எடுத்துக்கலை. நாலு வயசுக்கு இளைய பெண்களின் விவரம் சீனியர் ஹீரோவான அவன் காதிற்கும் அதிகம் வரலை. வந்ததைச் சிறு பிள்ளைத்தனம் என்று ஒதுக்கியிருப்பான்.'

'இதெல்லாம் தெரிந்த ஷியாமளாவோட அப்பா வேணும் மகளுக்குப் புத்தி சொல்லக் கூடாதா?'

'ஒரே பொண்ணு. தான் பிடிச்ச பிடியில் நிற்பவன்றது அவருக்குத் தெரியும். தவிர நிரஞ்சன் நம்பகமான அருமையான பையன். தன் சொத்தையும் பெண் ஷியாமாவோடு சேர்த்துக் கவனிப்பானேன்றதும் கூட.'

'குயிலிக்குக் கூடப் பிறந்தவங்க...?''

'ஒரு அண்ணன். அவன் நல்லபடி படிச்சு, சென்னையில் ஒரு வேலை தேடிட்டதோடு, தன் கூட வேலை பார்த்த பொண்ணையும் கல்யாணம் செய்துகிட்டான். பண்ணைப் பராமரிப்பும் விவசாயமும் சுலபமில்லை. மழை பொய்த்தால் முழு நஷ்டம், வேலையாட்கள் கிடைப்பதில்லைன்னு திண்டாடிட்டிருந்த தேசிகன் ஐயாவும்... அதாவது...''

'தெரியும். குயிலியுடைய அப்பாதான?'

'ம்ம். நிலத்தை விற்றுட்டு தன் மகனோடு சென்னையில் ஸெட்டிலாயிட நினைச்சாங்க. மகளுக்கு நல்லபடி கல்யாணமான திருப்தியில் ஓரளவு நல்ல விலைக்குப் பண்ணையை விற்றுட்டு நவீன ஃபிளாட் ரெண்டை வாங்கிட்டு சென்னை போயிட்டாங்க. ஐந்து வருஷங்களுக்கு முன்னே நீச்சல் குளமும், டென்னிஸ் கோர்ட், ஜிம்முனு உருவான அந்த குடியிருப்பைப் பார்த்து அங்கே ரெண்டு

வாரம் இருந்துட்டு வந்த குயிலியின் அதிருப்தி அதிகமாச்சு!

'சுதந்தரம்னால் என்னன்னு இப்பதான் எனக்குப் புரியுது. அதை அனுபவிக்காமல் கிராமத்து சகதியில் சிக்கிட்டேன்னு' புலம்பியிருக்கா.''

''நிரஞ்சனின் நிலமை பாவந்தான்... ஆனால் எல்லாரும் விளை நிலத்தை விற்றுட்டால் உலகம் எதைச் சாப்பிடும்?''

'தேசிகன் ஐயாவிடமிருந்து நிலத்தை வாங்கினவங்களுக்கும் சமாளிக்க முடியலை. ஒரு தொழிற்சாலை கட்ட இந்த நிலத்தை மறு விற்பனை செய்ய இருந்த போது, நீ சொன்ன அதே கருத்தோடு நிரஞ்சன் அதைத் தானே அதிக விலை தந்து வாங்கிட்டான்.'

'நல்ல விஷயந்தான்.'

'ஆனா அதிக விலை தந்து வாங்கியதில் பணப் பிரச்சனை! கூடுதல் நிலத்தை சரிவரப் பண்படுத்தி, பயிரிட அவன் அதிகமாய் உழைக்க வேண்டியிருக்க,

'எனக்கு போரடிக்குது - இந்த காட்டில் அடைஞ்சு கிடந்து மூச்சே முட்டுது'ன்னு குயிலியின் புலம்பலும் அதிகமாச்சு. இந்த அதிருப்தியான சூழலில் ஷியாமளா வந்து புகையை மேலும் விசிறி விட்டாள். மும்பை சினிமா ஸ்டார்ஸுடன் தான் எடுத்துக் கொண்ட படங்களை எல்லாம் குயிலியிடம் காட்ட, பொறாமை வலையில் இந்தப் பெண் முழுசாய் மாட்டிகிடுச்சு.''

'பெரிய சிக்கல்தான்.'



'வீட்டு வேலைகளை எடுத்துச் செய்யேன்மா'னு பாட்டிம்மா சொன்னால் குயிலி மேலும் கத்துவாளாம் -

'சென்னையில போன் போட்டால், பத்தாம் நிமிஷம் சூடான பீட்ஸா நம் வாசலுக்கு வந்துடும். இங்க நான் அடுப்படியில் வேக வேண்டியிருக்கே'னு... முக்கியமான விஷயத்தை விட்டுட்டேனே? குயிலியின் நிலம் மறுவிற்பனைக்கு வந்தபோது அதன் விலை இருமடங்காயிடுச்சு. ஆக அதை வாங்க நிரஞ்சன் பாதி பணத்தை தனராஜ் சாரிடமிருந்து வாங்கினான்.''

''ஓ... ஷியாமளாவின் அப்பாவிடமிருந்து? அதுதான் அவர் அவ்வளவு தோரணையும் உரிமையுமாய் இங்க வந்தாரா?''

பாதி தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் நிமலா.

'ஆனால் விளையும் தானியத்தையோ, பழங்களையோ வெகு காலம் விற்காமல் வைக்க முடியாது. விலை எப்படியிருந்தாலும் விற்றுடணும்.''

'விவசாயத்தின் பெரிய குறை... அதாவது விவசாயிகளின் குறை அது.. இல்லையா?''

இருவரும் பேசப் பேச, பனி விலகுவது போல நிமலாவிற்கு மெள்ள அத்தனையும் தெளிவானது.

கடனாய் பணம் தந்த பெரிய மனிதர்,

'நீ என் மகளைக் கல்யாணம் பண்ணினால்தான் ஆச்சு' என்று சின்னத்தனமாய் நெருக்குகிறார்.

'குயிலி இறந்தபோது அவங்க கர்ப்பமாயிருந்தாங்க போல... மஞ்சள் காமாலை வேறு தாக்கிடுச்சு போல?''

''வாயைக் கட்ட மறுத்துட்டா. மருந்து, பத்தியம் ஏதுமில்லாமல்... அது அவளை பலியாக்கிடுச்சு.''

ரஞ்சிதாவுடன் பேசியதை எல்லாம் மனதுள் அசை போட்டவளுக்கு நிரஞ்சனின் மீது பரிவு பெருகியது. ஒரு பிள்ளையைப் போலக் கட்டி தலைகோதி அவனைத் தேற்றும் பரிதவிப்பில் அலைகழிந்தாள்.

இரு பெண்களின் ஏட்டி போட்டியில் நடந்த கல்யாணம் அவனது.

அதில் அவன் காதலின் ஈர்ப்பை, நிறைவை அனுபவித் திருக்க வாய்ப்பில்லை. ஆனால் மறுபடியும் ஏன் நிரஞ்சன் அதே தவறை செய்ய இருக்கிறான்?

ஷியாமளாவிடமிருந்து தப்ப, தன்னைக் கேடகமாய் நிறுத்துவது சரி. ஆனால் மறுபடி இந்த நாடகக் கல் யாணம்... அவனை நிறைவாக்குமா? தனக்கு... தன் நிலை என்ன?

யோசித்தவளுக்குப் புதுப்புது விடைகள் கிடைத்தன!

தன் வேலைகளைச் செய்தபடி கிடைத்த விடை களுடன் உருண்டாள்!

நிரஞ்சனின் மீது அனுதாபம், பரிதாபம் எல்லாஞ் சரி -

அவனைக் கட்டி அணைத்துக் கொள்ளும் தாபம் தனக்கு ஏன்?

அவன் வாழ்வைக் குதறி எறிந்தவர்களின் மீது தனக்கு இத்தனை பச்சாதாபம் எதனால்?

தனக்கே இத்தனை எரிய, நிரஞ்சன் இன்னும் தன் அறை யில் ஷியாமாவின் ஓவியத்தை, அவள் தன் மனைவிக்கு எழுதிய வில்லத்தனமான கடிதங்களை ஏன் வைத்திருக்க வேணும்?

தீவிரமான யோசனையில் நிமலா வழக்கத்தை விட அதிகம் நடந்திருந்தாள்.



கால் ஓயவும்தான் அதை உணர்ந்தவள் அங்கிருந்த மா நிழலில் உட்கார்ந்தாள்.

''தந்த பவனத்திற்குக் குறுக்கு வழியில் வந்தது போல இங்கேயும் நுழைஞ்சிட்டியா?'' ஏகத்தாளமாய் வரவேற்ற குரல் இவளைத் தூக்கியடித்தது!

சற்று தூரத்தில் இருந்ததால் உரக்கப் பேசிய ஷியா மளாவின் கண்கள் இவளை உறுத்தன. ஓவியத்திலிருந்த உல்லாசச் சிரிப்பின் நிழலும் கூட இப்போது அந்த முகத்தில் இல்லை.

''ஸாரி... நடந்தே உங்க இடத்திற்கு வரக்கூடும்னு எனக்குத் தெரியாது.''

''அதான் சொன்னேனே... இது குறுக்கு வழின்னு?'' ஷியாமாவின் குவிந்த உதடுகள் சுழித்தன. அது இவளில் ஏதோ ஒரு பொறியை ஊதி விட்டது போலானது.

கோப அனலின் வெப்பம் இவளுள் பரவியது.

நிரஞ்சனின் வாழ்வை ரகசியமாய் சிதறடித்து விட்டு 'குறுக்கு புத்தி'யைப் பற்றி இவள் பேசுவதா என்ற வெறுப்பு...

ஆனால் வார்த்தைகளைக் கொட்டும் முன் சற்று நிதானிக்க, அவளுக்கு தங்கள் இருவரின் நிலைமையும் நிதர்சனமானது.

எத்தனையோ குயுக்தி, தகிடு தத்தங்கள் செய்தும், ஷியாமளாவில் நிரஞ்சனைப் பிடிக்க முடியவில்லை... அதுதான் இந்தக் குரோதம்! நிமலா வெறுமே அடைக் கலம் தேடி வந்த இடத்தில், இவளிடம் அடைக்கலமாய் நிரஞ்சன் வந்து விட்டான்!

பெரியவர்களின் ஆனந்தமான ஆசியோடு சீக்கிரத்தில் இவர்கள் தம்பதிகளாகப் போகிறார்கள்!

பட்டு, பண்ணையின் பெண்களின் மத்தியில் தான் ஏற்கனவே இளவரசி போலத்தான்... தவிர, இனி தான் தந்த பவனத்தின் ராணி!

புதிய பார்வையில் தன்னையேக் கண்டவளின் முகத்தில் வேற்று இடத்தில் புகுந்து விட்ட தயக்கம் மறைந்தது. கொந்தளித்து நின்ற ஷியாமாவைச் சற்று அனுதாபத்தோடு கூடப் பார்க்க முடிந்தது!

ஆனால் அதைத் தாங்க முடியாத ஷியாமா குமுறினாள்.

"அது... நான் வாழ வேண்டிய வீடு... நீ வரலைன்னா இப்ப அங்கே இருந்திருப்பேன் - அந்த நிச்சயத்தில் போன தரமே நிரஞ்சனின் அறையில் என்னுடைய சில பொருட்களை வைத்திருந்தேன்... நான் அவர் வாழ்க்கையில் நுழையப் போறேன் என்பதின் அச்சாரமாய்..."

நிதானமாய் எழுந்து நின்ற நிமலா அதே நிதானத்தோடு கேட்டாள்.

"கடைசி அலமாரியின் கீழ்தட்டிலிருந்த உங்க ஓவியமும் குயிலிக்கு நீங்க எழுதின கடிதங்களுந்தானே? அதை எல்லாம் சுத்தப்படுத்தியாச்சு... புரியும்னு நினைக்கறேன். வரட்டுமா?"



## 17

அஞ்சுகத்தம்மாளை வரவேற்க 'தந்த பவனம்' தயாராகிக் கொண்டிருந்தது.

ஒரு சம்புடம் நிரம்ப கைசுற்று முறுக்கு!



'அம்மா இதைக் கருப்பட்டி காபியில் ஊற வச்சுச் சாப்பிடுவாங்க.' என்றனர் வேலைக்காரர்கள். பெரியவளின் மீது அவர்களுக்கு இருந்த பாசம் புரிந்தது.

நிமலாவும் தன் பங்கிற்கு பெரியவரின் அறைக்கு புது திரைச்சீலைகளை தைத்துப் போட்டாள். அறை சுத்தத்தில் பளபளத்தது.

பெண்கள் தையல் வேலையில் மூழ்கிக் கிடந்தார்கள். தாங்கள் தைத்த துணிகள் அத்தனையும் நகரில் விற்று விட்டதாய் வந்த தகவலில், அவர்களது வேகம் கூடியிருந்தது.

களிமண் நகைகளைச் செய்யக் கற்ற மற்றொரு 'செட்' பெண்கள் அதில் ஆர்வமாய் இறங்கியிருக்க, தேனீக்கள் போல ரீங்கரித்த பெண்களால் நல்லூர் மேலும் பொலிவாயிருந்தது.

பெரியவர் வருவதற்கு முதல் நாளே வந்து சேர்ந்த அவரது இளைய பேரன் ரஜ்வின், நிமலாவைக் கண்டதும் திகைத்து விட்டான்.

"மடப் பசங்க. இன்னுமா காமரா வசதியுள்ள போனைக் கண்டு பிடிக்கலை? அன்னைக்கு... நீ கூப்பிட்ட அன்றே உன் முகத்தைப் பார்த்திருந்தால் மறந்திருக்க முடியுமா? 'டாண்'ன்னு ஸ்டேஷனுக்கு உன்னைக் கூப்பிட வந்திருப்பேன்ல?" பெரிதாய் குறைப்பட்டான்!

நிமலா கூச்சத்துடன் ஒதுங்கி நிற்க, பட்டு அசரவில்லை.

"ரஜுத்தான் பேச்சு அதி தடபுடலாய் இருக்கும் - ஆனா வெற்று புஸ்வானந்தான்" என்றாள்.

"புஸ்வானந்தானே எம்பி பிரமாதமாய் எரியும்?"

"எல்லாம் கால் நிமிஷந்தானா? பிறகு கரிஞ்சு நிற்கும்!"

''இப்படியெல்லாம் என மட்டந்தட்டாதே பட்டு. உன்னை வேற யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். என்னைக் குஷிப் படுத்தறது உனக்கு நல்லது.''

''அதெல்லாம் அவசியமில்லை. இப்ப நான் ரொம்ப ஸ்மார்ட் - எனக்குப் பொருத்தமான ஆளைத் தேடி கண்டு பிடிச்சுடற அளவு கெட்டி!''

புருவங்களை உயர்த்தி, கட்டை விரலை ஆட்டியபடி நகர்ந்து விட்டாள் பட்டு.

சற்று பரிதாபமாய் நின்ற ரஜ்வினைக் கண்டு நிமலா விற்கும் சிரிப்புதான்.

''நீங்க எங்க வேலை பார்க்கறீங்க?''

''நிரஞ்சன் சொல்லலையா? எனக்கு ஒரே இடத்தில் அடைஞ்சு கிடக்க முடியாது. சவாலான வேலையாய் இருக்கணும்...''

''அப்ப அதற்கு சரியான இடம் இந்த பண்ணைதான்'' அவனுக்குப் பரிமாறியபடி சொன்னாள் நிமலா.

''இங்கயா? இங்கே என்ன சவாலும் சுவாரஸ்யமும்?''

''ஒரே மாதிரியோ, நாம எதிர்பார்க்கிறபடியோ இங்கே எதுவும் நடப்பதில்லை. இயற்கையை எதிர்த்து, இல்லை அனுசரிச்சு சாமர்த்தியமாய் போகணும். மண்ணைப் புரிஞ்சு நடந்துகிட்டா பொன்னாகும். ராஜாவாட்டம் வாழலாம் - ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பயிர்கள், வித்தியாச அனுபவங்கள், ஜெயிக்கும்போது ஒரு பூரிப்பு... இல்லைன்னாலும், உலகத்துக்கு உணவை உற்பத்தி செய்யும் நிறைவு...''

''போதும் போதும்... கண்டிப்பாய் இங்க வேலை செய்றதைப் பற்றி நான் யோசிக்கணும் போல... அண்ணன் கொடுத்து வச்சவர்தான்.''



''தாங்க்ஸ்.''

''இவ்வளவு அழகான உடம்பிலே தெளிவான மூளையுமிருக்கது - அரிது... அபூர்வம் பாட்டி உங்களைப் போல் எனக்கும் இப்படி ஒரு சுட்டிகையான ப்யூட்டியை பார்த்து தந்தால், எனக்கு இங்கே மண் கிளறிட்டுக் கிடக்க ஆட்சேபணையே இல்லை.''

''ரொம்ப தாங்க்ஸ் தம்பி...''

''என்ன... எதுக்கு?''

''வந்ததும் ஆர்ப்பாட்டமாய் என்னை ஒருமையில் பேசினவங்க, இப்ப மரியாதை தர்றதுக்கு.''

இப்போது ரஜ்வினும் பட்டுவைப் போலவே புருவம் உயர்த்தி கட்டை விரலைக் காட்டினான்!

வந்ததும் அஞ்சுகத்தம்மாவின் கண்கள் தேடி எடுத்து, ஆவலாய் கட்டிக் கொண்டது நிமலாவைத்தான்!

''யம்மாடி யம்மா, இந்த வீடு உன்னைத் தந்தப் பதுமை யாக்கிடுச்சே. அன்னைக்கு ரயிலில் நாம சந்திச்சது பெரும் கொடுப்பினை தான் - கடவுளுக்கு நன்றி'' என்ற பெரியவர் சற்று மெலிந்திருந்தார்.

அது பற்றி குறிப்பிட,

''முடியுதோ இல்லையோ - வெளிநாடுகளில் எல்லா வேலையும் நாமேதான் பார்த்துக்கணும். மருமகளால் அதிகம் முடியலையே... தவிர காய்ச்சலும் வந்து என்னைக் கொஞ்சம் அசத்திடுச்சு. நீ சந்தோஷமா இருக்கியாடா?'' இவளது கைகளைப் பற்றி, வாஞ்சையாய் வந்த விசாரிப்பில், நிமலாவிற்கு நெஞ்சடைத்தது.

அஞ்சுகத்தம்மாள் கடைபரப்பிய பரிசு பொருட்களைப் பார்த்தவளுக்குள் மேலும் பாரம் -

இதெல்லாம் தான் ஏற்கப் போகும் நாடகப் பாத்திரத்திற்கான அணிமணிகளா? ஆனால் பெரியவரின் பாசத்தில், பரிசுகளில் எந்த வேஷமும் இருப்பதாய் தெரியவில்லையே...?

''புது ரவிக்கைகளை எல்லாம் உடனே தைத்துக்கோடா. என் கண் குளிர, தினம் உன்னை புதுசு புதுசாய் உடுத்திப் பார்க்கணும். அதைவிட எம்பேரன் மனசு குளிரணும்...''

கவிழ்ந்த நிமலாவின் மோவாய் பற்றி நிமிர்த்தியவரின் வெளிறிய கண்கள், தடுமாறிய திராட்சைக் கண்களை ஊடுருவின.

''உனக்கும் சந்தோஷந்தானே நிமலா?''

தொண்டையடைக்க, இவள் தலையை மட்டும் ஆட்டினாள்.

அதற்குள் 'குட்டி' வெளியே போவதற்கான முணங்கலோடு கதவைப் பிராண்ட, இவர்களது பேச்சு தொடரவில்லை.

'இயற்கை அழைப்புகள் எல்லாம் வெளியேதான் என்பதைக் 'குட்டி' சீக்கிரமே கற்றுக் கொண்டது. பெரிய, ஜாதி நாய்கள் குட்டியோடு ஓடியாடவில்லை என்றாலும் பெருந்தன்மையாகவே நடந்து கொண்டன!

அவை 'குட்டி'யின் சேஷ்டைகளை ஓரக் கண்ணால் கண்டு ரசிப்பது தனி அழகு!

நிமலா, நிரஞ்சனின் மனைவியாகப் போகும் செய்தி பரவி, பண்ணையை மேலும் பசுமையாக்கியது. அங்குள்ள



பெண்கள் அத்தனை பேரும் இவளை வருடி முத்தமிட்டார்கள், வழித்து திருஷ்டி கழித்தார்கள் - வாயார வாழ்த்தினார்கள்.

வேலையில் இவள் அமிழ முடியாதளவு உபசரிப்பு. மணிக்கொரு தரம் பண்டம், பழரசம் இவளைத் தேடி வந்தது.

ஆனால் இவளுக்கோ தன்னை எல்லோரும் பலியாடு போலக் கொண்டாடுவதான மிரட்சி!

நெருக்கமும் நம்பகமுமாய் பட்ட ஒரே ஜீவன் 'குட்டி' தான் - ஆக அதைத் தன்னுடனேயே வைத்துக் கொள்ள, அதற்கும் அதில் வெகு திருப்தி. இயற்கை நிர்பந்தகளுக்காய் வெளியே போகும் 'குட்டி' போன வேகத்திலேயே இவளிடம் திரும்பியும் விடும்.

தன் அறையைத் துடைத்துக் கொண்டிருந்தவளை கீழே கேட்ட உரத்த பேச்சு வேலையை நிறுத்தி, எட்டிப் பார்க்க வைத்தது.

''இதை இனி வீட்டுக்குள்ள விட வேணாம். வெளியே கட்டி வைங்க'' - நிரஞ்சன் சீறுவது கேட்டது... ஆனால் அந்தளவிற்குக் குட்டி என்ன செய்ததாம்?''

விறுவிறுவென இறங்கி வந்தாள்.

''சதா இது வீட்டுக்குள்ள திரிஞ்சு... பாட்டிம்மா காலுக்குள்ள புகுந்து... அவங்க ஏறக்குறைய விழ இருந்தாங்க. பக்கத்தில் நானிருந்ததால் சரியாப் போச்சு. இனி இந்தக் குட்டி வீட்டுக்குள்ள வரக்கூடாது...'' அவனது கோபத்தின் நியாயம் உணர்ந்து நிமலா விக்கித்து நிற்க, நிரஞ்சன் தன் அலுவலக அறைக்குள் நுழைந்து கொண்டான்.

''ஏம்மா, ஊறுகாய்க்கு இவ்வளவு வெந்தயம் சரியா யிருக்குமா?'' என்று கேட்ட வேலைக்காரியின் பின்னே அஞ்சுகத்தம்மா போய் விட, இவள் நிரஞ்சனிடம் போனாள்.

''குட்டியை திட்டினது சரி - அதை இனி வெளியவே விடணும்னால்?''

''அசம்பாவிதம் நேரக் கூடாதுன்னுதான். துரத்தச் சொல்லலியே.. வெளியே இருக்கட்டும்னது பெரிசு...''

''அனாதை என்னை ஏற்றுக்கிட்ட உங்களுக்குக் 'குட்டி' மேல ஏன் வெறுப்பு?''

''உளறாதே நிமலா - அதுவும் நீயும்... ஒண்ணா? நீ சிரிக்கறது அதைக் கொஞ்சும்போது மட்டுந்தான் - வரப் போற எங்கப்பா, அம்மா அதைப் பார்த்தால்... எனக்காக ரொம்பப் பரிதாபப்படுவாங்க.''

கேலி போல பேச முயன்றாலும் நிரஞ்சனின் குரலில் அழுத்தமிருந்தது.

இவளிடம் போனில் மிகப் பாசமாகப் பேசியிருந்தனர் அவனது பெற்றோர்.

நிரஞ்சனின் அப்பா கலகலப்பாய் கிண்டலடித்தார் -

''என்னம்மா மொட்டையாய் பேசற? 'மாமா'ன்னு ஒரு வார்த்தை சேர்த்துக்கக் கூடாதா? அது கர்நாடகமாய் பட்டால் என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடு - பெயர் - நித்யானந்தம் - தெரியுமில்லியா?'

மற்றவர்களின் அன்பில் நனைந்தவள், உரியவனை நிமிர்ந்தும் பார்க்க அஞ்சித்தான் இப்படி நாய்குட்டி பின்னே திரிவது.





# 18

கல்யாண தேதி குறித்த பின்பு, கட்டப் போகும் பெண்ணோடு ஒரே வீட்டில் இருப்பவன் அவளிடம் எப்படிக் கொஞ்சி இழைய வேண்டும்...?

தன் முன் கடுகடுப்பாய் நின்றவனை அச்சத்துடன் ஏறிட்டாள் நிமலா.

''சதா பின்னால் அந்த நாய்க்குட்டியோட போய் உட்கார்ந்துக்கற -

என்ன இது...? பழைய சிரிப்பு, பேச்சு ஏதுமில்லை உங்கிட்ட -

''எதனால இப்படி?''

''குட்டியின் அன்பில் எந்த எதிர்பார்ப்புமில்லை... அதான் அதுகூட நிம்மதியாய் இருக்கறேன்.''

''நான்சென்ஸ். நாங்க வேறென்ன எதிர்பார்க்கிறோம்
- உன் சந்தோஷத்தைத் தவிர? எத்தனை பரிசுகள்,
பாராட்டுப் பேச்சு, பிரியம்... உன்னை எதுதான் திருப்தி
படுத்தும்? பாட்டி என்னைக் கிளறுறாங்க -
'கல்யாணப் பொண்ணு முகத்துல களை இல்லை
யேடா?'ன்னு.'' அவன் முகத்தில் கோப சிடுசிடுப்பு.

பிறரது பாராட்டு, பரிசுகள் இவளை எப்படி, ஏன் திருப்தி
படுத்த வேண்டும்?

இவனது அன்பான பார்வை, ஒரு ஸ்பரிசம்... மறும்...
கிடைக்கவில்லையே?

இவள் அவற்றைத் தேடி இங்கு தஞ்சமடையவில்லை.

முடவன், கொம்புத் தேன் எனும் நிலைதான் தன்னது

தேடாமல் வந்த உறவை சமாளிக்கத் தெரியாமல் தத்தளிப்பவளை ஏன் இப்படி மேலும் தனது கோபத்தில் மூழ்கடிக்கிறான் இவன்?

நிரஞ்சன் கண் நிறைந்தவன்தான்... ஆனால் மனம் நிரம்பவில்லையே?

'இந்த இக்கட்டிலிருந்து தப்ப கை கொடு' என்று கேட்டவன் இனிமேலேனும்,

'என் வாழ்வு நீ வந்ததும் எத்தனை இனிமையாகி விட்டது' என்று சொல்லியிருந்தால், இவளில் கல்யாண களை வழிந்திருக்கும்... இந்த திரிசங்கு சொர்க்கத்தில் சந்தோஷம் ஏது?

பட்டு எட்டிப் பார்த்தாள் தயக்கமாய் -

''நிருத்தான், ஷியாமளாக்கா வந்திருக்காங்க - உங் களைப் பார்க்கத்தான் போல...''

நிரஞ்சன் வாசல்புறம் போக,

''குட்டிக்கு ஒரு பந்து தந்திருக்கேன்... அதுக்கு ஒரே குஷி... மின்னலாட்டம் பந்தைத் துரத்துதுக்கா.''

''பாவம்... அதை உள்ளே வரக் கூடாதுன்னு.'' தடை போட்டாச்சு.''

வருந்தினாள் இவள்.

''அதுவா? நிருத்தானுக்குப் பொறாமை! நீங்களும் குட் டியையேக் கொஞ்சிட்டிருந்தா எப்படி? அதோ என்னைக் கூப்பிடுது பாருங்க... பந்தை வீசணுமாம்'' என்றபடி பட்டு வும் போக, நிமலா தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

முன்பு செய்தது போல, அவர்களிருவரும் பேசும் அறையில் பிரத்தியட்சமாகி, நிரஞ்சனை ஷியாமளாவின் பிடியிலிருந்து காப்பாற்று எண்ணம் கூட இப்போது அவளில் இல்லை.



உள்ளத்தோடு உடம்பும் அயர்ந்து போயிருக்க, படுத்த வளின் கண்கள் காரணமின்றிப் பெருகின.

ஏன்... எதற்கு என்று புள்ளிகுத்த முடியாத துக்கம்...

கீழே கார் கிளம்பி வேகமெடுப்பது கேட்டது - அதைத் தொடர்ந்து 'குட்டி'யின் வீறிடல்!

உலுக்கப்பட்டது போல எழும்பி ஓடினாள்.

இவளுக்கு முன்பாகவே சத்தம் கேட்டு வாசலுக்குப் போயிருந்த நிரஞ்சன், ஓடி வந்தவளைத் தடுத்து கட்டிக் கொண்டான்.

''ஐயோ... என்னாச்சு?''

பட்டுவும் வேலைக்காரர்களும் ஷ்யாமளாவின் காரைத் தட்ட, அது மறுபடி சீறலாய் கிளம்பி... மறைந்தது.

''இந்த வேகத்துல எதுக்குப் பறக்கணும்? 'குட்டி போச்சே.''

வேலைக்காரின் புலம்பலைக் கேட்டவளின் உடல் விறைத்து, பின் ஒரேயடியாய் தளர்ந்தது.

'இந்த மாத்திரையைப் போட்டுட்டு, பாலை குடிச் சுடுடா' என்றபடி தன்னோடு இருந்த பாட்டியிடமிருந்த இவளுக்கான ஆறுதல் கிடைத்தது. ஆனால் படுக்கை யின் மறுபக்கம் நிரஞ்சனும் இருந்து இவளது தலையைக் கோதி விட்டபடி இருந்தது அதிகப்படியாய் பட்டது. அவனிடமிருந்து நகர்ந்து கொண்டாள்.

தரப்பட்ட மருந்து தன்னை அமைதிப்படுத்தியிருந்தது புரிந்தது. யாருமின்றி வாழ்வில் இத்தனை தூரம் வந்த தனக்கு இந்த இழப்பும் பழகிப் போகும் என்று தன்னையேத் தேற்றிக் கொண்டாள்.

ஆனால் நடந்தது விபத்தா... அல்லது ஷியாமளா வேண்டுமென்றே 'குட்டி' காரேற்றிக் கொன்றாளா?

கார் தனக்கான பாதையில்தான் இருந்தது - வேகம் அதிகமென்றாலும்...

ஆக குட்டிதான் பந்து மீதான ஈர்ப்பில் அதன் முன்பு போய் சிக்கி விட்டது.

இவளுக்கு அதுவும் கூட அச்சிறு ஜீவனின் அன்பும் கொடுத்து வைக்கவில்லை... அவ்வளவுதான்...

மாத்திரையின் தயவில் துக்கம் மறந்து தூங்க முடிந்தது... தன் கையைப் பற்றிய நிரஞ்சனின் கையை இவள் விடவேயில்லை.

காலையில் கண் விழித்த போது மனசில் ஒருவிதமான மரமரப்பு... ஆனால் வெறுமையை உணர முடிந்தது.

முகம் கழுவி முடி கோதியவளை அந்த சத்தம் சொடுக்கியது!

அதென்ன முணகல்...?

குனிந்து பார்த்தவளின் கண்கள் விரிந்தன...

மனித வாசனையை முகர்ந்து முடிந்தளவு வேகமாய் இவளை நெருங்கிக் கொண்டிருந்தது அந்தக் குட்டி. இவளது 'குட்டி'யின் அதே நிறம், அமைப்பு... நாற்பது நாள்தான் இருக்கும்.

குனிந்து அள்ளி எடுத்தவளை, வெகு ஆசையாய் பார்த்து, நக்க முயன்றது அது.

மிருதுவான அதன் உருண்டை உடலைத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டாள்.

சன்னமான தட்டலுடன் ஒருக்களித்திருந்த கதவைத் திறந்து கொண்டு வந்த நிரஞ்சன் கையில் சூடான தேநீர் கோப்பை; மற்றதில் சிறு கிண்ணத்துப் பால்.

இவள் கண்களைச் சந்தித்தவனின் பார்வையை இவள் நழுவ விடவில்லை. இவள் இழப்பின் போது, அணைத்



தும், தட்டியும், உடனிருந்த அவன் நேசத்தில் இவள் உருகிப் போயிருந்தாள்.

''ஸாரி நிமி... குட்டி வீட்டினுள்ளேயே இருந்திருந்தால்...''

''அது விபத்து... குட்டி சதா வீட்டில் அடைஞ்சு கிடக்கிறதும் சாத்தியமில்லை. - எனக்குப் புரியுது.''

''இந்த 'குட்டி'யை ரொம்ப கவனமாய் பார்த்துக்கலாம்.''

இரண்டு பிஞ்சு முன்னங் கால்களையும் கிண்ணத்தில் பதித்து பாலை 'மொச்சக்கி'க் கொண்டிருந்த சிறு ஜீவனை இருவர் கைகளும் தடவின. பசியாறிய அது இருவரையும் முகர்ந்து விட்டு, நிமலாவின் மடியைத் தேர்ந்தெடுத்து சுருண்டு கொண்டது.

இவனது கண்கள் நிரம்பின.

''நீ ஷியாமளாவிடமிருந்து என்னைக் காப்பாற்றினது போல, குட்டியை அவளிடமிருந்து காப்பாத்த முடியலை நிமி. 'இனி நீ என் கண்ணில் படவே கூடாது'ன்னு விரட்டிய ஆத்திரத்தில்தான் ஷியாமா அத்தனை வேகமாய் போனாள்... போய்...''

''என்ன விஷயமாய் வந்தாங்க?''

''என் அறையில் அவளது படம் இருந்துச்சுன்னா... ரொம்ப உரிமையாய் உள்ளேப் போனவள் கடும் கோபத்தில் வெளியே வந்தா. அவ படம் எப்படி அங்கே இருக்கக் கூடும்னு... எனக்குத் தெரியலை.''

''ஏதோ ஒரு நம்பிக்கையில் வந்திருக்காங்க. ஆனா நான் அதை அங்கிருந்து அப்புறப்படுத்திட்டேன். உடனே அதை அவங்களிடமும் அனுப்பி வச்சிருந்திருக்கணும்.''

அது பற்றி ஏதும் அறியாதவன் குழப்பத்தில் விழித்தாலும்

''அவங்கப்பாவிற்கு வர வேண்டிய லட்சங்கள் உடனடியாய் வேணும்னா.'' - தொடர்ந்து பேசினான்.

''ஐயோ... உங்களை நிரந்தரமாய் அவங்களிடமிருந்து காப்பாற்ற காசு வேணுமே...?''

''அதுவும் கிடைச்சாச்சு நிமி.''

ஆவலுடன் ஏறிட்டாள்.

அவள் மடியில் சுருண்டிருந்த குட்டியைக் கவனமாய் அள்ளி, அதற்கான கடையில் விட்டவன், பேராவலுடன் இவளை எழுப்பி தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

இதுவரை அவன் சொல்லாததை எல்லாம் அந்த இறுக்கம் அவளுக்குத் தெரிவித்தது.

நிம்மதியாய் ஒண்டிக் கொண்டாள்.

''பாட்டியம்மாவிற்கு சென்னையின் புறநகரில் நிலமிருந்தது. இதுவரை பொருட்படுத்தாத அந்த நிலத்தை யாரோ அரைக்கோடிக்கு விலை பேச, சந்தோஷமாய் விற்றுட்டாங்க. ஆக இந்த வாரமே எங்கடன் தீர்ந்திடும்.''

''அப்ப... நம்ம கல்யாணம்?''

இவளைச் சற்று எட்ட நிறுத்தி முறைத்தான்.

''சொல்லி முடி.''

''எந்த நிர்பந்தமுமில்லாததால்... அது நடக்குமான்னு...''

''இனி நிர்பந்தம் இல்லாததால் தான் அதான் இப்படி சந்தோஷமாய் ஒட்டிட்டிருக்கோம்.''

''நிஜத்தை... தெளிவாய் சொல்லுங்க நிரஞ்... ப்ளீஸ்.''

''நம்ப கல்யாணம் எந்த நிர்பந்தமும் இல்லாம, நிறைவாய் நடக்கும் -

''ஏன்?''



''என்னா நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன். 'தந்த பவனத்திற்கு' இப்படி ஒரு அழகும், குணமும், பண்பும், திறமையுமான ஒரு ராணி வருவான்னு நான் நினைக்கலை... ஆக தேடவும் இல்லை. ஆனா அவ தானே என்னைத் தேடி வந்துட்டா... இனியும் அவளை விடலாமா என்ன?''

''நானுந்தான் தேடலை...'' என்றாள் சற்று பிகுவுடன்.

''ரயில்வே ஸ்டேஷன்ல அலமலந்து தேடும் ஒரு குழந்தை போல நின்னியே? 'அடடா இது ரொம்ப அழகான ஆபத்து'ன்னு உன்னைக் கழட்டி விடப் பார்த்தேன்... ம்ப்ச் நடக்கலை.''

ஆர்வமாய் இவள் நெற்றியில் முத்தமிட்டான். இவள் கண் செருக முணுமுணுத்தாள் -

''நான் கனவிலும் கூட நினைக்காத வாழ்விது... பிறகெப்படி தேடறது?''

''ஆக நாம ரெண்டு பேருமே தேடலை... அப்படி வர்ற காதல்தான் அற்புதமானது - தெரியுமா?''

''ஓஹோ?''

''தேடிப் பெறுகின்ற காதல் சிறப்பானதுதான். அதைவிட சிறந்தது - தேடாமல் தட்டுப்படும் காதல்.''

அவளது பெரிய கண்கள் காதலால் தளும்பின...

''அப்படி ரொம்பப் பாராட்டாய் பார்க்காத நிமி. இது நான் சொன்னதில்லை. ஷேக்ஸ்பியரின் வரிகள்!''

''அழகாயிருக்கு...''

''இனி நம்ப வாழ்வும் அருமையாய் இருக்கும் நிமி'' என்றவன் சொல்ல, ஆமோதிப்பாய் அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள் நிமலா!

# மண் குதிரைகள்

## 1

டாக்டர். மகிபன் காலை எழுந்ததுமே செய்தித் தாளுடன் உட்காருவதில்லை.

வரிசையாய் நவீன 'வில்லா'க்கள் அடுக்கப்பட்டிருந்த தங்களின் குடியிருப்பைச் சுற்றிக் காலார நடப்பார். பிறகு, காபி குளியல் எல்லாம் ஆன பிறகுதான், செய்தித் தாளைப் பிரிப்பது.

இன்றும் அதே போல செய்தவர், தனது ஆரம்ப ஆர்வத்திற்கு தீனியிட்ட பின்பு, தனக்கு வேண்டிய செய்திகளில் அமிழ ஆரம்பித்தபோதுதான் மெல்லிய நறுமணம் அவரைத் தட்டித் திருப்பியது.

நிமிர்ந்தவரின் புருவம் உயர்ந்தது.

''ஹாய்... ப்யூட்டி! எங்கே கிளம்பிட்ட?''

மனைவியை உற்சாகமாக விசாரித்தார்.

''ஏன் - நான் காலையிலேயே குளிச்சு... உங்களைப் போல ஸ்மார்ட்டாய் நிற்கக் கூடாதாக்கும்?''



மாலினியும் சல்லாபமும் சந்தோஷமாகவே பதிலளித் தாள்.

நாற்பதுகளை எட்டி விட்ட அத்தம்பதிகள் பார்க்க மட்டுமல்ல, தங்களுக்கிடையேயான பழக்கத்திலும் இளமையானவர்கள் தான்.

பத்து வருஷங்கள் முன்பு வரை மகிபன் மருத்துவ துறையின் மேற்படிப்பில் மூழ்கியிருந்தார். இப்போது அவர் நகரின் முன்னணி மனோதத்துவ நிபுணர்களில் ஒருவர். பெரியவர்கள் தேடி இணைத்த அத்தம்பதிகள் வெகு காதலோடு வாழ்க்கையை அமைத்துக் கொண் டாடிக் கொண்டிருந்தார்கள். மொத்தக் குடும்பப் பொறுப்பு, இரு மகன்களின் கல்வி - எல்லாம் மாலதி கவனித்துக் கொண்டதால் தாம்பத்யம் தடுமாறவில்லை. ஆனால் பள்ளிப் படிப்பை முடித்த பிள்ளைகள் கல்லூரி படிப்பிற்காய் வெளியூர், வெளிநாடு என்று போன பிறகு, அதுவரை பரபரப்பாய் இயங்கிய மாலினியின் உடலும் மூளையும் அடுத்தது என்ன?' என்று திகைத்து நின்றன!

'இனி நாம நகருக்குள்ளே இருக்கணும்ற அவசிய மில்லையே' என்றவள் கிழக்கு கடற்கரைச் சாலையில் எழும்பிய 'வில்லா' வீடுகள் ஒன்றை விலை பேசினாள். அடுத்த இரு வருடங்கள் வீட்டை தன் ரசனைக்கேற்ப அமைப்பதில் கழிந்தன. தனி வீட்டு அமைப்பு என்பதால் கிடைத்த சிறு தோட்டம் அவளுக்கு மிகுந்த ஆசுவாசம்.

எவ்வளவு திருந்த செய்தாலும் தோட்ட வேலை ஒருவரை ஓய்ந்திருக்க விடுவதே இல்லையே...!

களை எடுப்பது, நீர் வார்ப்பது, திருத்துவது, நடுவது என்று தொடர்ந்த ஓயாத வேலையை அவள் விரும்பிச் செய்தாள். பெரும்பாலும் வெளியே நின்றவளின் காதில், அக்குடியிருப்பின் வேலையாட்கள் பேசிய

கதைகள் விழுந்து, ஓய்ந்த இரவு நேரத்தில் எழுத்தாகி விட்டன!

தனது முதல் சிறுகதை ஒரு முன்னணி பத்திரிகையில் வெளியானபோது மாலினிக்கே ஆச்சரியந்தான். பிறகு அவளது எழுத்து தொடர்ந்தது; இரண்டு வருட எழுத்துப் பயிற்சி அவளை நாவல்களுக்கு உயர்த்தியது.

பொழுது சுவாரஸ்யமாக கழிந்ததோடு, பரிச்சயமானவர்கள் மத்தியில் தன் அந்தஸ்து 'சட்'டென உயர்ந்ததையும் மாலினி உணர்ந்தாள்!

முன்பு,

'டாக்டர். மகிபனின் மனைவி' என்று உபசாரமாய் பிறருக்கு அறிமுகப்படுத்தப் பட்டவள் இப்போது,

'இவங்க யார்னு தெரியுமில்ல? எழுத்தாளர் மாலதி மகிபன்! போன வாரம் கூட இவங்க நாவல் வெளியானது. இப்ப எது பற்றி எழுதறீங்க மாலதி?' என்று கொண்டாடினார்கள்.

இதைவிட சங்கடம், பலர் தங்களது பிரச்சனைகளை இவள் முன்பு கடை பரப்பினது!

கதையின் முடிச்சுகளை அவிழ்த்து, தன் கதாபாத்திரங்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் இந்த சாமர்த்திய காரிக்கு நம் சிக்கல்கள் எம்மாத்திரம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு!

அப்படி நேற்று வந்த ஒரு தொலைபேசி அழைப்பு தான் மாலினியை சீக்கிரமே கிளப்பி விட்டிருந்தது.

"இன்னைக்கு டோஸ்ட்டும் ஸீரியலுந்தான். நானும் ஸிட்டிக்குப் போகணும்." கணவனிடம் சொன்னாள்.



"வழக்கமாய் நீ ஸிட்டிக்குள் போவது செவ்வாயும் வியாழனுந்தானே மாலி? இன்னைக்கு என்ன?"

டோஸ்டரிலிருந்து மும்முரமாய் தங்க நிற ரொட்டி சதுரங்களை எடுத்து வைத்தவள், முட்டைகளை அடிக்க ஆரம்பிக்க, டாக்டருக்குள் சுவாரஸ்யம் மொட்டு விட்டது.

"பத்திரிகை ஆபீஸிற்குப் போறீங்களா மேடம்? எழுத்தாளரின் புதுத் தொடர் ஆரம்பமாகுதா?" விடாமல் கேட்டார்.

"ல்ல... தெரிஞ்சவங்களைப் பார்க்கப் போகணும்."

இவர் கேட்கும் முன்னமே விவரங்களை அள்ளித் தரும் மனைவி இன்று எதையும் கிள்ளித் தரவும் மனமின்றி இருப்பதைக் கண்டு கொண்டார் ஆச்சரியத்துடன்.

"ஏதேனும் பிரச்சனையா மாலு?"

அவர் குரலின் கரிசனை அவளை மடக்கியது.

"நோ.. நோ. நம்ப உறவுக்கார பெண்ணிடமிருந்து நேற்று ஒரு போன் கால் வந்துச்சு... என்னிடம் பேசணும்னா... அதுதான்."

"சரி. அவங்க யார் எனும் ரகசியத்தை மேடம் எப்போ வெளிப்படுத்துவதாய் உத்தேசம்?"

செய்தித்தாளை மடித்து வைத்து விட்டு கேட்டார். வெளியே ஆயிரம் செய்திகள் இருந்தாலும் வீட்டில் நடப்பதை விடவா அவை சுவாரஸ்யம்?

"போயிட்டு வந்த பிறகு உங்களிடம் சொல்லலாம்னு இருந்தேன் - அவசரப்படறீங்களே" அவர் முடியைக் கோதியவள் தொடர்ந்தாள் - "போன் பண்ணினது சீதா. என் ஒண்ணு விட்ட அத்தை பொண்ணு. ஏறக்குறைய என் செட். ரெண்டு வயசு குறைய இருக்கலாம். பத்து

வருஷங்களுக்கு முன்னே நாம அவ பண்ணை வீட்டுக்குப் போயிருக்கோம் கூட...''

''தாம்பரம் தாண்டி இல்லையா? கரடு முரடான ஒரு விவசாயி கணவரோடு அவங்களை சந்திச்ச ஞாபகமிருக்குது.''

''ரைட். எங்கிட்ட பேசணுங்கறா. ஸிட்டியிலேனும் அவ என்னைச் சந்திச்சுப் பேச அவசரப்பட்டது போலிருந்தது. அதான் கிளம்பிட்டேன்.''

''மர்ம நாவலும் இனி எழுதிடுவ போல மாலு..? மூடு மந்திரமாய் பேசறே?'' புன்னகைத்தார் மகிபன்.

பாவம் கீதாக்கு பிள்ளைகள் இல்லை... பண்ணை வீட்டில் ஏகத்துக்கும் தனிமை. மனம் விட்டுப் பேசவும் யாருமில்லாத அவளுக்கு ஏதோ அவசரம்... போய் காது தந்து கேட்டுட்டுதான் வர்றதுனு கிளம்பினேன்.''

''எனக்கும் இன்னைக்கு ஒரு டின்னர் - மீட் இருக்குது. லேட்டாகும்.''

இருவரும் அவரவர் கார்களில் ஏறிக் கிளம்பினார்கள். தான் ஒரு மர்மக் கதையினுள், அதன் ஒரு கதாபாத்திரமாய் நுழைகிறோம் என்பதை அறியாத மாலினியின் கார் வேகமெடுத்தது...

## 2

கீதாவை சந்திப்பதற்காய் ஒரு குறிப்பிட்ட நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்த மாலினியை அதன் குளுமை இதமாய் வருடித் தந்தது.



இடையூறு இன்றி பேச இது போன்ற உயர்தர உணவகம் தான் வசதி.

நடுத்தர உணவகங்களில் முண்டும் கூட்டத்தார், நாம் சாப்பிட்டு முடிப்பதற்குள் நம் நாற்காலியின் பின் நின்று அதைப் பற்றி உலுக்காத குறையாய் நம்மை எழுப்பி விடுவார்களே!

லவுன்ஜ் பகுதியை நோட்டமிட்ட மாலினி, காபி ஷாப்பினுள் நுழைந்தாள். கீதா இன்னும் வந்திருக்கவில்லை.

மகிபன் குறிப்பிட்டது போல பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தரம் அவளது வீட்டிற்குப் போனதுதான். அதன் பிறகு கல்யாண வீடுகளில் சில நிமிடங்கள் பார்த்துப் பேசியிருக்கக் கூடும். நேற்று மதியம் கீதாவின் அழைப்பு மிக எதிர்பாராதது.

''கதையெல்லாம் எழுதறேன்னு கேள்விப்பட்டேன் மாலு - கிரிதரன் சித்தப்பால்ல... போன வாரம் நம்ப பண்ணைக்கு வந்திருந்தாங்க. என் வீட்டுக்காரர் உற்பத்தி செய்யும் உரம் நாலு மூட்டை வாங்கிப் போறதுக்காய்... அப்பதான் உன்னைப் பற்றி சிலாகிச்சு பேசினாங்க. உன் புது நம்பர் கூட அவர்ட்ட இருந்துதான் வாங்கினேன்.''

நல விசாரிப்புகளுக்குப் பின்பு கீதா மறுபடி இவளது எழுத்திற்குத் தாவினாள்.

''எப்படியோ உன்னுடைய ஒரு நாவலை வாங்கி வாசிச்சேன் - இனி லைப்ரரிகளிலும் உன் புத்தகங்கள் வந்திடும் - கதை, கதாபாத்திரங்கள் எல்லாம் ரொம்ப இயல்பா இருந்துச்சு மாலு - முழுக்க கற்பனையாய் தோணலை - நீ கேள்விப்பட்ட சம்பவங்களும் சந்தித்த நபர்களையும் கொண்டுதானே எழுதியிருக்க?''

''கற்பனையும் நிஜமும் பாதி பாதின்னு வையேன்.''

மாலினி மழுப்பலாய் சிரிக்க, கீதாவின் தொனி இறங்கியது. ''கற்பனையை மிஞ்சும் உண்மைகளும் உண்டு மாலு - பழமொழியே இருக்கில்லையா -

'ட்ரூத் இஸ் ஸ்ட்ரேன்ஜர் தன் பிக்ஷன்'ன்னு?

''ம்ம்.''

''நான் சொல்றதைக் கேட்டா நீ நம்ப மாட்ட மாலினி - அசாத்யமான கற்பனைனு நினைப்ப. எங்கதையை உங்க வீட்டு டாக்டர் கேட்டால் எனக்கு புத்தி பிறழ்திருச்சுனு மருந்து தருவார்! பெத்தவங்க பரலோகம் போயாச்சு. கூடப் பிறந்தவன் அயல் தேசத்துல... யார்ட்ட சொல்றதுங்கற தவிப்போட இருந்தப்பதான் உன் நாவலை வாசிக்க நேர்ந்தது. வாழ்க்கையை, மனுஷங்களை அழகா அலசி, ஆராய்ஞ்ச எழுத்து, சிறு வயசிலிருந்து பழகின உன்னிடம் என்னால் சுலபமாய் பேச முடியும்... அதைவிட முக்கியம் உன்னால் நான் சொல்றதைப் புரிஞ்சுக்க முடியும். நாம சந்திக்கணும் மாலினி - நாளைக்கு ஸிட்டிக்கு வர்றியா?''

''என் கார் - சர்வீஸிங் வியாழனன்று...''

''தாமதிக்காதே ப்ளீஸ். எனக்குள்ளே டைம் - பாம் வச்சது போலிருக்குது. என்ன டைம் ஸெட் செய்து, அது எப்போ வெடிக்கப் போகுங்கறது எனக்குத் தெரியலை. நாளைக் காலைல வந்திடேன்...''

இடத்தோடு நேரத்தையும் கீதாவே குறிப்பிட, மாலினியால் மேலும் மறுக்க முடியவில்லை. இந்த நாடகத்தனமான சம்பாஷணையை கணவரிடம் சொன்னால் -

''நான்சென்ஸ்... போய் ஏதேனும் வம்பில் மாட்டிக்காதே'' என்று விடக் கூடும்!



கீதாவின் குழந்தைத் தனமான முகம் நினைவிலாடியது.

வீட்டுக் கல்யாணங்களில் சிறுமிகளாய் இருவரும் சேர்ந்து கொட்டமடித்த நினைவுகளுந்தான். கீதாவின் கல்யாணத்தின் போது அலங்காரத்தில் உதவியதும், 'கெக்கே பிக்கே' என்று பேசி கிண்டலடித்ததும் மறக்கவில்லை.

ஆனால் 'திருமதி' ஆன பிறகு கீதாவிடம் பழைய துள்ளலில்லை. அவளுக்குக் குழந்தையில்லாதது ஒரு காரணமாயிருக்கலாம்.

சற்று கெடுபிடியான கணவனும் கூட.

பரந்த பண்ணையின் வீட்டில், குழந்தைகள் கலைக்காத அமைதியில் வாழ்ந்தவள் பாவம் ஒடுக்கிப் போய் விட்டாள்.

அதிலிருந்து மீளத்தான் இந்த நாடகமோ?

தன் வாழ்வில் பெரும் சுவாரஸ்யம், ரகசியம் இருப்பது போல ஒரு மாய்மாலமோ?

யாரிடமும் சொல்ல முடியாதபடி அப்படியென்ன பிரச்சனை கீதாவிற்கு இருக்கக் கூடும்?

இவளது பாட்டி அதற்கு ஒரு விளக்கம் தருவார் -

'நமக்கு கஷ்டம் வந்திடுச்சேன்னு மிரண்டுறக் கூடாது. கஷ்டம்ன்றது தெய்வீக அறுவை சிகிச்சை! நம்மைத் திருத்த ஆண்டவன் அனுப்பறது. பூ மலருவது போல நாம மலரக் கிடைக்கும் ஒரு வாய்ப்பாக்கும் அது. ஆக அனுபவிச்சு மலர்ந்துக்கணும்!' என்று.

மாலினியின் கணவரின் கோணம் வேறு மாதிரியானது -

'பிரச்சனைகள் நம்மைத் துன்பப்படுத்தறதில்லை - அதை நாம் கையாளும் விதந்தான் வருத்தம் தருது. அதிலிருந்து தப்ப பலர் ரெண்டு வழிகளில் முயலுவாங்க -

ஒன்று - தற்கொலை... அடுத்தது ஆழ்ந்த உறக்கம் - அதனால்தான் சிலர் ட்ரக்ஸ் எடுத்துக்கறது - தகுந்த ஆலோசனையுடன் பிரச்சனையை அணுகணும்' - என் பார்.

கீதாவின் பிரச்சனை எதுவாயினும் அதற்கேற்ற ஆலோசனை சொல்லும் தகுதி தனக்கு உண்டா என்ன?'

உடனே எதையும் சொல்லாமல், மனோதத்துவ வைத்தியரான தன் கணவரிடம் வந்து பேசிதான் செய்ய வேணும்.''

சிறு சமோசாக்களோடு காபிக்கு ஆர்டர் தந்தவள், கீதாவிற்காய் காத்திருந்தாள். உத்யோகம் ஏதும் பார்க்காத, குழந்தைகள் இல்லாத கீதாவிற்கு அப்படி என்ன பெரிதாய் பிரச்சனை இருக்கக் கூடும் என்று தனக்கே சமாதானமும் சொல்லிக் கொண்டு!

சற்றைக்கெல்லாம் அவசரமாய் சுற்று முற்றுமாய் பார்த்தபடி நுழைந்த கீதா முன்பு பார்த்ததற்கு சற்று மெலிந்திருந்தாள். வயதிற்கு மீறிய சோர்வு முகத்தில்... கண்களின் கீழ் கருவளையங்கள். கவனமாய், ஆர்வமாய் உடுத்திக் கொள்ளவும் இல்லை என்பதால், பகட்டான அச்சூழலுக்குப் பொருந்தவில்லை அவளது தோற்றம்.

பழுப்பு ரா ஸில்க் குர்தியில், சிறு வைர நகைகளோடு கையசைத்த மாலினியை பார்த்துவிட்டு நெருங்கியவள் -



''தாங்க்ஸ் மாலு... ஸாரி, டிராஃபிக்ல லேட்டாயிடுச்சு... ரொம்ப தொலைவில்லையா?'' என்றபடி இவளது கைப் பற்றியபடி அமர்ந்தாள்.

கண்ணாடி குவளையிலிருந்த குளிர்நீரைப் பருகி விட்டு,

''ஜம்முனு இருக்கே மாலு. உடம்பும் கூட கட்டு விடலை உனக்கு'' பாராட்டினாள்.

சதா எதையேனும் இழுத்துப் போட்டு செய்யும் சுபாவம் என்பதால் மாலினியின் எடை அதிகம் கூடவில்லை. தோட்ட வேலையின் போது கையுறை, தொப்பியுடன் இருப்பதால் சருமமும் பாதிப்படையவில்லை.

'நீயுந்தான் நல்லாயிருக்கே' என்று பதிலுக்குக் கூற முடியாததால் -

''உன்னைப் பார்க்கிறதில் சந்தோஷம், கீதா'' என்றாள் தானும் நிஜமான பிரியத்துடன்.

கொறிக்க, குடிக்க சிலது ஆர்டர் செய்ததுமே கீதா கேட்டாள் -

''ஒரு மணி நேரமேனும் நீ என்னோட இருக்க முடியுமில்ல மாலு?''

ஆனால் அதற்கான பதிலுக்குக் காத்திருக்காமல்,

''நான் ரொம்ப ஆபத்தான... இக்கட்டான நிலையில இருக்கேன்'' என்று தொடர்ந்தாள்.

அவள் சொல்வது கற்பனை அல்ல என்பதை அவளது கை விரல்களின் நடுக்கமும் விழிகளின் கலக்கமும் உறுதி செய்தன.

''நேரமிருக்குது கீதா - நிதானமாய் சொல்லு''

''நெருங்கின குடும்பம்னு இப்ப எனக்கு இங்கே யாருமில்லை. குடும்பத்து பெரியவங்ககிட்ட சொன்னாலும், அவங்க பெருசா என்ன செய்திட முடியும்? அவங்க மனசும் சங்கடப்படறதுதான் மிச்சம். ஆனா மனசை அழுக்கற பாரத்தை யாரிடமேனும் சொல்லி இறக்கி வைக்கணுமே?''

'அதிகம் கறுத்திருக்கிறாளே?' என எண்ணிய மாலினி மெள்ள

''ஹெல்த் - பிராப்ளம் இல்லையா?'' வினவினாள்.

''இந்த நிலைக்கு என்னைத் தள்ளிட்டார். மற்றபடி எனக்கு ஒரு கேடுமில்லை'' கீதாவின் கண்களில் தேங்கிய நீரில் கோபம் கொப்பளித்தது!

'யார் - அவர்?' என்று குறுக்கிடாமல் காத்திருந்தாள் மாலினி.

இவளும் இடைபுகுந்து பேசினால் நிச்சயமாய் ஒரு மணி நேரத்தில் பேசித் தீராது.

தவிர கொட்டித் தீர்க்க வேண்டியது கீதாதான்... ஆக மௌனமாய் அவள் பேசியதைக் கேட்டபடி இருந்தாள்.

## 3

அவர்கள் சாப்பிடுவதற்காய் வரவழைத்ததில் பாதி தொடப்படாமல் கிடந்தன.

இப்படி ஒரு கதையை மாலினி எதிர்பார்க்கவில்லை.

கீதா சொன்னவற்றை நம்பவா அல்லது 'வீண் பிரமை' என்று ஒதுக்குவதா என்று முடிவு பண்ண முடியாத குழப்பம்.



தனிமையும் வெறுமையான வாழ்வு இந்தப் பெண்ணை ஒரு மனநோயாளியாய் மாற்றி விட்டதா?

ஆனால் தெளிவாய் கோர்வையாய்தானே பேசுகிறாள்?

''நம்ப முடியலைல்ல மாலினி?'' கசப்பாய் முடித்தாள் மற்றவள்.

''கேட்க வருத்தமாயிருக்குது கீதா... ஆனா இந்த நிலை எவ்வளவு நாட்களாய்?''

''தேங்க்ஸ் மாலு... 'தப்பாய் கற்பனை செய்றே கீதா'ன்னு எடுத்ததும் சொல்லாமல் என்னை நம்பினதுக்காய் ரொம்ப நன்றி. எனக்கே நம்ப முடியலியே... எங்களுக்குக் கல்யாணமாகி ஏறக்குறைய 20 வருஷமாகப் போகுது... ஒரிரு மாதங்களாய் என் கணவரே எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் விஷம் வச்சு கொல்ல முயற்சிக்கறார் என்பது... இனி நான் யாரைத்தான் நம்பறது?''

''சமீபமாய் தத்து வேற எடுத்ததாய் சொல்ற? அதுவும் 22 வயசுப் பெண்ணை?''

''நம்ப சொத்திற்கான வாரிசு நம்ப வம்சமாத்தான்னு இருக்கணும்னு அவர் தன் அண்ணாம் மகளையே தத்து எடுத்துகிட்டார்.''

''அத்தான் பேர் விஸ்வநாதன் இல்லையா?''

''தத்தெடுத்த பிரியா என்னை அம்மான்னு கூப்பிட முடியுமா? 'சித்தி'ன்னு கூட பாசமாய் கூப்பிட மாட்டா... அவளுக்கு நான் ஒரு பொருட்டே இல்லை.''

''பக்கத்திலுள்ள கல்லூரியில் லைப்ரரியின் வேலையை அத்தான் பிரியாவிற்கு பார்த்துக் கொடுத்தாருன்னே - அதற்கான கோர்ஸ் ஏதும் படிச்சிருக்காளா?''

''ரெண்டு வருஷமாவே இவருக்குள் இந்த 'தத்து' திட்டம் இருந்திருக்கும் போல - ஆக அவளை அந்த கோர்ஸை முதல்லியே படிக்க வச்சிட்டார். ஆக எங்க வீட்டுக்கு வரவும், அவ வேலைக்கும் போய் வர ஆரம்பிச்சுட்டா.''

''அப்படித்தான் அவள் அந்த பிரதாப்போட பழகியிருக்கணும் ம்ம்?''

''அவனுக்கும் எங்க குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை மாலு. பல கிராமங்களுக்கு எங்க ஊர் மையமாய் இருக்கறதால், இங்கே ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர் ஆரம்பிச்சா, லாபம் பார்க்கலாம்னு அந்த பிரதாப் தம்பி வியாபாரத்தை ஆரம்பிக்க, பிரியாவோட மட்டுமல்ல, நம்ப வீட்டோடயே நல்லாப் பழகிடுச்சு. எங்கிட்ட அத்தனைப் பாசமாய் பழகும்.''

''ஒரு மூணாம் நபர் வீட்டுக்குள்ளே வந்து நெருங்கிப் பழகறது அத்தானுக்குப் பிடிக்காமல்தான்..?''

''எனக்கு விஷம் வைக்கிறாங்கறியா? அதுக்குக் காரணம் செக்ரட்டரிங்கற பேர்ல அவர் கூட்டிட்டு வந்த அந்த சிங்காரிதான்.''

''அதாவது சொர்ணம்ங்கற அந்த 35 வயசுப் பொண்ணு?''

''கல்யாணமாகாதவ... ஆக சின்னப் பொண்ணாட்டம் உடுத்திட்டுக் கொஞ்சி கொஞ்சி வேறப் பேசுவா... கண்ராவி.''

''உங்க வீட்டுக்காரர் பண்ணை, உரம்னு பார்க்கும் வேலைக்கு ஏன் செக்ரட்டரி? அதுவும் சிங்காரமாய்?''

''தன் அனுபவத்தை எல்லாம், புத்தகமா எழுதப் போறாராம். ரெண்டு வார்த்தை கோர்வையா அவருக்குப்



பேசவே வராது... எங்க எழுதறது? அதுக்குத்தான் அவ.''

''எல்லாம் இருக்கட்டும் கீதா. ஆனா உனக்கு விஷம் வைக்கறதுதான் ஒத்துப் போகலை.''

''பிரியா அவரு அண்ணம் பொண்ணு. அவளுக்கு அந்த பிரதாப் மேல நோக்கம்... இவருக்கு அதாவது என் வீட்டுக்காருக்கு சொர்ணம் மேல கிறக்கம். அவளுக்கு இவரளவு வசதியும் அசடுமாய் வேறு ஒருத்தன் அகப்பட மாட்டான். ஆக அந்த நாலு பேரும் ஒண்ணுக்குள்ள ஒன்னாப் போயிட, வேண்டாம்னு விடுபட்டு நிக்கறது நாம் மட்டுந்தான?''

சொன்னவளின் உதடு கோணி, அழுகை பொங்கியது.

''ஷ்... ஒரு மணி நேரத்துக்கு மேலாகவே நாம இங்க இருந்துட்டோம். எழுந்திரி.''

கீதா வந்த டாக்ஸியை அனுப்பி விட்டு இருவரும் மாலினியின் சிறு 'வாகன்-ஆர்'ரில் ஏறிக் கொண்டார்கள். பக்கத்திலிருந்த பூங்காவிற்குப் போய், வசதியான ஒரு இருக்கையைப் பிடித்தார்கள்.

மதிய நேரத்தில் அங்கு அதிகக் கூட்டமில்லை. யாரும் நம்மைக் கவனிக்கிறார்களோ என்ற கூச்சமின்றி, பேச முடிந்தது.

''உனக்கு எது பிடிக்கலையோ, அதை அத்தானிடம் இதமாய் எடுத்துச் சொல்லிடலாமே கீதா?''

''இருக்கற நாலு பேருக்கும் நாற்பது விதமான சமையல். சாப்பிட்டபடி டி.வி.யில் மேட்ச் பார்க்கறதும், சீட்டு, கேரம்னு ஆடறதும் எனக்கு சகிக்கலை. அதைச் சொன்னால்,

'இதுவரை உம்முகத்தை நானும், என்னை நீயுமாய் பார்த்து 19 வருஷத்தைக் கழிச்சாச்சு. இனியேனும்

பேச்சும் சிரிப்புமாய் இருக்கட்டுமே நம்ப வீடு. சாப்பாட்டுல சிக்கனம் பிடிச்சு யாருக்கு சேர்த்து வைக்கணும்? பிரியா கூட நமக்குப் பிறகு இங்கயே இருப்பாளோ இல்ல பண்ணையை வித்துட்டு சென்னைக்குள்ள போயிடுவாளோ - தெரியாதும்பார்.''

''பிரதாப்பை பிரியா கல்யாணம் பண்ணினால் அவங்க தொடர்ந்து பண்ணையிலேயே இருக்கலாம்னு கூட அத்தான் யோசிச்சிருக்கலாம்... ஆனால் எதையும் உன்னிடம் பேசி, கலந்தாலோசித்து பிறகு முடிவு பண்ணியிருந்தால், உனக்கு தனியாய் விடப்பட்ட ஃபீல் வந்திருக்காது.''

''அது உணர்வில்லை... நிஜம். ரெண்டு மாசம் முன்னேதான் முதன் முதலாய் எனக்கு சாப்பிட்டதும் விநோதமாயிடுச்சு... வயிறைச் சுருட்டி வலிக்க, குமட்டியது. ஓய்ஞ்சு படுத்திட்டேன். பிறகு ஒரு வாரம் எதுவுமில்லை... மறுபடி ஆரம்பமாச்சு...''

''ஏதோ ஒவ்வாமையினால்... இருக்குமோ?''

''இதுவரை அப்படி ஏதுமில்லையே? தவிர மற்றவங்க எல்லாம் கிழங்காட்டம் இருக்க எனக்கு மட்டுமேன் அவதி?''

''அத்தான்தான் காரணம்னு ஏன் நினைக்கறே கீதா?''

இவர் கிச்சனுக்குள்ள அநாவசியமாய் போயிட்டு வர்ற அன்னைக்கெல்லாம் எனக்குக் கோளாறாயிடும்! முதல் தரம் சொர்ணம் ஏதோ பழ அப்பம் செய்ய சமையலறைக்குள் புக, இவரும் அசடாட்டம் பின்னே போனார்... அன்றுதான் எனக்கு ஒரு அசௌகரியம் வயிற்றிலே...''

''ஓஹோ? அப்ப ஏன் சொர்ணத்தை சந்தேகிக்கலை நீ?''



''பிறகு அவளை நான் சமையலுக்குள் விடலையே? இவர்ட்ட கண்டிச்சு சொல்லிட்டேன். எழுத வந்தவ முன்னறையோட நின்னுக்கட்டும் - மீறி வரவேணாம்னு... விஷம், வசியம்னு ஏதேதோ செய்யுதுங்க - அதெல்லாம் ஆபத்துன்னு நான் எடுத்துச் சொன்னதை ஏதோ கேட்டுகிட்டார்... ஆனால் யோசிக்க, விஷம் வச்சு என்னைக் கழிச்சு விடற எண்ணம் அவருக்கு. அப்பதான் தோணியிருக்குமோ என்னவோ?''

கீதாவின் முகக் கருமை மேலும் கூடித் தெரிந்தது. விஷமேறி நீலமானதுதான் தன் பார்வைக்குக் கீதா கருத்துப் போனதாய் தெரிகிறதோ?

இப்போதே இவளைக் கூட்டிச் சென்று ரத்தத்தைப் பரிசோதனை செய்து விட்டால் என்ன?

ரத்தத்தில் விஷக் கலப்பு இல்லாவிட்டால் கீதாவின் பயத்தை நீக்கி விடலாம். ஆனால் ஒருவேளை பிரச்சனை இருந்தால், மருத்துவரான தன் கணவரும் அருகே இருப்பதுதான் பாதுகாப்பு. அடுத்து என்ன செய்யலாம் என்ற குழப்பம் இராது.

''அவர் அடிக்கடி உரம், பூச்சிக் கொல்லி விற்பனை சம்பந்தமாய் வெளியூர் போவார் மாலினி. அப்ப எனக்கு எந்தக் கோளாறும் நேரலை... நான் அசமந்தம்.. இதைக் கூட கண்டு குறிப்பிட்டது பிரதாப்தான்...''

இப்போது மாலினியால் குறுக்கிடாமல் முடியவில்லை.

''அது சரியாய் படலையே? அத்தான் ஊரில் இருக்கும்போதுதான் உனக்குப் பிரச்சனைன்னு உன்னிடம் சொல்றது தம்பதிகளான உங்களிடையே பிரிவை உண்டுபண்றதாய் தோணுது...''

''பிரதாப் மட்டுந்தான் எங்கிட்ட பாசமும் அக்கறையும் காட்டுற ஒரே நபர். அவனையும் சந்தேகிக்கறது, குறை சொல்றது சரின்னு எனக்குப் படலை. எம்மேல் இருக்கும் அக்கறையினால் அதை அவன் கவனிச்சிருக்கலாமே?''

''இன்னொரு விஷயம் கீதா. எல்லாருக்கும் பொதுவாய் சாப்பாட்டு மேஜையில் உணவு பரப்பி வைத்திருக்க, உனக்கு மட்டும் எப்படி பிரச்சனை ஆகுது? எல்லாரும் அதையேத்தானே சாப்பிடறாங்க?''

''சாதம் எல்லாருக்கும் பொது. குழம்பும் காயும் எனக்குத் தனியே தயாராகும். ஷுகரோட பி.பி.யும் வந்திருச்சே.''

''அதான் கொஞ்சம் இளைச்சுத் தெரியறே.''

''எனக்கான குழம்பு - பாத்திரம் சின்னது. சுலபமாய் அடையாளந் தெரியும் - ஆக அதில் எதையேனும் சேர்க்கறது சுலபம்.''

''ஆனா அதற்கு மனம் வர்றது சுலபமேயில்லை கீதா. எனக்கு அத்தானை அதிகம் தெரியாது... ஆனாலும் இத்தனை வருஷமாய் உன்னோடு வாழ்ந்தவர், உன்னை அழிக்க... அதுவும் அடிக்கடி முயலுவார்ன்றது... ஏனோ ஏற்க முடியலை.''

''என்னாலும் முதல்ல நம்பத்தான் முடியலை... ஆனால் வயிறு காந்தும்.. மேலெல்லாம் நமைச்சல், குமட்டல்னு விளைவுகள் எல்லாம் நிஜம் மாலினி. பிரியா வந்ததிலிருந்து என் நிம்மதி போச்சு - வீடே மாறிப் போச்சு. இவளுக்கு என் சொத்தெல்லாம் போகணும்னா... அது என்ன நியாயம்? யாருக்குமே அதற்கான



தகுதி இருக்கறதாய் நான் நினைக்கலை... எல்லாரும் பேராசைக் கழுகுங்க...''

ஆவேசமாய் குற்றம் சாட்டினாள் கீதா.

## 4

'நெற்றிக் கண்ணைத் திறப்பினும்

குற்றம் குற்றமே!'

என்று முறுக்கிக் கொண்டு நின்ற நக்கீரரைப் பற்றி மாலினியின் கல்லூரி ஆசிரியை சொன்ன ஒரு வித்தியாசமான கருத்து இவளுக்கும் ஏற்புடையதுதான்.

'வானுலக மகளிரின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்று சிவன் சொல்ல, அதை நக்கீரர் எப்படி மறுக்கக் கூடும்? இந்த மானுடனுக்கு வானுலகப் பெண்களைப் பற்றி என்ன தெரியும்? அவர்களைப் பார்த்ததும் கூட இல்லையே அப்புலவர்? தான் சங்கப் புலவர் எனும் பெருமிதத்தில் தனக்குத் தெரியாத சங்கதியைத் தெரிந்தது போல பேசியதால்தான் சிவனின் நெற்றிக் கண் திறந்து விட்டது!'

மொத்தத்தில் நம் குற்றம் குறைகளை மறைக்கவே நாம் பிறரைக் குற்றம் சாட்டுவது. நாம் பிறரில் துருவித் தேடும் தீய குணங்கள், பிறகு நம்மையே அடைந்து நம்மை அழிக்கும் என்றும் ஆன்மீகம் சொல்ல, மாலினி பிறரில் குற்றம் தேடும் குணத்தை தன்னில் முடிந்தளவு ஒடுக்கி விட்டாள்.

கீதா அதற்கு மாறாய் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் குற்றம் தேடி, அதில் கசந்து போயிருந்தாள்.

பிரதாப் தன்னிடம் பரிவாய் நடந்து கொள்வதாய் சொன்னாலும், வேறு ஏதோ ஒரு தகவலை கீதா மறைப்பதாய் பட்டது மாலினிக்கு.

''பிரதாப் உன்னிடம் பிரியமாய் பழகியதாய் சொன்ன... எப்படினு சொல்ல முடியுமா?''

''வீட்டுக்கு வந்ததும் என்னிடம் வந்து ரெண்டொரு வார்த்தை பேசுவான். நான் சமையல் கட்டில் இருந்தாலும் தேடி வந்து விசாரிச்சிடுவான். அவன் ஸ்டோருக்கு புதுசாய் வர்ற மசாலா பொடி, சோப், பேன்ஸி டப்பாக்கள் எனக்குப் பரிசாய் வரும்... எல்லாத்தையும் விட.''

தயங்கியவளை ஊக்கினாள் மாலினி -

''போன மாசம் எம் பிறந்தநாளுக்கு ஒரு புடவை கூட வாங்கித் தந்தான்'' என்றவள் மறுபடி அழுதாள் - ''இவர் இத்தனை வருஷத்துல ஒரு தரம் கூட பூ, புடவைனு வாங்கிட்டு வந்து நின்னதில்ல தெரியுமா? -

'எனக்கந்த இழவெல்லாம் என்னத்த தெரியும்? உங்கிட்டதான் வேண்டிய காசத் தந்துடறேனே - போய் வாங்கிக்க'ம்பார். நானும் அதுக்குப் பழகிட்டேன்னாலும் ஒருத்தர் நமக்காக கடையேறி போய் தேடி ஒரு பொருளை... அதும் புடவைய வாங்கி வந்து நீட்டும் போது நெஞ்சு உருகிடுதுல்ல?''

அந்த உருக்கம் கண்ணீராய் பெருகி ஓடியது.

''ஒரு தரம் அரளித் தோட்டத்துல நின்னபோது, விஷம்னால் கூட இந்தப் பூவின் நிறம் எத்தனை ரம்யம்னு நான் சிலாகிச்சதை நினைவு வச்சிருந்து அதே நிறத்துல சேலைய தேர்ந்தெடுத்திருந்தான்... பிறகுதான்...



இவனுக்கு நான் ஏதேனும் செய்யணுமேன்ற யோசனை வந்தது எனக்கு...

மறுபடி தன் பேச்சுக்கு கடிவாளமிட்டு நிறுத்தி விட்டாள் கீதா. ''பிரதாப் உங்கிட்ட இப்படி பிரியங்காட்டறதில் பிரியாவுக்கு?''

மாலினி இழுத்தாள்.

''அவளுக்குதான் நான் ஒரு பொருட்டேயில்லையே? கொல்லையில் கத்துற காக்காக்கு ஒரு கவளம் சோறு வைக்கிற வேலைக்காரிய நாம கோவிச்சுக்கறோமா என்ன?

கசப்பாய் கேட்டாள்.

''ஆங்... உங்க வீட்டில் சமையல்காரி உண்டில்லையா? அவளைப் பற்றிச் சொல்லு.''

''பேரு மல்லிகா. ரெண்டு வருஷத்துக்கு முன்னே வரை சமையலுக்கு ஆம்பிளைதான். வயசான அவருக்கு முடியலைன்னு ஆனதும் இந்தப் பொண்ணு வந்தா. விதவை - முப்பத்தஞ்சு வயசிருக்கும். ஒரே பொண்ணை படிக்க ஹாஸ்டல்ல சேர்த்து விட்டிருக்கா. லீவ் சமயம் அந்த குட்டி நம்ப பண்ணையில வந்து இருக்கும் - வேற என்ன?''

''அந்த மல்லிகா வேறு யாருக்காகவோ உன் சாப்பாட்டில் விஷம் கலக்கறாளாய் இருக்குமோ?''

மாலினியின் கைகளை எடுத்துக் தன் கன்னங்களில் பதித்து முத்தமிட்டாள் கீதா.

''தாங்க்ஸ் மாலு. நான் கேட்டதும் கிளம்பி வந்தது மல்லாமல்ல, நான் சொன்னதை நம்பறியே... எம்மனசு

நிம்மதியாயிடுச்சு. எவ்வாழ்வு தனிமையும் வெறுமையுமாய் கழியறதால் என் புத்தி பிசகிடலை. நீ பண்ணை வீட்டுக்கு வந்து பாரேன் - உனக்கேப் புரியும். அங்க வேண்டாதவன்னா, அது நாம் மட்டுந்தான். நாம் போனதும் அவர் அந்த சிங்காரியைக் கல்யாணம் பண்ணிக்குவாரு. பிரதாபுக்கு பிரியா - அவங்க வாழ்வு சிக்கலில்லாத போகும்.''

''அந்த செக்ரட்டரி பெண்ணின் குடும்பம் பற்றி ஏதும் தெரியுமா?''

''வேலைக்கு வந்தவள்ட்ட இழைஞ்சு என்னத்த விசாரிக்கறது? ஏன்... பிரதாப் பற்றியும் கூட எனக்கு ரொம்பத் தெரியாது மாலினி...''

''அவன் எங்கே படிச்சான். குடும்பம் எங்கே இருக்குது - என்ன பண்ணுது - இப்படி ஏதும்..?''

தலையசைத்தாள் கீதா.

''நீ உனக்குள்ளேயே அமிழ்ந்து மற்றவர்களை கவனிக்காமல் விட்டுட்டதாய் தோணுது கீதா.''

''எனக்கு மனுஷர் மேல ஈடுபாடு அற்றுப் போச்சு மாலு. பிரியாவைப் பார்க்க இவர் அண்ணன் குடும்பம் வந்துட்டு போகும் போதெல்லாம் எனக்கு மிஞ்சறது தலைவலிதான்.''

''அப்ப, யாரோடத்தான் பேசுவ?''

''காய்கறி தோட்டமும் போட்டிருக்கோம். ஏழெட்டுப் பொண்ணுங்க கூடையோட வந்து வாங்கிப் போகுங்க - அதுல செல்வி மட்டும் எங்கிட்ட வந்து உரிமையாய் பேசுவா. நான் வயிறு வலில சுருண்டு கிடக்கற



போதுகூட, உள்ளே வந்து என்னைப் பார்த்துட்டுப் போவா... அவட்டதான் நாலு வார்த்தை நான் சேர்த்தாப்ல பேசறது.''

''அவளிடம் உன் சந்தேகத்தை சொன்னியா கீதா?''

''பூடகமாய் பேசினதுண்டு. அவதான் 'என்னம்மா வாடிப் போயிட்டீங்களே, டாக்டர் என்ன சொல்றார்?'னு கரிசனைப் படுவா.''

''அதான... உனக்கு மருத்துவம் பார்க்கற டாக்டர் யாரு?''

''ஏழைக்கேற்ற எள்ளுருண்டை! எங்க குடும்ப டாக்டர்னு ஒருத்தர் - வெறும் எம்.பி.பி.எஸ். தான்.''

''தப்பு கீதா. எத்தனை ஸ்பெஷலிஸ்ட்ஸ் வந்தாலும் நம் உடல்நலம், குடும்பம் பற்றி அறிந்த டாக்டர் ரொம்ப அவசியம்.''

''அவர் சொன்னபடி எனக்கு ''காஸ்ட்ரைட்டிஸ்'' பிரச்சனை. முப்பது வயதிலேயே பி.பி., ஷுகர் எல்லாம் வந்துட்டதால் மற்ற நோயின் பாதிப்பு அதிகம்ன்றார். தவிர நேசிக்க யாருமில்லாமல், மனசாரப் பேசவும் கூட ஆளில்லாமல் நான் மூச்சடைச்சு கொஞ்சம் கொஞ்சமாய் சாகறது புரியாமல் எனக்கு இவர் விஷம் வேற வைக்கிறார்...''

''இவரோட உங்க வீட்டுக்கு சீக்கிரம் வர்றேன் கீதா.''

''வா. ஆற்று நீர் அதுபாட்டுக்கு ஓடும் - ஆனால் சாக்கடையை மூடியும் மறைக்க முடியாதுன்னுவாங்களே... அது போல எங்க வீட்டை ஒரு விநோத மௌனம், திரை மூடியிருக்குது. வந்து அதிலிருந்து என்னைக் காப்பாற்ற கூடுமான்னு பாரு மாலு...''

# 5

அலைச்சலும் மன உளைச்சலும் மாலினியை அன்று சீக்கிரமே உறங்க வைத்து விட்டன.

நேரம் சென்று வீடு திரும்பிய டாக்டர். மகிபன் தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு திறக்க முடிந்ததால் தம்பதிகள் காலை வரை பேச நேரவில்லை.

இரவு தன் கனவில் பல புது முகங்கள் வந்து பேசியதை, நடமாடியதில் மாலினிக்கு நிம்மதியான உறக்கமில்லை. ஆனாலும் எழுந்ததுமே தன்னிடம் நேற்று கீதா சொன்னவற்றை குறித்து வைத்தாள்... அது சற்று தெளிவு தந்தது.

இனி கணவனிடம் ஓரளவு கோர்வையாய் விவரம் சொல்லலாம் என்ற நினைப்புடன் தன் சுருண்ட கூந்தலை வாரிக் கட்டியவள், மகிபனோடு சேர்ந்து நடப்பதற்குத் தோதான உடைக்குள் புகுந்தாள். இப்போது விட்டு விட்டால் பிறகு அவரைப் பிடிப்பது லேசில்லை...

''ஹா... என்னோடு நடக்க இன்று ஒரு அருமையான துணை இருக்குது போல?''

சீண்டலுடன் கேட்டது மகிபன்தான்.

''ம்ம்... நான் ரெடி.''

''பேசறதை நாம உட்கார்ந்தே பேசலாமே மாலு.''

கணவர் அடிக்கடி இவள் நோக்கமறிந்து பேசுபவர்தான் என்றாலும், ஒவ்வொரு முறையும் இவளுக்கு அது ஆச்சரியம் அளிக்கத் தவறுவதில்லை.



''உங்க 'வாக்'கைக் கெடுக்க வேண்டாமே.''

''நடந்தபடி பேசுவது உடற்பயிற்சிக்கு அத்தனை உகந்ததில்லை. சீராய் மூச்சு விட்டபடி பேசாமல் விறுவிறுன்னு நடக்கறதுதான் சரி. தவிர நீ பேச நினைப்பது சீரியஸ் மேட்டர் - இல்லையா?''

''எப்படி மகி?''

''நேற்றிரவு நீ அதிகம் புரண்டே... நிம்மதியான தூக்கமில்லை. உன் கஸினோடு பேசியதில் குழம்பியிருக்கே?''

கணவரை காதலும் சிறு கர்வமுமாய் ஏறிட்டவள், இறுகக் கட்டியிருந்த கூந்தலைப் பிரித்துக் கோதினாள். தலை சற்று பாரமாய் தோன்றியது.

''ஒரு நிமிஷம்'' என்றபடி உள்ளே போன மகிபன், வந்தது இரு காபி கோப்பைகளுடன்.

''ஓ... தாங்க்ஸ்.''

''குடிச்சு முடி - பிறகு பேசலாம்.''

பாதி பருகுவதற்குள் தொலைபேசி அழைக்க, மகிபன் எழுந்தார். இந்நேரம் வரும் அழைப்புகள் அவருக்காகத்தான் இருக்கும்.

தன் கணவனின் பிரியத்தை அனுபவித்த மாலினிக்கு ஏனோ கீதாவின் மீது மேலும் அனுதாபம் பெருகியது.

'இந்த காபியில் விஷம் கலந்திருக்கிறாரோ?' என்ற சந்தேகமே ஒரு மனைவியை சாகடிக்கப் போதுமே!

சில நிமிடங்களில் திரும்ப வந்த மகிபன் அமராமல் தன்னையே பார்த்தபடி நிற்க, இவளுக்குள் புது பதட்டம் ஒன்று.

''உட்காருங்களேன்.''

''ம்ம்... அழைச்சது உங்க சித்தப்பா - மிஸ்டர். கிரிதரன்.''

மாலினியின் முகம் வெளிறியது.

''கீதா இறந்துட்டதாய் சொன்னார்.''

ஏற்கெனவே கனத்த அவளது தலை இப்போது சுழன்றது!

'வாழ்க்கையை ஒழுங்குபடுத்த கட்டுப்பாடுகள் எவ்வளவு அவசியமோ, அதே போல வாழ்வை சுவாரஸ்யப்படுத்த த்ரில் தேவை' என்ற சித்தாந்தத்துடன் கீதா நேற்று தன்னிடம் சொன்னதெல்லாம் கற்பனையோ... என்று அவளுள் இருந்த சந்தேகத்தை ஒரு பெரிய அமில அலை வந்து அடித்துப் போனது.

அப்படியானால் கீதாவின் அச்சமும் அனுமானங்களும் உண்மைதானா? கீதாவின் சாவிற்குக் காரணம் யார்?

''என்னாச்சாம்?'' மெள்ளக் கேட்டாள்.

''சில நாட்களாய் வயிற்று வலினு சொல்வாங்களாம். ஆனால் இப்படி சிறு வயசில் போவான்னு நாங்க நினைக்கலியேனு அழறார் உங்க சித்தப்பா.''

''இப்ப நான் என்ன செய்யணும் மகி...?''

''நேற்று கீதா உன்னைப் பார்த்து பேசியதை நான் குறிப்பிடலை... இப்போதைக்கு அந்தக் குழப்பம் வேண்டாம்னு தோணுச்சு.''

''அது தெரிய வரும்போது எல்லாரும் என்னை விசாரிப்பாங்கல்ல - உறவுக்காரங்க மட்டுமில்லை - போலிஸும் கூட?''



''ம்... நீ ரெடியாகு. நான் என் அப்பாயின்ட்மென்ட்டை மாற்றித் தாணும். பண்ணை வீட்டுக்குப் போக ஒன்னரை மணி நேரமாகும் - அப்போ நீ என்னிடம் விவரங்களைச் சொல்லு.''

மாலினி போய் படுத்து விட்டாள் - உடம்பு அதிர்ந்து கொண்டிருந்தது. நேற்று தன்னிடம் அத்தனைப் பேசிய கீதா இன்று இல்லை. தன் கைகளைப் பற்றி முத்தமிட்ட அவளை இன்று சடலமாய் பார்க்கப் போகிறேன்... இப்படி ஒரு பயங்கர நாடகத்தினுள் தன்னை கொண்டு போய் நிறுத்திவிட்டு போய் விட்டாளே? தொடரும் நாடகத்தின் முக்கிய கதாபாத்திரமாய் தான் இனி மர்மமும் குழப்பமுமாய் எத்தனை காலம் போராட வேண்டி வரும்?

சிறு வயது கீதாவின் குழந்தைத் தனமான முகமும் நேற்று சந்தித்த சோர்ந்த, சஞ்சல முகமும் நினைவிலாடி இவளை அழ வைத்தன.

பாவம்... கீதாவின் ஆசைகள் எளியவைதான். பெரும்பாலான பெண்களைப் போல அம்மெல்லிய ஆசைகளைக் கொண்டு தன்னைச் சுற்றி சிலந்தியைப் போல ஒரு வலை வீடு கட்டி, அதற்குள் ஊர்ந்து கிடந்திருப்பாள். குழந்தைப் பேறு வாய்க்கா விட்டாலும் கணவரின் அரவணைப்பு, சில பாசமான உறவுகள், நிம்மதியும் கூட ஏன் அவளுக்கு வாய்க்கவில்லை?

கூந்தலை மறுபடி கோதி கட்டியவள், வீட்டை மூடிவிட்டு காரில் ஏறினாள். முடிந்தவரை கோர்வையாய் நேற்றைய நடப்புகளை தன் கணவனிடம் சொல்ல [illegible]ாள்...

# 6

பண்ணை வீட்டின் வெளியே 15 கார்களுக்கு மேல் ஒழுங்கின்றி நிறுத்தப்பட்டிருந்தன.

பலர் கூடியிருந்தும் அங்கு நிலவிய மௌனம், நடந்தது. ஒரு பெரிய அசம்பாவிதம் என்பதை அறிவித்துக் கொண்டிருந்தது. தாழ்ந்து, அகண்ட கூரை வேய்ந்த பங்களா பாணி வீடு அது. அதனுள் நுழைந்ததுமே மரணத்தின் வாசனை எதிர்கொண்டது! ஊதுபத்தி, பூமாலைகளை மீறிய ஒரு குரூர வாடை... இருளோடிய முகங்களுக்கு ஏற்ப அப்பெரிய கூட்டத்திலும் அதிக வெளிச்சமில்லை. தணிந்த குரல் பேச்சுக்களும், விசும்பலும் மனதைக் குத்தின.

நடுவே ஓய்ந்து கிடந்தாள் கீதா!

வாங்கி வந்த பூமாலையை சடலத்தில் இட குனிந்தவளின் கண்களிலிருந்து சரம் சரமாய் நீர் வடிந்தது. வாழ்வின் நிலையாமை, கீதாவின் நிரந்தரப் பிரிவு, அவளுக்கு நேர்ந்த பரிதாப முடிவு... அத்தனையுமாய் சேர்ந்து கிளப்பிய துக்கம் அது.

ஒரு ஓரமாய் உட்கார்ந்த சில நிமிடங்களில், தன் கணவர், கீதாவின் கணவரைக் கூட்டிக் கொண்டு பக்கத்து அறைக்கு நகர்வதை கவனித்தாள்.

வரும் வழியில் இவள் சொன்னதைப் பொறுமையாய் கேட்டபின், இருவருமாய் கலந்து பேசினார்கள்.

'கீதாவின் மரணத்திற்கு முன்பு நீ இதையெல்லாம் சொல்ல, நான் அதை மனப்பிறழ்வுனுதான் ஒதுக்கி



யிருப்பேன். அதற்கான சிகிச்சைக்கு அவங்களை வரச் சொல்லியிருப்பேன், மாலு. தங்கள் ஆசைகள் நிறைவேறாதபோது பலர் ஒரு கூட்டுக்குள் ஒடுங்கி, அதீத கற்பனைகளால் தங்களைப் போர்த்திக் கொள்வதுண்டு."

"அதன் விளைவு என்ன?"

"ஆரம்பத்தில் பெரிய ஆபத்தில்லை. ஆனால் சிகிச்சை தராவிட்டால், நோயாளியின் நரம்பு மண்டலமும், பின்னால் மூளையே செயலிழக்கும் அபாயம் உண்டு. ஸெரடோனின் போன்ற ஹார்மோன்ஸ் தேவைக்கு தந்து குணப்படுத்திடலாம்."

"ஒருவேளை கீதா... தற்கொலை செய்துகிட்டாளோ?"

"அப்படி ஒரு நோக்கம் இருந்திருந்தால், உன்னை அழைத்து, வரவழைத்துப் பேசியிருக்க வேண்டாமே... ஒரு கடிதம் எழுதி வச்சிட்டு தன் வாழ்வை முடிச்சிருக்கலாம். இந்த ஆபத்திலிருந்து மீள நினைச்சிருக்காங்க... ஆக கீதா சொன்னது உண்மையாய் இருக்கக்கூடும்..."

"அப்ப நாம் செய்ய வேண்டியதென்ன? நாளை ஈமக்கிரியைகள். அதோடு உண்மைகளும் எரிஞ்சு அடங்கிடுமே? வெறும் வயிற்று வலியால் சாவுன்றது. நம்ப முடியறாப்போல இல்லையே... நாமும் அதற்கு உடன் நின்றால் கீதா என்னைத் தேடி வந்து பேசினதற்கு அர்த்தமே இல்லாமல் போகுமே மகி?"

"கண்டிப்பா ஆட்டாப்ஸி செய்யணும். இல்லைன்னா 38 வயசில் சாவா - எப்படி ஏதோ மர்மம் இருக்கேனு ஒரு பேச்சு இருக்கும்தான்."

"பிரேத பரிசோதனைக்கு குடும்பம் ஒத்துக்குமா? இந்தப் பேச்சை யார்... எப்படித் தொடங்குவது?"

"நான் அந்த பொறுப்பை எடுத்துக்கறேன். கீதாவின் வீட்டுக்காரர் விஸ்வநாதனிடம் விவரத்தைச் சொல்லி, அவர் மூலமாவே, பரிசோதனைக்கு கேட்கச் சொல்லலாம்."

"விவரம்னா - கீதா வந்து என்னைப் பார்த்துப் பேசினதையா?"

"அதில் தப்பில்லை. அவரே சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்க ஆட்டாப்ஸி செய்ய கேட்டால், அவர் மேல் முழு சந்தேகம் விழாது; குடும்பத்துக்கு அவப் பெயர்... குறையும்."

ஆக அதைத்தான் மகிபன் இப்போது செய்து கொண்டிருக்கிறார் என்பது புரிய, மாலினி பதட்டமாய் உட்கார்ந்திருந்தாள்.

பலரும் விஸ்வநாதனை சற்று ஓரமாய் கூட்டிப் போய், செய்ய வேண்டிய சடங்குகள், இன்னும் தகவல் போக வேண்டிய வந்து சேர வேண்டிய உறவுக்காரர்களைப் பற்றி இதே போல பேசியிருக்கக் கூடும்... ஆனால் இப்போது பேசி விட்டுத் திரும்பிய விஸ்வநாதனின் முகம் மேலும் இறுகிக் கிடந்தது.

சலனமின்றி அத்தனை பேரின் நடுவே நீட்டி நிமிர்ந்திருந்த தன் மனைவியை வெறித்தது அவரது பார்வை.

'இறந்தும் என்னை நிம்மதியாய் விட மாட்டாயா?' என்றா, அல்லது -

'உன் சாவில் ஏதேனும் மர்மம் இருந்தால் நான் அதைத் தீர்க்காமல் விட மாட்டேன்' என்ற பொருளா அப்பார்வையில்?

முதல் காயை நகர்த்தி விட்ட நிம்மதியுடன் மாலினியின் கண்கள் அங்கு கூடியிருந்தவர்களை ஆராய்ந்தது.



'எல்லாம் என் பொறுப்பில்' என்ற தோரணையில் அங்கு வளைய வந்தவர்கள் விஸ்வநாதனின் அண்ணனும் அண்ணியுமாய் இருக்கக் கூடும். இவர்களது மகளைத்தான் விஸ்வநாதன் தத்து எடுத்தது - அத்தனை சொத்திற்கும் உரியவர்கள் நாங்கள்தான் என்பது போல ஒரு இறுமாப்பு அவர்கள் முகத்தில், பேச்சில் அப்பட்டமாய் தெரிந்தது.

இவர்களின் மகள் பிரியா?

அதோ... பளிச்சென்று வந்து உட்காரும் அந்தப் பெண்ணாய்தான் இருக்க வேண்டும்.

துக்கம், ஈரத்தின் சுவடில்லாத கண்கள்.

சற்று கலைந்த கேசமும் கூந்தலும்தான் என்றாலும் அது அவளது தோற்றத்தைப் பாதிக்கவில்லை.

இளமையை எதுதான் பாதிக்கும்? தனக்குள் பேசிக் கொண்டாள் மாலினி.

இப்பெண்ணின் மனம் கவர்ந்த, கீதாவையுமே இளக்கிய பிரதாப் - அவன் எங்கே?

வெளியே நிற்கக் கூடும். உறவினர்களில் அவன் ஒருவனில்லையே.

கீதாவின் கணவரும் வெளியே போய் விட, போனில் மாறி மாறி ஆண்கள் பேசிய சலசலப்பு.

நினைத்ததும் நடத்தி விடக் கூடியளவில் எளியதல்லவே பிரேத பரிசோதனை. முதலில் காவல் துறைக்கு தங்கள் சந்தேகத்தை ஒரு புகாராக்கிக் கொண்டு போய், பதிவு செய்து, பிறகு அரசு மருத்துவர்களால் செய்யப் பட வேண்டியதுதான் முறை.

அங்கிருந்த மௌனத்தைக் கலைத்தது ஒரு பெண்ணின் அலறல்.

''ஐயய்யோ... என்னாம்மா... இப்படி எங்களை விட்டுப் போக எப்படிம்மா மனசாச்சு? யாரழைச்சா...? எதுக் கழைச்சா...?

அழைச்ச எமனை துரத்த உங்களுக்கேன் நாதியத்துப் போச்சம்மா? காய்கறிய தாராளமாத் தந்து விடுவீகளே... இனி அப்படியொரு புண்ணியவதிக் காம்போமா... ஐயோ..''

இரு கைகளையும், உயரத் தூக்கியபடி ஒப்பாரி வைத்த அந்த கிராமத்துப் பெண்ணை மற்றவர்கள் விநோதமாய் பார்த்தாலும், மாலினிக்கு அவள் யாரென்பதை ஓரளவு யூகிக்க முடிந்தது. இங்கே விளையும் காய்கறிகளை வாங்கிப் போக வரும் செல்வி?

அதற்குள் குளிரூட்டப்பட்ட கண்ணாடி பெட்டி வர, சடலம் அதற்குள் பத்திரப் படுத்தப்பட்டது.

செல்வி தன் புலம்பலை நிறுத்தவில்லை.

''வயிறு கடுக்குதும்பாங்க... சாப்பாடு இறங்கலியே செல்விம்பாங்க. அது இப்படி மகராசிய அள்ளிட்டுப் போகும்னு நினைக்கலியே... யா... ஆத்தா...''

சில ஆண்கள் கைக்காட்ட, அவர்களின் உறவுப் பெண்கள் செல்வியை சற்று ஒதுக்கி வெளியேற்றினார்கள்.

இது மாலினிக்கு வசதியாய் போனது.

மூக்கை சேலைத் தலைப்பில் சிந்தி முடிந்து கொண்டவளைப் பின் தொடர்ந்து, அவளது தோள் தொட்டாள் -

''செல்விதானே?''



''அ... ஆமா.. ஆமாங்க'' திரும்பிப் பார்த்த அப்பெண் தன்னைத் தொட்ட உயர்மட்டப் பெண்ணைக் கண்டு பம்மினாள்.

# 7

தன்னிடம் வேலை பார்ப்பவர்களிடம் இயல்பாக பேசிப் பழகும் மாலினிக்கு காய்கறி விற்கும் இப்பெண்ணிடம் பேச்சுத் தருவதில் சிரமமில்லை.

''கீதா உன்னைப் பற்றி எங்கிட்ட பேசினதுண்டு செல்வி. நான் கீதாக்கு அக்கா முறை'' என்றவள் செல்வி தொடர்ந்த ஒப்பாரியை ஓரளவிற்கு கேட்டு விட்டு பேச்சை மாற்றினாள்.

''எங்கிட்டேயும் தன் வயிற்று வலி பற்றிப் பேசினா... ஆனால் அது அவ உயிரையேப் பறிக்கும்னு... ம்ப்ச்.''

''உங்களுக்கு இளையவங்கன்றீங்களே - ஆனா எங்க அம்மா தளர்ந்து போயிட்டாங்களே.''

''சமையல்காரப் பொண்ணு பேர் மல்லிகா இல்லை?''

''ஆமாங்கம்மா. என்னத்தப் போடற மல்லிகா? எவ் வயிறு காந்திக் குமட்டுதுன்னுவாங்க... ரொம்ப கஷ்டந் தான் பட்டாங்க போல.''

''மல்லிகா எங்க? வரச் சொல்லேன்.''

இப்போது செல்வியின் கண்கள் மிரண்டன -

''நீங்க ஏதும் ஆபீஸருங்களா?''

''அதெல்லாம் இல்லை. உறவுக்காரி - வேண்டியப் பொண்ணு... உங்களைப் பற்றியெல்லாம் பேசியிருக்கா

எங்கிட்ட. அதான் பார்க்கலாம்னு...'' செல்வியைத் தொடர்ந்து போய் மல்லியின் முன் நிற்க, சமையல்காரப் பெண் மிரண்டு ஒதுங்கினாள் - செல்வி இவர்களது உறவு முறையை எடுத்துச் சொல்ல பிறகு ஓரளவு இயல்பானவள், செல்வி சொன்ன அதையே சொன்னாள்.

''சரி சாப்பிட்டதும் அவஸ்தைபட்டாங்கன்னா... டாக்டரைப் பார்த்தாங்களா?'' மாலினி விசாரித்தாள்.

''தினசரி வயிறு கோளாறு பண்ணலியேம்மா. அப்பப்ப தான அம்மாவைப் படுத்துச்சு?''

''டாக்டர்?''

''ஆமாங்க... வருவாரு. ஆனா அவரு தந்த மருந்து ஏதும் கேக்கலியே.''

''வேற வைத்தியம் - சென்னை போய் பார்க்கலியா?''

''பெஷலிஸ்ட்டுனு ஒரு வயசான டாக்டர் வந்தாருங்கம்மா - ஐயாவுக்குத் தெரிஞ்சவராம். அவரு அம்மா பிரச்சனை எல்லாம் கேட்டுட்டு

'என்னம்மா வாந்தி, பேதின்னு காலரா காலத்துல உள்ள விளைவுகளை சொல்றியே? பத்தியமாச் சாப்பிடு'ன்ன, அம்மா சிரிச்சாங்க -

'நூறு பத்தியம் இருந்தாலும் சாவிலிருந்து பத்திரம் ஆயிட முடியுமா'னுட்டு!''

''எனக்கு ஒரு வயசு இளையவ... இப்படி 'சட்'டுனு போனதைத் தாங்க முடியல. பிரியாவுக்கு ஒரு கல்யாணம் பண்ணி, கண்ணாரப் பார்த்துட்டேனும் போயிருக்கலாம்.''

மாலினி சொல்ல, 'இத்தனை விவரம் தெரிந்திருக்கிறதே' என்றான இரு பெண்களும் மேலும் இவளுடன் ஒன்றினர்.



பிரதாப், செகரட்டரி என்று எல்லாரையும் சகஜமாய் தன் பேச்சில் தொட்ட மாலினிக்கு மல்லிகா எதையோ மறைப்பதாய் ஒரு சந்தேகம்.

யாருடைய தூண்டுதலினாலோ இவள்தான் கீதாவின் உணவில் விஷம் கலந்திருப்பாளோ?

ஆனால் அச்சமையல்கார பெண்ணின் தோற்றம் வளப்பமாய் இல்லை. காதில் கிடந்தது கவரிங் தோடுதான். கையில் ரப்பர் வளையல்கள். கையில் காசு புழங்கும் ஒருத்தி - அதிலும் படிப்பறிவு இல்லாத ஒரு பெண்ணிற்கு, நிச்சயம் காது மூக்கில் தங்கம் வாங்கிப் போட்டுக் கொள்ளத் தோன்றும். நைந்த ரவிக்கையும் நிறமற்றுப் போன புடவையுமாய் நிற்க மனம் வராது.

''ஒரு வாய் காபி குடிக்கறீங்களா?''

''இல்ல...'' மறுப்புடன் மறுபடி கூடத்திற்கு வந்தவளுக்கு சில ஆண்கள் பதட்டமாய் போனில் தகவல் தருவதும் ஒருவருக்கொருவர் உன்னிப்பாய் பேசுவதும் புரிந்தது. ஆக விஷயம் மற்றவர்களுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது.

மகிபன் மாலினியைக் கொண்டு போய் ஒரு நடுத்தர வயதுக்காரர் முன்னே நிறுத்தி அறிமுகப்படுத்தினார்.

''இவர்தான் உள்ளூர் டாக்டர் - பேர்... முத்தழகன்.''

கைகூப்பி வணங்கியவளை அந்த டாக்டர் கேள்விகளால் குடைந்தார்.

''நேற்று கீதா மேடமை பார்த்ததாய் சொல்றீங்க? வயிற்று வலி தினம் வாலியே... நீங்க டாக்டரா? இங்கே யாரு அவங்களுக்கு விஷம் வைக்க? அப்படி ஏதும் என்னிடம் அவங்க சொன்னதில்லையே?'' என்று விதவிதமான கேள்விகள்.

''சரி கீதாவுக்கு என்னதான் பிரச்சனை?''

''கேஸ்ட் ரைட்டிஸ்.''

பலருக்கு உள்ள அந்த சாதாரண வயிற்று வலி, உங்க மருந்துக்குக் கட்டுப்பட்டிருக்கணுமே டாக்டர், முத்தழகன்?''

''அது கான்ஸராய் இருந்திருக்கக் கூடும். நாங்க யாரும் உடைச்சுப் பேசலை. ஸ்கேன், பையாப்ஸினு நான் பேச்சு எடுத்தாலே மேடம் உடைஞ்சு மறுத்திடு வாங்க. ஸாரும் அவங்களை வற்புறுத்தினதில்ல. மற்ற சோதனைக்கு... சிகிச்சைக்கு... உட்படாமல் பிரச்சனை எதுவென்று தெரியலை.''

''ஆனா அப்படி விட்டுற வயசுமில்லையே கீதாக்கு? அவளுக்குமே ஒரு நெருடல் - அது என்னன்னு நாம் பார்த்துடறதுதான் நல்லது. நாளைக்கு ஊரார் இதையே விதவிதமாய் திரித்துப் பேசினால் அது நமக்குத் தான் அசிங்கம்.''

''ஆனா இது லேசான ப்ரொஸீஜர் இல்ல.''

''பரவாயில்ல. எல்லாம் முறைப்படி செய்துடலாம்.''

மிக விரைவிலேயே வந்த காவல்துறை, கீதாவின் உடலை எடுத்துப்போக, அதுவரை மரண வாசனை சூழ்ந்திருந்த அவ்வீட்டை மேலும் பயங்கரமும் குழப்பமும் சேர்ந்து நின்று தாக்கின.

## 8

கூத்தாடி, வேஷத்தைக் கலைத்து விட்டு தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பது போல,



பண்ணை வீடும் மரண சூழலிலிருந்து விடுபட்டு இயல்பாகி இருந்தது.

அது மாலினிக்கு ஆசுவாசமாய் இருந்தாலும், கீதாவின் வளர்ப்பு மகள் ப்ரியாவிடம் போய் பேச தயக்கந்தான். போன வாரத்து குளறுபடியின் போது, அவளது கண்கள் தன்னை குரோதமாய் துளைத்ததை மாலினி உணராமல் இல்லை.

விஸ்வநாதனிடம் தான் வருவதாயும் அவரோடு, பிரியாவிடமும் பேச வேண்டும் என்றும் சொன்ன பிறகே வந்திருந்தாலும் சங்கடமான உணர்வும் உடன் வந்திருந்தது.

சில நாள் விடுப்பிற்குப் பிறகு வேலைக்குப் போக ஆரம்பித்திருந்த பிரியா மாலை வீடு திரும்பி குளித்து, ஸல்வாரில் இருந்தாள். அதன் செஞ்சாந்து நிறம் அவளுக்கு நன்கு பொருந்தியிருந்தது. ஆனால் முகத்தின் கோப சிவப்பு அத்தனை அம்சமாயில்லை.

மாலினியின் புன்னகையைப் புறக்கணித்தவள் எடுத்ததுமே கோபமாய் எகிறினாள்.

''இப்ப திருப்திதானா? இங்க பெரிய குளறுபடி பண்ணிட்டீங்க. ஊர்ல இனி சித்தப்பா தலை நிமிர்ந்து போக முடியாது... இந்த வீட்டின் கௌரவமேப் போச்சு.''

''ஓ... எதனால பிரியா? உங்க சித்தி விஷமேற்றிக் கொல்லப்பட்டதாலா இல்லை பிரேத பரிசோதனை மூலம் அது உலகிற்குத் தெரிய வந்ததாலா?

இளையவள் வாயடைத்து நின்றாள்.

''சிந்திக்கும் சுதந்திரத்தை யாரும் பயன்படுத்துவதில்லை -

எல்லாருக்கும் பேச்சு சுதந்திரத்தின் மீதுதான் ஆசை'ன்னு கேள்விப்பட்டிருக்கியா? நூலகத்தில் வேலை செய்யும் நீ நிறைய வாசிக்கணும். அதைவிட முக்கியம் பேசும் முன் சிந்திக்கணும்! 'ஐயோ, நம்ப சித்தியின் உயிரை எடுத்தது யார் - எதற்காய்? - அந்தக் கொலைக்கான தண்டனை அவனுக்கு அல்லது அவளுக்குக் கிடைக்கணும்'ன்றது இல்லாமல் -

'நம்மை, நம்ப வீட்டுக் கதையை ஊரார் மெல்லாமல் இருந்தால் போதும்'ன்ற உன் மனப்பாங்கு தப்பு - அநியாயமும் கூட.''

சற்று முன் கோபத்தில் சிவந்திருந்த பிரியாவின் முகம்,

சற்று வெளிறித் தாழ்ந்தது.

''உனக்கும் கீதாக்கும் சில விஷயங்களில் உரசல் இருந்திருக்குது இல்லையா?''

''இதுவரை போலீஸ் - விசாரணை... இப்ப நீங்களா?'' சலித்தாள் இளையவள்.

''அது கடமை. இது கீதாவின் குடும்பம் மேல எங்களுக்குள்ள கரிசனை. எது முந்திக்குதோ, அதன் மூலம் உண்மை வெளியானால் சரி.''

''எனக்கும் எல்லாம் குழப்பந்தான்... நான் எதுவும்... அதாவது சித்திக்கு விஷமிடலை.''

''ஆர்ஸினிக்கை ஒத்த விஷம் கொஞ்சம் கொஞ்சமாய் கீதாவின் உடம்பில், உணவு மூலம், சேர்ந்திருக்குது... கடைசி தினம் அதிகமாய் தரப்பட்ட விஷம் அவளைக்



கொன்னிருச்சு... 'நான் எதும் செய்யலை'ங்கறதோடு உன் வேலை முடிஞ்சிடாது பிரியா. யோசி... வேறு யார் அதைச் செய்திருக்கக் கூடும்?''

பிரியாவின் உடம்பு நடுங்கியது.

''இத்தனைக்குத் துணிஞ்ச ஒரு கொலையாளி இந்த வீட்டில் இருக்கக் கூடும் அல்லது வந்து போகக் கூடும்ன்றது ஒரு பயங்கரமான உண்மையில்லையா?''

''இங்க... இங்கேயா?''

''பின்னே வெளியாள் வந்து செய்த வேலையில்லையே இது. மல்லிகாவிடம் பேசிட்டுதான் வந்தேன். கீதாவின் கடைசி வேளை சாப்பாட்டின்போது நடந்ததைச் சொன்னாள் - அது கொஞ்சம் விநோதமாய் பட்டது...''

பேச்சை நிறுத்திய மாலினி இளையவளை ஆழம் பார்த்தாள் - மறுபக்கம் மௌனந்தான்.

''சாப்பிட்டதும் அத்தானுக்கு வாசனைப் பாக்கு மெல்லும் பழக்கம் உண்டு போல...''

''ஓ... அதுவா? பாக்கு டப்பா காலியாயிருந்ததால் முன் தினமே அதில் புது பாக்கெட் ஒன்றை உடைத்து நிரப்பி வைக்கச் சொல்லியிருந்தாங்க சித்தப்பா - ஆனா மல்லிகா மறந்திட்டதால் மாடி ஸ்டோரில் இருந்த பாக்கு பொட்டலத்தை எடுத்துட்டு வரச் சொன்னாங்க... அதிலென்ன விநோதம்...?''

சற்று ஏகத்தாளமாகவே வந்தது கேள்வி.

''சாப்பிட்ட பிறகு எடுத்து வரச் சொல்லியிருக்கலாம்...''

''ஆக சமையல்காரியை வெளியேற்றிவிட்டு சித்தப்பா, சித்திக்கான உணவில் விஷத்தை சேர்த்திட்டதாய்... நினைக்கறீங்க?''

''இல்லை... அந்நேரம் சொர்ணா, பிரதாப், நீ எல்லாரும் அங்கேதான் இருந்தீங்க... ஆக யாரேனும் ஒருத்தர் அதைச் செய்யும் வாய்ப்பு இருந்ததுங்கறேன்.''

''பிரதாப் அன்று எங்களோடு சாப்பிடலை'' - இறுக்கமாய் சொன்னாள் பிரியா.

''இருக்கலாம்... ஆனால் மல்லிகா மாடிக்குப் போய் திரும்ப பத்து நிமிஷம் ஆயிருக்கும்... அந்நேரம் பிரதாப் உங்களோடுதான் இருந்தான். சொர்ணா கிச்சனுக்குள் போறதில்லை போல...''

''சித்தப்பாக்கு காட்டிக்கத் தெரியாதுன்னாலும் அவருக்கு சித்தி மேல் ரொம்பப் பாசம்.''

''ஆனா உனக்கு கீதா மேல் பிரமாதமான ஒட்டுதல் எதுமில்லை. உரசல் கூட உண்டோ?''

''ஆக உங்க சந்தேகம் என் மேலேயா? திடும்னு இவங்க தான் உனக்கு பெத்தவங்க போலன்னு சொல்லி இங்கே வர நேர்ந்ததில், எனக்கு... கசப்புதான்.''

''முன்னமே அது பற்றி பேசி, உன்னை லைப்ரரியன் கோர்ஸ் படிக்கச் சொன்னது அத்தான்தானே? அதாவது உன் சித்தப்பா?''

''பேச்சளவில் இருந்தது இப்படி நடைமுறைக்கு வரும்னு நான் நினைக்கலை.''

''ஆனால் இங்கேயிருக்கும் சொத்து வேறோர் கைக்குப் போயிடக் கூடாதுன்னு உன் அப்பா அம்மா சொல்லியிருப் பாங்க...? தவிர இங்கே உனக்கு வேலையோடு, பிரதாப் பின் சிநேகமும் கிடைக்க, லைஃப் சுவாரஸ்யமாத்தானே போயிருக்கணும்?''

''ம்ப்ச்... இப்ப ரொம்ப கொடுமையாயிருக்குது. தினம் போலீஸ் வந்து எங்க வீட்டின் அறைகளை சோதனை



இடறது. ஒவ்வொருவரையும் கேள்விகளால் குடைவறதும் தாங்கலை. கேஸ் முடியும் வரை யாரும் வெளியேறவும் முடியாது.''

''நியாயந்தானே பிரியா? வீட்டுக்குள்ளே பாம்பு புகுந்திருச்சுன்னா - அதைத் தேடி அடிக்கறவரை வீட்டாருக்கு நிம்மதியில்லையே? எதும் நடக்காதது போல அவங்கவங்க வேலையைப் பார்க்க முடியுமா?''

அதுவரை சற்று அலட்சியம் காட்டிய பிரியாவின் முகம் சிறிது அச்சத்திற்கு மாறியது.

''கீதாவுடன் உனக்கு எதில் ஒத்துப் போகலை, பிரியா? அவ பாசத்திற்கு ஏங்கினவ...''

''அவங்களைப் போலவே நானும் இருக்கணும்னு சித்தி நினைச்சாங்க. நான் வேலைக்குப் போறது அவங்களுக்குப் பிடிக்கலை. நான் வீட்டோடு இருந்து சமைச்சு, இந்த நிலத்தைப் பார்த்துட்டு, இந்த விளையற காய்களைப் பிரிச்சு கூடையோட வரும் பெண்களுக்கு அதிகாலமே தந்து விடணும்னு ஒரு எதிர்பார்ப்பு. இந்த பண்ணை வீட்டின் பாதி அறைகளை புளியும் தானிய மும் வத்தலும் அடைச்சிருக்கும். நான்... ஒருவேளை பிரதாப்பைக் கல்யாணம் செய்திருந்தால் தனியே ஒரு நறுவிசான வீட்டில் குடித்தனம் நடத்தத்தான் ஆசை பட்டிருப்பேன். ஒரு தரம் இப்படி ஏதோ சொல்ல, சித்தி ஆத்திரமாயிட்டாங்க. நான் ரொம்ப தன்மையாய் பேசிட்டு... தாய் அவங்க அலட்டினது எனக்கு எரிச்சலாயிருந்தது.''

அந்த இளம் பெண் மனது விட்டுப் பேச, மாலினிக்கு இவள் பக்கமும் நியாயம் இருந்ததாய்த்தான் பட்டது!

''கல்யாணம் பற்றி பிரதாப் என்ன சொன்னார்?''

''கடை எழும்பி, வியாபாரம் இப்பதான் மும்முரப்பட்டிருக்குது. மறுபாதியையும் கட்டணும். அந்த வேலை இப்ப நடந்திட்டிருக்குது... ஆக சீரியஸாய் பேச முடியலை.''

''லோன் எடுத்துதான் கட்டிட வேலை நடக்குது இல்லையா? பல லட்சங்கள் ஆகியிருக்குமே... எந்த பேங்க் இவருக்குக் கடன் தந்திருக்குது?''

''நான் அது பற்றியெல்லாம் பிரதாப்ட்ட கேட்டதில்லை.''

''வாழ்க்கைத் துணையாகப் போகிறவரிடம் தானே?''

''அவரிடம் என் சம்பளம் எவ்வளவு என்றும் நான் சொன்னதில்லை. பிறர் விஷயத்தில் மூக்கை நுழைப்பது நாகரிகமில்லை.''

இப்போதைய தலைமுறை பற்றி முழுக்க புரிந்து கொள்ள முடியாத மாலினி ஒரு பெருமூச்சுடன் பிரியாவைத் தங்கள் மகளாய் விஸ்வநாதன் இப்பண்ணைக்குக் கூட்டி வந்தது ஒரு கன்றுகுட்டியின் கழுத்தில் நுகத்தடியை சுமத்தி உழ வைத்தது போல - என்று எண்ணினாள்.

தன் மனைவியிடம் கலந்து பேசாத அவர், இந்தப் பெண்ணின் கருத்தையும் கேட்டறியவில்லை.

பிச்சையைக் கூட பாத்திரமறிந்தல்லவா இடச் சொல்லியிருக்கிறார்கள். தன்னை பிறர் விஷயத்தில் தலையிடுவதாய் ஜாடை பேசும் பிரியாவின் அறையிலிருந்து வெளியேறினாள்.

கொலைக் குற்றம் செய்துவிட்டு, எந்நேரம் தன் குட்டு வெளியாகுமோ என்ற தவிப்பில் இருக்கும் ஒரு பெண் இத்தனை துடுக்காய் பேசக் கூடுமா?

கேள்விகள் மாலினியின் குழப்பத்தை மேலும் கூட்டின!

## 9

வெயிலைத் தின்று மழையைக் குடித்து உரமேறிய உடம்புடன் நின்ற விஸ்வநாதனின் முகம் அதற்கான கம்பீரத்துடன் இல்லை.



நடுத்தர வயதுடைய அவரது தோற்றம் கடந்த ஒரு வாரத்தில் மூப்படைந்திருந்தது.

அவரிடம் இதமாகவே பேச்சைத் தொடங்கினாள் மாலினி.

''ஸாரி அத்தான். முதலில் கீதா என்னிடம் தன் சந்தேகங்களைப் பற்றி சொன்னதும், நான் முழுக்க நம்பிடலை. மறுநாளே அவ இறந்த செய்தி வரவும்தான்...''

விஸ்வநாதன் தலையாட்டிக் கொண்டார்.

''நிலாவைப் பார்த்து மாலுமி கப்பலோட்டக் கூடாதும் பாங்க. அதாவது வட்ட நிலா கப்பலை வட்டமிட வைக்குமே தவிர கரை சேர்க்காது. உங்க வீட்டுக்கார டாக்டர். மகிபன் கீதா இறந்த வீட்டில் வந்து என்கிட்ட இது பற்றி பேசியதும் 'இது ஏதோ வதந்தி அதை நம்பி கீதா ஏதோ உளறியிருக்கா'ன்னுதான் நான் நினைச்சேன். ஒரு டாக்டர் சொல்லலைன்னா யாரும் அதைப் பெருசா எடுத்திருக்க மாட்டோம். வதந்தின்னு வட்டமிட்டுக் கிடந்திருப்போம்... ஆனா அவ உடம்பைக் கூறு போட விட்டது... கஷ்டமாத்தான் இருந்துச்.''

கம்மியக் குரலைக் கனைத்து சீர்படுத்திக் கொண்டார்.

''அவ போயிட்ட அதிர்ச்சியில் எம்மூளை வேலை செய்யலை. நா அடிப்படையில விவசாயிம்மா. எப்ப பயிரிடணும், களை எடுக்கணும், அறுவடை செய்து பார்ட்ட விற்கணும்ற அளவிலதான் எங்களுக்கு காரியமெல்லாம் முடியுச. உட்காரவுந்தான் பிரேத பரிசோதனையில கீதாவுக்கு உண்மையிலே யாரேனும் விஷந் தந்திருந்தா, முதல் சந்தேகம் எம்மேலத்தான் விழுங்கறது எனக்கு உறைச்சது!''

பார்வைக்கு விஸ்வநாதன் முரடாய் தோன்றினாலும், அவரது பார்வையில் ஒளிவு மறைவு இருந்ததாய் படவில்லை.

''உங்க ரெண்டு பேருக்கிடையே ஏதும் பிரச்சனை...?'' தன் உள்ளங்கையை சற்று நேரம் பார்த்தவர்,

''நா அதிகம் பேசறவனில்ல... அதுதான் எம்பிரச்சனை. அவளுக்கு பிள்ளை இல்லையேன்ற குமைச்சல். நான் ஒடி சாடி உழைச்சதுல இந்த பண்ணைப் பெருகிச்சு... இத்தனைக்கும் ஒரு வாரிசு இல்லையேங்கற தவிப்பு கீதாக்கு... அதை அவ அடிக்கடி எங்கிட்ட சொல்லி புலம்பவுந்தான் நா பிரியாவைத் தத்து எடுக்கலாம்னு முடிவு பண்ணினேன்.''

''கீதாவுக்கு அதில் சம்மதந்தானா அத்தான்?''

அவரைக் குற்றம் சாட்டாமல் இதமாய் கேட்டாள் மாலினி.

''கலந்தெல்லாம் பேசலை. ஆனா அவளுக்காய் எடுத்த முடிவுதான் அது! நம்ப சொத்து நம்ப வம்சத்து கையில இருக்கணும்றது எங்கணக்கு. வீட்டில ஒரு பொம்பளைப் பிள்ள இருந்தால் கீதாவோட பேசக் கொள்ள, கோயிலு கடைத்தெருவுனு சேர்ந்து போய் வரன்னு இருப்பாங்கனு எதிர்பார்த்தேன். ஆனா பிரியா பொண்ணு அதுபோல தன் சித்திட்ட ஒட்டிக்கலை - பாசங் காட்டிக்கலை. அது நா தெரியாமல் செய்த தப்பு... முன்னே பண்ணையைப் பெருக்கறதில் மும்முரமாய் இருந்த நான் தத்து எடுப்பது பற்றி யோசிக்கலை... தலை நரைக்க ஆரம்பிச்ச நேரம் சிறு குழந்தையை எடுத்து வளர்க்கறது... சங்கோஜமாயிருந்தது... நானும் இவளுமாய் உட்கார்ந்து எதையும் பேசிக்காததால... அவளுக்கு ஒரு ஒதுக்கம்... எம்மேல கொஞ்சம் கசப்பு திரண்டிருச்சு போல... மூணு வருஷத்துல உர விலை நாலு மடங்கு கூடியிருச்சு. உர விலையை அதைத் தயாரிக்கும் கம்பெனிகளே நிர்ணயிக்க அரசாங்கம் விட்டுட்டதால, விலை தாறுமாறாய் கூடின நேரம், நான் சகாய விலைக்கு செய்து விற்றேன்.''



''அதில் கலக்கும் ரசாயனந்தான் கீதாவின் உணவில் சேர்க்கப்பட்டிருக்குது... கொஞ்சம் கொஞ்சமாய் அவள் உடலில் சேர்ந்த விஷம் கடைசியாய் அதிக அளவில் கலந்து அவளைச் சாகடிச்சிருச்சுன்னு பிரேத பரிசோதனையின் ரிப்போர்ட் சொல்லுது...''

''நான் கலக்கும் முறை, அளவை எல்லாம் யாருக்கும் கற்றுத் தரலை... சாமான்களை... அதாவது ரசாயனப் பொருளை - எல்லாம் பத்திரமாய் பூட்டித்தான் வச்சிருந்தேன்.''

''ஆனா உங்களோடு அந்த அறைக்குள் கம்மா பார்ப்பது போல நுழைந்த யாரும் 'விஷம்'னு தெரிஞ்சதும், அதில் கொஞ்சம் எடுத்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பிருக்குமில்லையா?''

சிறு பெருமூச்சுடன் தன் தலையைச் சற்று தூக்கி யோசனையில் ஆழ்ந்தவர், மீண்டும் மாலினியை நோக்கிய போது அவர் விழிகளில் மேலும் சஞ்சலம்!

''எல்லோரும் உரங்கலக்கற சாமான்கள் அறைக்கு வந்திருக்காங்கதான். அப்பப்ப அதை சுத்தப்படுத்துவதற்காய் மல்லிகா, செல்வி கூட வந்ததுண்டு.''

''ம்ம்... இப்ப அருமையாய் பேசற நீங்க, இது போல உட்கார்ந்து கீதாவிடம் பேசியிருந்தால், நிறைய குளறுபடிகளைத் தவிர்த்திருக்கலாமே அத்தான்? உங்க எழுத்திற்காய் சொர்ணத்தை நீங்க இங்கேக் கூட்டிட்டு வந்ததிலேயும் கீதாவிற்கு எரிச்சல்... திகைச்சுப் போயிருக்கக் கூடும் அவள்.''

விஸ்வநாதனின் கண்களில் சிறு அசட்டுத்தனம் சேர்ந்து கொண்டது -

''தப்புதான். கீதா தனிமையில் தவிக்கறது எனக்குப் புரிஞ்சுது. மகளாய் வந்த பிரியா, கீதாக்குச்

செட்டாகலைன்னதும், நான் வேறொரு பொண்ணு இங்க வந்தா சரிவருமோன்னு செய்த விஷயம் அது. நான் என்ன முயற்சி பண்ணினாலும் கீதா வழிக்கு வரமாட்டேங்கறாளேன்னு ஒரு கோபங் கூட எனக்கு.''

ஒரு வாரத்திற்கு முன்பே இழந்த தன் இணையின் ஞாபகம் அவர் தொண்டையை இறுக்கியது போலும். அடிக்கடி செருமிக் கொண்டார்.

ஆக கோபம் அந்த வீட்டிற்குள் பகடையைப் போல ஒருவர் மாற்றி ஒருவரால் உருட்டப் பட்டிருக்கிறது.

எல்லாரது வீட்டிலும் கோபம் எழும்பும்தான். ஒரு புகை போல அது சுற்றியலைந்து விட்டு கலைந்து விட்டால் கவலையில்லை. குளத்தின் அடியில் கல்லாய் தங்கி, ஊறி கிடக்கத்தான் கூடாது.

''இங்குள்ள கல்லூரியின் பிரின்ஸிபல் எனக்குத் தெரிஞ்சவர்...''

''அவர் மூலம்தான் பிரியாவிற்கு அதன் நூலகத்தில் வேலை பார்த்து விட்டிருக்கீங்க?''

''ஆமம்மா. எனக்குத் தெரிஞ்ச சில விவசாய முறைமைகளை, உரங்கலக்கறது பற்றிய சூட்சுமங்களை, என் அனுபவங்களை ஒரு புஸ்தகமாப் போடறது பற்றி அவர்தான் ஆசை காட்டினார். இதையெல்லாம் சொல்லி வளர்க்கறதுக்கு எனக்குப் பிள்ளை இல்லையேன்னு நான் வருந்த, எல்லாத்தையும் புத்தகமாய் போட்டால் பலருக்கு வழிகாட்டும்னார். எனக்கு எழுதவெல்லாம் வராதுன்ன, அதற்கு உதவியாளை ஏற்பாடு செய்றதாவும் சொன்னார்.''

''ஒரு ஆண் உதவியாளரை ஏன் தேர்ந்தெடுக்கலை? அது உங்களுக்கும் வசதியாய் இருந்திருக்குமே'' - தலையசைத்துக் கொண்டார் விஸ்வநாதன்.

''இருந்திருக்குந்தான். ஆனா ஒரு ஆம்பிள்ளை இங்க ரெண்டு மூணு மாசம் தங்கி என்ன செய்வான்? கல்லூரியின் விடுதியில் உதவியாளர் வேலைக்கு மனு போட்டிருந்த சொர்ணா, தமிழ் எம்.ஏ. தான் ஒரு சிறு பத்திரிகையில் உதவி ஆசிரியராயும் இருந்ததாய் குறிப்பிட்டிருந்தாள். ஒரு பெண் பிள்ளை எங்கேயும் ஒன்றி இருந்துக்குவா. முக்கியமாய் கீதாக்கு ஒரு பேச்சுத் துணையாகும்ன்றது என் கணிப்பு.''



அவரது கணிப்பு முற்றிலும் தவறில்லை என்பதும் சரிதான் என்று மாலினிக்குப் பட்டது. வேலையாட்களிடம் பேசித் தெரிந்து கொண்டதில், ஏதோ எழுதுவது வாசிப்பது போக, அந்த சொர்ணா எதையேனும் இழுத்துப் போட்டுதான் செய்திருக்கிறாள். பழைய கணக்கு புத்தகங்களை கணினிக்கு மாற்றி இருக்கிறாள். தோட்டத்து பூக்கள், பூஜையறைக்கான மாலைகளாய் அவள் கைகளில் மாறியிருக்கின்றன. தோட்ட வேலை செய்பவர்களின் பிள்ளைகளுக்கு பாடம் எடுப்பது, பெண்களுக்கு கை வேலை என்றிருப்பவள் சனி, ஞாயிறு இங்கு திரும்பதில்லை - ஆனால் கீதாவிடம் நெருங்கிப் பழகவில்லை அவளும்.

அதையே விஸ்வநாதனும் குறிப்பிட்டார்.

''வீடு கலகலப்பாய் இருக்கட்டுமேன்னு நான் செய்த ஏற்பாடு எதுவும் கீதாவிற்கு ஏற்கலை மனசிலிருக்கறதை நான் மட்டுமில்ல, அவளுமே பேசித் தீர்த்துக்கலை....''

''ம்ம்... அப்படி செய்திருந்தால் இப்படி ஒரு நிலமையும் வந்திருக்காது...''

''ஆனா எம் பொண்டாட்டிய நா கொன்னதா... பிறர் என்ன அவளே அஞ்சினததான் என்னை ரொம்ப வாதிக்குதும்மா மாலினி. இவ போனதும் இனி எனக்குன்னு யாரிருக்கா? அவளை அழிச்சிட்டு இனி நா என், எங்க வாழ்றது? சூன்யமாயிட்ட வீட்டுல நடமாடவே எனக்குக் கூசுதே.''

கண்ணீரை விழுங்கிவிட்டு இறுகி நின்றவரைக் கவலையாய் பார்த்திருந்தாள்.

தம்பதிகளில் பலருக்கு உள்ளூறும் பிரியத்தை வெளிக்காட்ட தெரியாது - இவர் அந்த ரகம்...

ஆனால் இவர் தனக்கு விஷமிட்டதாய் ஏன் கீதா நினைத்தாள்..?

அவளை அப்படி யார் நம்ப வைத்தது?

அது யாரென்று தெரிந்தால்... கொலையாளியைப் பிடித்தது போலத்தான்!

''பிரதாப் இங்கே வர்றதும், பிரியாவோடு பழகுவதும் - அதில் உங்களுக்கு ஆட்சேபணையில்லையா அத்தான்?''

''நாம என்னத்தைத் தடை பண்றது? விவரமறிஞ்ச வயசு -

அவங்கவங்க முடிவுக்கு விட்டுட வேண்டியதுதான்.''

எதையும் ஆராயும், எதிர்க்கும் மனநிலையில் அவரில்லைதான். ஆனாலும் கேட்டாள்.

''பிரதாப்பைப் பற்றி விசாரித்ததுண்டா?''

''நம்ப இனமில்லை போல... அந்தப் பையன்.''

''நான் கேட்டது குணத்தைப் பற்றி... எப்படிப்பட்ட குடும்பத்துப் பிள்ளை என்று தெரிஞ்சுகிட்டீங்களா?''

''அந்தப் பிள்ளைதான் கீதாட்ட பாசமாய் பழகினான். தன் கடையிலேருந்து எதையேனும் அவளுக்குக் கொண்டு வந்துத் தர்றது - வந்ததும் முதல்ல அவளைத் தேடிப் போய் ரெண்டு வார்த்தை பேசன்னு இருப்பான். மரியாதையான பேச்சு - அதுக்கு மேல என்னத்த விசாரிக்கிறது?''

''உங்களுக்கும் உதவுவானா அத்தான்?''



''உண்டு. வெளியூர் போக டிக்கெட் எடுத்துத் தர்றது. காரில் போகணும்னால் பெட்ரோல் நிரப்பி வைக்கறதுன்னு உபகாரமான பையன்.''

''நீங்க ஊரில் இல்லாதப்ப, இவங்களுக்கும் ஒரு ஆண் துணையாச்சு - இல்லையா?''

''அதுல ரொம்பக் கவனமானவன். நான் இல்லாதப்ப வந்து போறதில்லை போல... அது ஒரு சின்ன ஊர்ல விகல்பமான பேச்சுக்கு இடந்தந்திடும்னு புரிஞ்சு கண்ணியமாய் ஒதுங்கிடுவான்.''

''ஓ! - வரிசையாய் பிரதாப் பற்றி வந்த பாராட்டுக்களை கேட்டுக் கொண்டாள் மாலினி.

## 10

போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் காக்கி தொப்பியைக் கழட்டி வைத்துவிட்டு உட்கார்ந்தார். பண்ணை வீட்டில் மாலினி, டாக்டர் மகிபனோடு விஸ்வநாதனும் இருந்தார்கள்.

''மாலினி மேடம், உங்க யூகம், தகவல்கள் எல்லாம் இந்த கேஸை முடிக்க, ரொம்ப உதவியாயிருந்தது - நன்றி.''

காவல் துறையின் நன்றியை ஒரு சிறு முறுவலோடு ஏற்கவும் கூடாத நிலையிலிருந்தாள் மாலினி.

இவளது பாட்டி அடிக்கடி சொல்லும் பழமொழி.

''மண் குதிரைய நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது'' என்பது.

நம்பி மோசம் போனது பெரிய விஷயமோ, விசேஷ நாளில் வேலைக்காரி மட்டம், போட்டதோ - பாட்டியின் வாயில் இந்தப் பழமொழிதான் உருளும்!

சிறு வயதாயிருந்த போது மாலினி கேட்டதுண்டு - 'மண் குதிரை பாதி சவாரியிலே ஆற்றில் கரைஞ் சிடும் - அப்படித்தானே பாட்டி?'

'அப்படியில்ல மாலு - அது மண் குதிர்! வெள்ளம் புரளும் ஆற்றில் ஆங்காங்கே மண் குதிர்கள் தெரியும். அதில் நின்னுடலாம்னு நம்பி அதில் காலை வச்சோம் - போச்சு! புதைஞ்சு மூழ்கிடுவோம். உலகத்துல நம்பிக் கைக்கு உரியவங்க வெகு சொற்பம்... பெரும்பாலும் மண் குதிருங்கதான்!'

வயதான பாட்டியின் எதிர்மறை எண்ணம் என்று அதை அன்று சிரித்து ஒதுக்கிய மாலினிக்கு இன்று பண்ணை வீட்டில் நடந்தது அதுதான் என்று பட்டது!

மனைவியை இழந்த கடந்த மூன்று வாரங்களில் விஸ்வநாதன் இளைத்துக் களைத்திருந்தார். கடந்த சில நாட்களில் தான் பந்தாடப்பட்ட வேகத்தை அவரால் தாங்க முடியவில்லை. மனைவியின் சாவிற்குத் தான்தான் காரணம் என்ற சந்தேகப் பேச்சில், வறுத்தெடுத்த போலீஸ் விசாரணையில் மனிதர் வதங்கி விட்டார். இப்போது கொடும் நாடகம் ஒரு முடிவிற்கு வந்து விட்டாலும், கடும் காய்ச்சல் கண்டு சோர்ந்த உடம்பு போலொரு தளர்வு.

அந்தப் பின் மதிய வேளைக்கு இதமாய், மாலினி சொல்லியிருந்தபடியே எலுமிச்சைச் சாறு அனைவருக்கும் ஜில்லெனப் பரிமாறப்பட்டது. கொறிக்க, வறுத்த வேர்க் கடலை.

காலியான குவளைகளில் மேலும் பழச்சாறை நிரப்பியவளை இன்ஸ்பெக்டர் மறுபடி பாராட்டினார்.



''குற்றம்... அதுவும் கொலைக் குற்றம் நடந்திருக்குன்னதும் பலர் அந்த ஸ்பாட்டில் இருக்கவே தயங்குவாங்க. மேடம் அடிக்கடி வந்து, இங்குள்ளவங்கட்ட பேசி, கொடுத்த துப்பு, சீக்கிரம் கேஸை முடிக்க எங்களுக்கு உதவுச்சு... இல்லைன்னா இழுத்திருக்கும்.''

''ஓரளவு யூகிக்க முடிந்தாலும், சொர்ணம் பற்றி காவல் துறை விசாரித்து தந்த தகவல்... அப்படியொரு திருப்பத்தை நானும் எதிர்பார்க்கலை'' - உதடு பிதுக்கினாள் மாலினி.

''எங்க அனுபவத்தில் பலதும் பார்த்தாச்சு மேடம். இங்கே சொர்ணம் தந்திருந்தது போலி அட்ரஸ்னு தெரிஞ்சதுமே இந்தத் திருப்பம் வரும்னு தெரிஞ்சிடுச்சு - நீங்க தந்த துப்புதான் ஆரம்பம்.''

மாலினிக்கு அது கிடைத்த விதம் எதேச்சையானது தான். இரு வாரங்களுக்கு முன்பு அவள் பண்ணை வீட்டிற்கு வந்தபோது, சொர்ணத்திடமும் பேச்சுத் தந்திருந்தாள்.

சொர்ணத்தின் அறைக்கே போய் கதவைத் தட்டிய போது, திறந்தவளின் முகத்தில் தேவையில்லாத மிரட்சி தெரிந்தது.

அவசரமாய் அறையைப் பார்வையிட்ட மாலினி இயல்பாய் உள்ளே நுழைந்து உட்கார்ந்தே கொண்டாள்.

''பெட்டி அடுக்கிட்டு இருக்கீங்க போல...? எங்கே கிளம்பறீங்க? விசாரணை முடிஞ்சு போலீஸ் சொல்லும் வரை இங்கிருந்து யாரும் வெளியே போக முடியாதே?''

''கீதா மேடம் இல்லாமல் நான் இங்கிருப்பது அவ்வளவு சரியாய் இருக்காதே... தயாராய் இருந்தால் அனுமதி கிடைச்சதும் புறப்படணும்.''

''விஸ்வநாதன் ஸார் என்ன சொன்னார்?''

''நிலைகுலைஞ்சு போயிட்டார். இந்நிலையில் அவரால் எழுதுவதற்கு ஏதும் யோசிக்கவும் முடியாது... அவரும் மறுத்து சொல்லலை.''

பெட்டிக்குள் அரைகுறையாய் திணிக்கப்பட்ட ஒரு துணிக்கடை பிளாஸ்டிக் பை கீழே விழ, சொர்ணா அதை அவசரமாய் எடுத்தாள்.

''அடடே... நல்ல கலர். கொடுங்க, பார்ப்போம்'' என்றபடி மாலினி நீட்டிய கைக்கு அந்தப் பை வரவில்லை!

''ல்ல... இது வேற ஒருத்தருக்கு வாங்கினது'' - தயங்கினாள் மற்றவள்.

''ருக்மணி நீலத்தில் முத்து வேலை டிஸைன் கண்ணைப் பறிக்குது. பார்த்துட்டு தர்றேன் - ஏறக்குறைய சொர்ணாவின் கையிலிருந்து பையை பிடுங்கி, துணியை பிரித்துப் பார்த்தவளுக்கு சற்று ஆச்சரியந்தான்.

''ஆக நான் இன்ஸ்பெக்டரிடம் -

'சொர்ணாவின் பெட்டியில் ஆறு வயசுப் பெண் குழந்தைக்கான கவுன் இருந்தது. அதைவிட அவங்க அதை மறைக்கப் பார்த்தது நெருடுது. அவங்க வீட்டிற்குப் போய் விசாரிச்சால் ஏதேனும் விவரம் கிடைக்கலாம்ன்னு சொன்னேன். விரைவிலேயே சொர்ணா தந்தது போலி விலாசம்னும், வேறு விலாசத்தில் அவளது தாயாரும் சொர்ணாவின் சின்ன மகளும் வசிப்பது தெரிஞ்சிடுச்சு.''

விஸ்வநாதன் நலிந்த குரலில் சலித்தார்.

''தனக்குக் கல்யாணமாகி ஒரு பெண் குழந்தை இருக்கும் உண்மையை சொர்ணா எங்கிட்ட எதுக்கு மறைக்கணும்? இந்தக் கள்ளத்தனத்தை கீதா எப்படியோ உணர்ந்திருக்கணும்.''

''உலகத்தில் இதெல்லாம் சகஜமாயிட்டதாலதான் வீட்டுக்குள் வேலைக்கான யாரையும் எத்தறதுக்கு



முன்னே எங்களிடம் ஒரு வார்த்தை விசாரிக்கச்சொல்றோம்... பொதுமக்கள் அதைக் காதிலேயே போட்டுக்கறதில்லை - அந்த சொர்ணாவை ஒருத்தன் பிள்ளையக் கொடுத்திட்டு, ஏமாத்தியாச்சு. அம்மாவின் வீட்டில் இருந்தபடி தன் பெண்ணை வளர்த்தவள், தன் மரியாதைக்காக, பாதுகாப்பிற்காகக் கூட இந்த விபரத்தை மறைச்சிருக்கக் கூடும். அல்லது...''

செருமிக் கொண்ட காவல்துறை அதிகாரி தொடர்ந்தார்.

''தப்பான திட்டத்தோடும் இங்க வந்திருக்கலாம். அப்படித்தான் எனில் கீதாம்மாவை கொலை செய்யவும் துணிந்தவளா அந்த சொர்ணாங்கற ரீதியில் நாங்க தடாலடியாய் விசாரித்த போதுதான் அடுத்த துப்பு கிடைச்சது.''

மர்மங்களின் முடிச்சில் சிக்கியிருந்த டாக்டர், மகிபன் 'அது என்ன' என்பது போல தன் மனைவியை ஏறிட்டார். அவ்வப்போது அவள் சில தகவல்களைத் தருவது உண்டென்றாலும் கோர்வையாய் விவரங்களைக் கேட்கும் போதுதான், விவரம் எல்லாம் தெளிவாய் புரிந்தது.

''ப்ரோக்கர் கதிரைப் பற்றி சொர்ணா குறிப்பிட்டிருக்காங்க.'' அவன் மேல் ஏற்கெனவே புகார் உண்டு. சரியான சாட்சியம் இல்லாததால் சிக்கலை பயல். 'அந்த ப்ரோக்கர் பிரதாப்பிற்குப் பழக்கம். அடிக்கடி பிரதாப்பின் ஸ்டோரில், வெளியே அவங்களைச் சேர்ந்து பார்த்ததாய் சொர்ணா சொன்னதும் எங்களுக்கு வாகாய் ஒரு பிடி கிடைச்சது.''

''கதிர் நிலத் தரகரா?''

''தில்லாலங்கடி தரகருங்க! நிலம்னால் பட்டா இல்லாத இடத்தைக் காட்டுவான். கேடியையும் க்ளாஸான ஆளுன்னு சொல்லி கல்யாண சந்தையில, விலை

பேசிடுவான். திருட்டு பொருட்களை விற்றுத் தர, கூடுதல் கமிஷன். அந்தக் கதிர் பயலை நாங்க தேட ஆரம்பிச்சப்பதான் மாலினி மேடம் அடுத்த துப்பு தந்தாங்க.''

அனைவரின் கண்களும் தன் மீது பதிய மாலினி விஸ்வநாதனைப் பார்த்து இதமாய் பேசினாள் -

''மன்னிக்கணும் அத்தான்... நீங்க தனக்கு விஷம் வைத்ததாய் நம்பிய... அதாவது நம்ப வைக்கப்பட்ட, கீதாவிற்கு இங்கிருந்த எல்லார் மீதும் எரிச்சல்தான். அவள் நம்பிய, நேசிச்ச ஒரே நபர் பிரதாப். தன் மேல் பாசமாய் இருந்தவனுக்கு தானும் ஏதேனும் செய்வது தான் முறை என்ற கருத்து அவள் பேச்சில் இருந்தது எனக்குப் புரிஞ்சுது - கீதா எதையும் உடைத்துச் சொல்லாமலேயே! தனக்குப் பரிசுகளைத் தந்த பிரதாப்பிற்கு கீதா பிரதியாய் ஏதேனும் தர, செய்ய விரும்பினால்... அது என்னவாயிருக்கும்னு யோசிச்சேன். பிரதாப்பின் கடையில் போய் அவனைப் பார்ப்பதுனு முடிவு செய்து அங்கே போக, அங்கே கட்டட வேலை மும்முரமாய் நடந்துட்டிருந்தது. பெயின்ட் வாங்க அவனும் வெளியே போயிருந்ததாய் தகவல். பல லட்சங்கள் தேவைப்படும் வேலை, செழிப்பாய் நடந்ததால்... அதற்கான பணம் அல்லது லோன் வந்தது எங்கிருந்துனு போலீஸாரை விசாரிக்கக் கேட்டுகிட்டேன்.''

''அது அடுத்த திருப்பமாச்சு. இங்க கடை போட்டால் நல்லாப் போகும்னு இடத்தைக் காட்டி விற்ற கதிரோடு, பழகினதில் ரெண்டு பேருக்கும் தாங்கள் ஒருத்தருக்கு அடுத்தவர் சளைக்காத ரகம்னு தெரிய, ஒட்டிக்கிட்டாங்க. பிரதாப்பின் ஒரிஜினல் பேர் தனபால்...



# 11

கொலையாளி யார் என்பதைக் காவல் துறையினர் இவர்களுக்குத் தெரிவித்து, குற்றவாளியைக் கைதும் செய்து விட்டதாய் தெரிவித்தது ஒரு பெரிய நிம்மதி ஊஎன்றாலும், கடும் இழப்பிலிருந்த விஸ்வநாதன்... ஒன்றன் பின் ஒன்றாய் எம்பியடித்த அதிர்ச்சி அலைகளைத் தாங்கக் கூடாமல் சரிந்து உட்கார்ந்து நெற்றியை நீவியபடி இருந்தார்.

''சூடாய் ஏதும் குடிக்கறீங்களா அத்தான்?''

''தண்ணி போதும்.''

வந்த குவளை நீரை முழுக்க பருகியவர், விட்ட பெருமூச்சிற்குப் பிறகு கதை தொடர்ந்தது.

''பெற்றோரை சிறுவயசிலேயே இழந்த தனபாலை வளர்த்தது அவனுடைய தாய் வழி பாட்டனார். வளர்ந்ததும், ஓரளவு சொத்துள்ள தன் தாத்தாவினுடைய எதுவும் தனக்கு வராது - மாமன்மாருக்குத் தான் போகும் என்று உணர்ந்த தனபாவின் மூளை குறுக்கு வழியில் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. 'இவனைப் படிக்க வைத்து ஆளாக்கினதே பெருசு' என்று சொல்லி தன்னை உதற நினைத்த மாமன்கள் மேலுள்ள காட்டத்தை, வளர்த்த தாத்தாவின் மேல்தான் அவனால் காட்ட முடிந்தது! தூக்க மாத்திரை கலந்த பாலை பெரியவருக்குத் தந்தவன், அரை மயக்கத்தில் சாக இருந்தவரிடம் தான் தயாரிச்ச பொய் உயிலில் கையெழுத்தும் வாங்கிட்டான்.''

''ஆனால் சாட்சிக் கையெழுத்து இல்லாமல் உயில் செல்லுபடி ஆகாதே?''

''ஆமாம் டாக்டர். அந்தப் பொய் கையெழுத்தில் கூட கதிரின் பங்கு இருந்திருக்குது.''

''கடவுளே... ஒரு கொலையாளியை - அதுவும் தன்னை ஆளாக்கின தாத்தாவைக் கொன்றவனை நான் வீட்டிலேற்றி, இங்குள்ள பெண்களோடு சுதந்தரமாய் பழக விட்டிருக்கேனே...'' விஸ்வநாதன் அங்கலாய்த்தார்.

மறுபடி மண் குதிரை உவமானம் மாலினிக்குள் எழும்பியது!

நம்பி கால் வைத்து, மூழ்குவது கொடுமை என்றால் அப்படி ஏமாந்து விழுபவர்களைக் காண்பதும் கூட வேதனையாகத்தான் இருந்தது.

''பெரியவரின் சாவில், அவர் மகன்களுக்கு, அதாவது தனபாலின் மாமன்மாருக்கு சந்தேகந்தான். ஆனால் அதற்குள் உடலை எரிச்சு அஸ்தியையும் கரைச்சாச்சு. உயில் வாசிக்கப்பட்டதும் அவங்க சந்தேகம் பெரிசாயிடுச்சு. ஆனால் தடயம் எதுவுமில்லையே... ஆனா ஒண்ணுங்க - தப்பு செய்தவன் எவனும் தப்பிச்சுட முடியாது. இவங்க குடும்பத்து நாடகத்தக் கவனிச்ச அந்த ஏரியா மருந்து கடைக்காரர் சுதாரிச்சுட்டார். அவர் கடையிலிருந்துதான் மூணு வாரங்களாய் அப்பப்போ, தனபால் தூக்க மாத்திரைகளை வாங்கியிருக்கான் -

'தாத்தா தூக்கமில்லாமல் சிரமப்படறாங்க ஸார்'னுட்டு.''

''டாக்டரின் சீட்டு இல்லாமல் மொத்தமாய் இது போன்ற மருந்துகள் கிடைக்காது. ஆக கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கி சேர்த்தவன் மாத்திரைகளை மொத்தமாய் பிறகு பயன்படுத்தி இருக்கிறான்.''

''மருந்து கடைக்காரரும் முறைப்படி போலீஸிற்கு வந்து இந்தத் தகவலைச் சொல்லலை. ஏன்னா டாக்டரின்



சீட்டு இல்லாமல் எப்படி தூக்க மாத்திரையை ஒரே ஆளுக்கு நாலு தரம் தந்தேன்னு நாங்க அவன் மென்னியைப் பிடிப்போம்ல? ஆனால் பெரியவர் கொலை யானதாய் ஒரு பேச்சு அக்கம் பக்கம் பரவிடுச்சு!''

தன்னைப் பாசங்காட்டி பராமரித்த ஒரே உறவை கொன்ற தனபால் எனும் பிரதாப்பின் கதையை அனை வரும் பீதியோடு கவனித்தார்கள்.

''தாத்தாவின் சொத்தை அதற்குள் விற்றவன், அந்த பணத்தில் இங்கே கடையை எழுப்பிட்டான். சின்ன ஊரில் நிலமும், கட்டிட வேலையும் சல்லிசாய் முடியும்னு அவன் நினைச்சது போலில்லை. இங்கேயும் பாதி வேலை முடியும் முன்னமே கையிருப்புக் காலியாயிடுச்சு.''

''ஒரு நாள் சித்தாள், கொத்தனார் கூலியே இப்போ 500, 600ல்ல ஏறிடுச்சு?''

''ஒரு பாதியில் கடையை நடத்த ஆரம்பித்தவன், வரும் வருமானத்தில் மீதியை கட்டி முடிக்க இருந்த போதுதான் உங்க குடும்பத்தின் பழக்கம் ஏற்பட்டது. முதலில் பயல் சிக்கினது உங்க வீட்டுப் பொண்ணு பிரியாவின் அழகிலதான். அவளைத் தொடர்ந்து உங்க வீட்டிற்கு வந்தவனின் கபட்டு மூளை உங்க வீட்டு நிலவரத்தைக் கணக்கெடுத்திருச்சு. தான் தனிமைப் பட்டதாய் நினைச்ச உங்க மனைவியிடம் பாசங் காட்டறாப்பல ஒரு நாடகம்!''

''வேலி ஓணானை மடியில கட்டிகிட்டேன்'' ஒத்துக் கொண்டார் விஸ்வநாதன்.

''இளகின கீதா, பிரதாப்பிற்கு உதவ தன் நகைகளைத் தந்திருக்கிறாள். அடகு வைத்து, தன் வேலை முடிந்ததும் நகைகளை அவன் மீட்டுத் தந்திடுவான்னு அவ நினைப்பு. ஏமாந்துட்டா.'' - மாலினி விளக்க,

''நகைகளைத் தந்திருப்பாங்கனு எப்படி யூகிச்சே மாலினி?''

''பெண்களிடம் பணமாய் இருக்காது பெரும்பாலும் பொருள்தான் அதுவும் தங்கமதான் - லட்சக் கணக்கில் இருக்கும்.''

ஆக கீதாவின் நகைகள் இங்கே பத்திரமாய் இருக்கு தானு அறிய அத்தானிடம் - ''இனி நகைங்க வீட்டில் இருப்பது பாதுகாப்பில்லை. எடுத்து பாங்க் லாக்கரில் வச்சிடுவோம்னு சொன்னேன். அதன்படி செய்ய முனையவுந்தான் தெரிஞ்சது பெரிய நகைகள் எதுவுமே இங்க இல்லாதது!''

''கெமிக்கல் அறையில் என்னோடு வந்து பேசிய பிர தாப்... அதாவது தனபால் - விஷம் எதுன்னும் கேட்டுத் தெரிஞ்சுகிட்டான். அப்போ அதை ஒரு பாட்டிலில் எடுத்து வைத்திருக்கணும். ஆனா அதை ஏன் முதலில் கொஞ்சமாயும் பிறகு ஒரேயடியாயும் கீதாக்குத் தர ணும்? கொடுமைக்காரப் பயல்...''

வெதும்பினார் விஸ்வநாதன்.

''என்ன அளவு தரன்னு தெரியாது அவனுக்கு. தவிர பழியை உங்க மேல் போடறதும் நோக்கம். சமையல் காரம்மா முன்னிலையில் 'ஐயாதான் சின்னக் குழம்பு பாத்திரத்தைத் திறந்தார்'னு ஏதோ சொல்ல, வேலைக் காரர்களுக்கும் தங்களின் முதலாளியின் மேல் சந்தேகம். அந்நேரம் வீட்டில் பிரியாவின் கல்யாணப் பேச்சும் ஆரம்பிக்க கீதாம்மா,

''எப்ப என் நகைகளைத் திருப்பித் தருவேன்?''னு ஒரு கேள்வியை கேட்டிருக்கக் கூடும். ஆக விஷத்தை அள் ளிக் கலக்கிட்டான். நகை அத்தனையுந்தான் வித்தாச்சே?



ஆனா கதிரைப் பிடிச்சு மொத்தி, மாத்தி மாத்தி ரெண்டு கேடிகளிடமுமிருந்து விஷயத்தைக் கறந்ததில், திருட்டு நகை வியாபாரியும் எங்களிடம் சிக்கிட்டான்.''

''ஒரே குற்றத்தின் மூலம் பல குற்றவாளிங்க சிக்கி யிருக்காங்க.

''ஆக உங்க நகைகளை மீட்டாச்சு ஸார் - ஏதோ எங்களால் முடிஞ்சது'' எழுந்தார் இன்ஸ்பெக்டர். ''கேடிப் பயலுகளுக்கு பல வருஷம் கம்பியும் களியுந்தான்.''

தான் பிரதாப் எதிரே நின்று பேச நேராமல் போனதில் மாலினிக்கு ஒரு திருப்தி. ஆனால் விஸ்வநாதனை விட்டு விடுவதாயில்லை அவள் -

''எனக்கும் கீதாவிற்கும் இன்னுமொரு கஸின் உண்டு அத்தான். பேர் பத்மா. ஸிட்டியிலே ஒரு சிறு பள்ளியை ரொம்ப சிறப்பா நடத்திட்டிருக்கா. விஸ்தாரமான வேறொரு இடமொன்றைத் தேடிட்டு இருக்கா. பயிரிடாத ஒரு பகுதி நிலத்தை அவளிடம் விற்றால், இங்குள்ள சூழல் மாறுவதோடு, உங்க இடம் நல்லபடி பயன்படும் திருப்தி யும் கிடைக்கும்...' என்று மாலினி மேலும் விவரங்களைத் தர,

''இன்ஸ்பெக்டர் ஸார் பார்த்து தகுதியான ஆள்தான்னு இருக் சொல்லிட்டா... நிலம் என் அன்பளிப்பாகவே கட்டும். பள்ளியின் பேரை மட்டும் 'கீதா வித்யாலயா'னு வைக்கணும்.''

''எஸ் ஸார்'' கைகுலுக்கிவிட்டு அதிகாரி விடைபெற, பேச்சு குடும்பங்கள் பற்றிப் போனது -

''பாவம் பிரியா - கொலையாளி பிரதாப்னு தெரிய வந்ததும் வெலவெலத்து அடங்கிட்டா. அந்த

அதிர்ச்சியோடு இங்கே இருக்க வேண்டாம்னு அவ பெற்றவங்களை மகளைத் தங்களோடவே அழைச்சுப் போயாச்சு.''

''தாம்பத்யம்னா சந்தோஷமும் சண்டையும் உண்டு தான். ஆனா கடைசியில் கூட்டிக் கழித்தால் மிஞ்சுவது சந்தோஷமாய் இருக்கணும். எனக்கு வருத்தத்தை மிச்சம் வச்சிட்டுப் போயிட்டாம்மா. அவளும் பாவம். ஒரு மண் குதிரை நம்பி ஏமாந்துட்டா.''

வியப்புடன் விஸ்வநாதனை ஏறிட்டாள் மாலினி -

''உங்க புத்தகத்தை நீங்களே எழுதினால் சிறப்பாய் வரும்னு தோணுது அத்தான். நானும் உதவ, சீக்கிரமே வெளியிட்டுடலாம்.''

''நல்லதும்மா... செய்வோம்.''

அந்த வார இறுதியை அங்கேயே தன் கணவரோடு கழித்த மாலினி - பள்ளி ஆரம்பிக்கும் வேலையாய் பத்மாவையும் வரச் சொல்ல, பண்ணை வீடு தன் பெரும் இழப்பிலிருந்து மீள ஆரம்பித்தது...